படைப்பு
சமூகத்தின் இணைப்பு
ஊற்று-8 | நதி-1 | மே 2025 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## எழுத்தாளர்களுக்கு ஓய்வு என்பது இல்லைதானே..

## மொழிபெயர்ப்பாளர் ஜில்லேள்ள பாலாஜியுடனான நேர்காணல்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று -8 | நதி-1 | மே 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**தேவம் ஆரோன்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- தலையங்கம் ........ ப.4
- எழுத்தாளர்களுக்கு ஓய்வு என்பது இல்லைதானே..
  மொழிபெயர்ப்பாளர் ஜில்லேள்ள பாலாஜியுடனான நேர்காணல் ........ ப.5
- உணர் அன்பின் பதிவு
  கவிஜி ........ ப. 42
- ஆதீண்டுக்குற்றி - அறமும் சான்றும்
  முனைவர் நா.சுலோசனா ........ ப. 46
- பாரதியின் சக்திக்கூத்து
  கவிதா லட்சுமி ........ ப. 52
- கவிதைக்குள் கலந்திருக்கும் கதை
  மு.முருகேஷ். ........ ப. 55
- பெயர்கள் பற்றி ஒரு வீரபாண்டிய கட்டப் பஞ்சாயத்து
  ஆண்டன் பெனி ........ ப. 61

## சிறுகதைகள்


- ஊமை
  - பிறைநுதல் .................................... ப. 10
- வாய்க்கரிசி
  - பெத்தனசுதா அருஞ்சுனைக்குமார்................. ப. 15
- காலத்தின் ஒப்பனைகள்!
  - கவியோவியத்தமிழன் .......................... ப. 20
- அறம்... பொருள்... துன்பம்!
  - பா. ஜெயவேல்................................ ப. 27
- நகுலனின் முதல் நாள்
  - சந்துரு மாணிக்கவாசகம்...................... ப. 35


## கவிதைகள்


- சலீம் கான் (சகா) . .................................ப. 51
- குமார் அம்பாயிரம்.................................... ப. 63





## Facilities

- Capacity 90 - 100 (Persons)
- AC Hall with Audio system
- POP with Profile lights
- Tea / Coffee snacks place
- Projector

**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**
**+91 73388 97788**

# தலையங்கம்

வணக்கம். படைப்பு ‘தகவு’ எண்பத்தைந்தாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

இவ்இதழில் மொழிபெயர்ப்பாளர் ஜில்லேள்ள பாலாஜியுடனான நேர்காணல் இடம்பெற்றுள்ளது. ஜில்லேள்ள பாலாஜி இருபத்து மூன்று ஆண்டுகளாகத் தமிழ்ப் படைப்புகளைத் தெலுங்கு மொழியில் மொழிபெயர்ப்பு செய்துவருகிறார். 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதினை சாகித்ய அகாதமி அமைப்பிலிருந்து பெற்றுள்ளார். மொழிபெயர்ப்புப் பணியோடு தானும் படைப்பிலக்கியங்களை உருவாக்கிவருகிறார்.

படைப்பு குழுமம் வருடந்தோறும் நடத்திவரும் அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு சிறுகதைப் போட்டிக்கான முடிவுகள் சென்ற இதழில் வெளியாகின. ஐந்து சிறுகதைகள் சிறப்புப் பரிசுகள் பெற்றிருந்தன. பிறைநுதலின் ஊமை, பெத்தனசுதா அருஞ்சுனைக்குமாரின் வாய்க்கரிசி, கவியோவியத்தமிழனின் காலத்தின் ஒப்பனைகள்!, பா. ஜெயவேலின் அறம்.. பொருள்.. துன்பம்!, சந்துரு மாணிக்கவாசகத்தின் நகுலனின் முதல் நாள் என்ற அக்கதைகள் இவ்இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பிறந்த பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதில் எப்போதும் நுண் அரசியல் உண்டு. குடும்பம், மொழி, மதம், இனம், சமூகம் என ஏதோவொன்றன் தாக்கம் அதில் இருக்கும். வடமொழி எழுத்துக்களுடன் பெயர் வைக்கப்படும் முறை மிகப் பரவலாகிவிட்டது என்று மொழி சார்ந்து வருத்தப்படும் நேரத்தில் சமூகம் சார்ந்து அதில் உள்ள மாற்றத்தை அடையாளம் காட்டுகிறது எள்ளல் தொனியில் எழுதப்பட்டுள்ள ஆண்டன் பெனியின் கட்டுரை.

மன ஆழத்தின் கொந்தளிப்பாக உருவெடுத்திருந்த ‘எ டேல் ஆஃப் டூ சிஸ்டர்ஸ்’ என்ற திரைப்படம் குறித்த பார்வையினைக் கவிஜி பகிர்ந்திருக்கிறார். பாரதியாரின் சக்திக்கூத்து இரண்டு வகைகளாக உணரப்பட்டு, தனிப்பொருளாகுமோர் கடல் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

ஆடு மாடுகளின் உடலில் ஏற்படும் தினவைப் போக்க சொரிந்துகொள்வதற்காக உயரமான கற்கள் மேய்ச்சல் நிலங்களின் அருகிலும் நீர் நிலை அருகிலும் வைக்கப்பட்டிருந்த ஒரு அறச்செயலை ‘ஆதீண்டு குற்றி’ என்ற கட்டுரை குறிப்பிடுகிறது. சங்க காலத்திலிருந்தே மேற்கொள்ளப்படும் இந்த அறச் செயலுக்கான கல்வெட்டு ஆதாரங்கள், இலக்கிய ஆதாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. கவிஞர் சக்திஜோதியின் கவிப்பயணம் குறித்து விரிவாக ‘கவிதைக்குள் கலந்திருக்கும் கதை’ பகுதியில் எழுதப்பட்டுள்ளது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

– ஆசிரியர்

ஆர்.வி.பதி



# எழுத்தாளர்களுக்கு ஓய்வு என்பது இல்லைதானே..

## மொழிபெயர்ப்பாளர் ஜில்லேள்ள பாலாஜியுடனான நேர்காணல்

தமிழ்மொழியில் வெளியான சிறந்த சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள் முதலான படைப்புகளைத் தெலுங்கு மொழியில் மொழிபெயர்ப்பு செய்து புத்தகமாக வெளியிட்டுவருபவர் ஜில்லேள்ள பாலாஜி. இவர் தமிழில் வெளியான ஜெயகாந்தனின் “ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்” என்ற புதினத்தைத் தெலுங்கு மொழியில் “கல்யாணி” என்ற தலைப்பில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். இந்த மொழிபெயர்ப்புப் பணிக்காக சாகித்ய அகாதமி இவருக்கு 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

தெலுங்கு, தமிழ், ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளை நன்கு அறிந்த ஜில்லேள்ள பாலாஜி தொடர்ச்சியாகக் கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளாகத் தமிழ் மொழியிலிருந்து தெலுங்கு மொழிக்கு இலக்கியங்களை மொழிபெயர்க்கும் பணியினைச் செய்துவருகிறார். இவர் மொழிபெயர்ப்பு மட்டுமின்றிச் சிறுகதை, புதினம் முதலான பல சுய இலக்கியங்களையும் தொடர்ந்து படைத்துவருவதும் குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் “ஜீவிதமோக பயணம்” என்ற புதினத்தை வெளியிட்டுள்ளார்.

தற்போது திருப்பதியில் வசித்துவரும் இவரைச் சந்தித்து உரையாடியபோது தனது இலக்கியப் பணிகள் மற்றும் மொழிபெயர்ப்புப் பணிகளைப் பற்றி நம்முடன் பகிர்ந்துகொண்டார்.

### தங்கள் பூர்வீகமே ஆந்திராதானா?

தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட எனது பூர்வீகம் ஆந்திரா. திருத்தணியில் 01 மே 1961 அன்று பிறந்தேன். எனது தொடக்கக்கல்வியினை, ஒன்றாம்




வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை திருத்தணியில் தெலுங்கு மொழியில் பயின்றேன். அக்காலத்தில் திருத்தணியில் பள்ளிகளில் தெலுங்கு மொழி படிக்கும் வசதி இருந்தது. இங்குதான் எனக்கு முதன்முதலில் தமிழ்மொழியின் மீது ஈடுபாடும் ஆர்வமும் உண்டானது. அரசுப் பணியில் இருந்த தந்தையின் பணியிட மாற்றம் காரணமாக 1968ஆம் ஆண்டு எனது குடும்பம் சித்தூருக்கு இடம் பெயர்ந்தது. எனது திருமணத்திற்குப் பின்னர் 1996ஆம் ஆண்டு முதல் தற்போது வரை திருப்பதியில் வசித்துவருகிறேன்.

**தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட தாங்கள் தமிழை எப்படி படிக்கக் கற்றுக்கொண்டீர்கள்?**

திருத்தணியில் வசித்தபோது தமிழ் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக அருகிலிருந்த நூலகத்திற்குச் சென்று அங்கிருந்த குமுதம், ராணி, ராணிமுத்து, ஆனந்தவிகடன் முதலான வார இதழ்களை வாசிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டேன். தினமும் நூலகத்தில் பல மணி நேரம் செலவிட்டு வார இதழ்களோடு இலக்கிய நூல்களையும் படித்தேன். நான் தமிழைக் கற்க பல தமிழ்த் திரைப்படங்களும் பெரிதும் உதவின.

**மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடக் காரணம் என்ன? எந்த வருடத்தில் இருந்து ஈடுபட்டுவருகிறீர்கள்?**

நான் 1983ஆம் ஆண்டு முதல் தெலுங்கில் சுயமாகக் கதைகளை எழுதத் தொடங்கிவிட்டேன். திருத்தணியில் வசிக்கும் என்னுடைய சகோதரி திருமதி. பரிமளா அவர்கள் திரு. ராஜேஷ்குமார் அவர்களின் தீவிர வாசகியாக இருந்தார். ஒருநாள் அவர் என்னிடம் “நீயும் ராஜேஷ்குமாரைப் போல சஸ்பென்ஸ் நாவல்களை எழுதலாமே” என்று கூறினார். சில மாதங்களுக்குப் பின்னர் அவரே “நன்றாக எழுதும் ஆற்றல் உள்ள நீ ஏன் ராஜேஷ்குமாரின் நாவல்களைத்

தெலுங்கில் மொழிபெயர்க்கக்கூடாது?" என்று கேட்டார். அக்காவின் ஆசையை நிறைவேற்றும்விதமாக ராஜேஷ்குமார் எழுதிய "உன்னை விட்டால் யாருமில்லை" என்ற நாவலை "மஹா ராஜஸ்ரீ மந்திரிகாரு" (Mahaa Raajasri Mantrikaaru) என்ற தலைப்பிலும், "ஒன்றும் ஒன்றும் மூன்று" என்ற நாவலை "1 + 1 = 3" என்ற தலைப்பிலும், "நீல நிற நிழல்கள்" என்ற நாவலை "ஓ வர்ஷம் குரிசிந ராத்திரி" (O Varsham Kurisina Raathri) என்ற தலைப்பிலும் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்தேன். இப்படியாக 2002ஆம் ஆண்டு முதல் எனது மொழிபெயர்ப்புப் பணிகள் துவங்கின.

திருப்பதியில் உள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஒருவரின் நட்பு கிடைத்தது. நான் மொழிபெயர்ப்பு செய்வதில் ஆர்வம் உள்ளவன் என்பதை அவர் தெரிந்துகொண்டு ஜெயகாந்தனின் "ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்" என்ற நாவலை என்னிடம் கொடுத்து அதற்கான அனுமதியையும் வாங்கிக் கொடுத்து என்னை மொழிபெயர்க்குமாறு பணித்தார். இந்த நாவலை நான் மொழிபெயர்க்க, "ஆந்திரஜோதி" என்ற தெலுங்கு நாளிதழில் தினமும் தொடர்ந்து நான்கு மாதங்கள் வெளியானது. இப்படியாகத்தான் எனது தமிழ் தெலுங்கு மொழிபெயர்ப்புப் பணிகள் துவங்கின.

**தாங்கள் சுயமாக எழுதியுள்ள இலக்கியப் படைப்புகளைப் பற்றிக் கூற முடியுமா?**

மொழிபெயர்ப்பு மட்டுமின்றி நான் இதுவரை சுய படைப்புகளாக 153 சிறுகதைகளையும், 121 கவிதைகளையும் பிரசுரித்துள்ளேன். பல சிறுகதைப் போட்டிகளில் கலந்துகொண்டு இதுவரை 19 பரிசுகளை வென்றுள்ளேன். நான் சுயமாக எழுதிய "சிக்கேண்டிக" (Sikkentika), "வோண்து" (Vonthu), "உண்டு நாயனா திஷ்டி தீஸ்தா" (Undu Naayanaa Disti Theesthaa), "பகடாலு பாரிஜாதாலு" (Pagadaalu Paarijaathaaloo), "நிருடு குரிசிந வேன்னல" (Nirudu Kurisina Vennela) முதலான சமூக சிறுகதைத்



தொகுப்புகளும், “மாட்லாடே பக்ஷி” (Maatlaade Pakshi) என்ற சிறுவர்களுக்கான சிறுகதைத் தொகுப்பும், “கவந கதம்பம்” (Kavana Kadhambam) என்ற கவிதைத் தொகுப்பும் வெளியாகியுள்ளன. நான் சமீபத்தில் எழுதிய “ஜீவிதமோக பயணம்” (Jeevithamoka Payanam) என்ற தெலுங்கு நாவல் புத்தகமாக வெளியாகியுள்ளது.

**தமிழிலிருந்து தெலுங்கு மொழிக்குத் தாங்கள் மொழிபெயர்ப்பு செய்துள்ள படைப்புகளைப் பற்றி?**

தமிழிலிருந்து தெலுங்கு மொழிக்கு ஏராளமான இலக்கியங்களை மொழிபெயர்ப்பு செய்துள்ளேன். ராஜேஷ்குமாரிலிருந்து தொடங்கிய எனது மொழிபெயர்ப்புப் பயணம் பின்னர் கல்கி, ஜெயகாந்தன், எஸ்.இராமகிருஷ்ணன், பவா செல்லதுரை, இமையம் என நீண்ட நெடிய பயணத்துடன் தொடர்கிறது.

ஜெயகாந்தனின் சிறுகதைகளை “ஜெயகாந்தன் கதலு” (Jayakanthan Kadhalu) என்ற தலைப்பிலும் “ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்” என்ற நாவலை “கல்யாணி” (Kalyani) என்ற தலைப்பிலும், “கங்கை எங்கே போகிறாள்?” என்ற நாவலை “கங்க எக்கடிகி வெலுதோந்தி?” (Ganga Ekkadiki Veluthondhi?) என்ற தலைப்பிலும், “பாரிசுக்குப் போ” (Paris ku po) நாவலையும் மற்றும் “ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்” நாவலை “ஒக மனிஷி ஒக இல்லு ஒக பிரபஞ்சம்” (Oka Manishi Oka Illu Oka prapancham) என்ற தலைப்பிலும் மொழிபெயர்ப்பு செய்துள்ளேன்.

எஸ்.இராமகிருஷ்ணனின் சிறுகதைத் தொகுப்பினை “நைலு நதி சாட்சிகா” (Nylu Nadhi Saakshigaa) என்ற தலைப்பிலும் யாமம் நாவலை “யாமம்” (Yaamam) என்ற அதே தலைப்பிலும், சஞ்சாரம் நாவலை “சஞ்சாரம்” (Sanchaaram) என்ற அதே தலைப்பிலும் மொழிபெயர்ப்பு செய்துள்ளேன்.

பல எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளை மொழிபெயர்ப்பு செய்து “காலப்பிரவாகம்” (Kaala Pravaaham) மற்றும் “நீள்ள கோடி” என்ற (Neela Kodi) என்ற இரண்டு நூல்களாக வெளியானது. தமிழ்மொழியில் வெளியான பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய தலித் சிறுகதைகளை மொழிபெயர்ப்பு செய்ய அந்த நூலானது “ஜீவ நாடி” (Jeeva Naadi) என்ற தலைப்பில் வெளியானது. “அய்யப்ப தர்ஷனம்” (Ayyappa Darsanam) என்ற ஐய்யப்பனின் சரிதத்தையும் தெலுங்கு மொழியில் மொழிபெயர்ப்பு செய்துள்ளேன்.





பவா செல்லதுரை சிறுகதைகளின் தொகுப்பினை "சிதிலம்" (Sidhilam) என்ற தலைப்பிலும், பவா செல்லதுரையின் "மெய்ப்பர்கள்" கட்டுரைத் தொகுப்பினை "காபருலு" (Kaaparulu) என்ற தலைப்பிலும், இயக்குநர் சீனு இராமசாமியின் "புகார் பெட்டியின் மீது படுத்து உறங்கும் பூனை" என்ற கவிதைத் தொகுப்பினை "பிர்யாது பேட்டேபய் நிதுரிண்சே பில்லி" (Phiryaadu Pettepai Nidrinche Pilli) என்ற தலைப்பிலும் மொழிபெயர்ப்பு செய்துள்ளேன்.

பல தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளை மொழிபெயர்ப்பு செய்து, அதில் இடம்பெற்ற சாரோன் எழுதிய ஒரு கதையான "அகவெளி வண்ணங்கள்" என்ற சிறுகதையின் தலைப்பினை எனது மொழிபெயர்ப்புத் தொகுப்பிற்கு வைத்து "பஹிர்கதம் காணி ரங்குலு" (Bahirgatham Kaani Rangulu) என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளேன்.

கல்கியின் "அலைஓசை"யினை "அலல சவ்வடி" (Alala Savvadi) என்ற தலைப்பிலும், இமையம் எழுதிய "செல்லாத பணம்" என்ற நாவலை "செல்லனி டப்பு" (Chellani Dabbu) என்ற தலைப்பிலும், நல்லிகுப்புசாமி செட்டியாரின் "வால்மீகி அறம்" என்ற நூலினை "வால்மீகி தர்மம்" (Vaalmeeki Dharmam) என்ற தலைப்பிலும் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்துள்ளேன்.

**இதுவரை தாங்கள் இலக்கியப் பணிகளுக்காகப் பெற்றுள்ள விருதுகள் குறித்துக் கூறுங்களேன்..**

எனது சுய படைப்புகளுக்காக "குருஜாட கதா புரஸ்காரம்", "குப்பம் ரெட்டேம்மா சாஹிதி புரஸ்காரம்","தெலுங்கு பாஷா விகாச புரஸ்காரம்", "குரு தேவோ பவ புரஸ்காரம்", "யுகாதி விசிஷ்ட புரஸ்காரம்", "ஸ்ரீமதி காமாட்சி பாய்" மற்றும் "ஸ்ரீ நாராயண ராவ் சாகித்ய புரஸ்காரம்" மற்றும் "விஸ்வஸ்ரீ சாஹிதி சமாக்கியா" முதலான பல விருதுகளைப் பெற்றுள்ளேன்.

சிறந்த மொழிபெயர்ப்புக்காக 2010ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருது, 2010ஆம் ஆண்டில் "நல்லி திசை எட்டும் விருது", 2023ஆம் ஆண்டில் "கே.எஸ்.மொழிபெயர்ப்பு விருது" முதலான உயரிய விருதுகளைப் பெற்றுள்ளேன்.

**இலக்கியமே தங்கள் முழுநேரப் பணியா ?**

இல்லை. ஒரு தனியார் பள்ளியில் தெலுங்கு மற்றும் சமஸ்கிருத ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது முழு நேர எழுத்தாளராகப் பணியாற்றுகிறேன். எழுத்தாளர்களுக்கு ஓய்வு என்பது இல்லைதானே..

அம்மையார் ஹைறுநான்பீவி
நினைவு சிறுகதைப்
பரிசுப்போட்டி 2025

**சிறப்புப் பரிசு
பெற்ற சிறுகதை**


படைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநான்பீவி நினைவு
சிறுகதைப் பரிசுப்போட்டியில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி பிறைநுதல்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17- 03 - 2025
நாள்




# உளமை

ஓவியம் : அழ.ராஜினிகாந்தன்

நுணாப் பழங்களை நீங்கள் சாப்பிட்டு இருக்கிறீர்களா? தெற்கில் அதனை மஞ்சணத்திப் பழம் என்றழைப்பார்கள். எனக்கு அது மிகவும் விருப்பமான பழம். அவ்வையார் முருகனின் 'சுட்ட பழம் சுடாத பழம்' கதையை நான் மிகவும் புரிந்துகொண்டது இந்த நுணாப் பழம் மற்றும் நுணா மரங்களை உருவகித்துத்தான். எமது ஊரின் ஒடையோரங்களிலும் வரப்போரங்களிலும் தரிசு நிலங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் இந்த நுணா மரங்களின் பூக்கள் மல்லிகையை ஒத்திருக்கும். நல்ல நறுமணம் இருக்கும். ஆனால் மல்லிகையையொத்த மணம் இராது. காய்கள் பச்சை நிறத்திலும் பழங்கள் கருமை நிறத்திலும் இன்னதுதான் வடிவமென்று சொல்லமுடியாமல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவில் இருக்கும். சுவை இனிப்பு, துவர்ப்பு கலந்து கொஞ்சம்போல் தூரத்துப் புளிப்பாகவும் இருக்கும். சாப்பிட்டவுடன் கொஞ்சம்போல் மேலண்ணத்திலும் நாவிலும் மெலிதான அரிப்பு தோன்றும். பழங்களைச் சுவைக்கையில் விதைகள் வாய் முழுவதும் நிரம்பி கொஞ்சம் போல் இம்சை கொடுக்குமாதலால் எனக்கு உலர் நுணாப்பழங்கள்தான் பிடிக்கும். காரணம் அதில் புளிப்பு குறைந்துபோய் இனிப்பும் துவர்ப்பும் மட்டுமே தங்கியிருக்கும். சாப்பிட்டவுடன் வரும் அரிப்பு இருக்காது. மேலும் கற்கண்டை வாயினுள் அடக்கிக்கொள்வதைப்போல் உலர் நுணாப்பழங்களையும் அடக்கிக்கொண்டு நெடுநேரம் சுவைக்க முடியும். முக்கியமாக உலர் பழங்களில் விதைகள் கொஞ்சமே ஒட்டிக்கொண்டிருக்கும். சிறு வயதிலிருந்து பதின்ம வயதுகள் வரை எங்கே கண்டாலும் நான் இந்தப் பழங்களை விடுவதில்லை. குறைந்தபட்சம் இரட்டை இலக்கங்களில்

பழங்களைப் பறித்துத் தின்றுவிடுவேன். கீழே விழும் பழங்கள் மண்ணோடு மண்ணாக ஒட்டிப்போய்விடுவதால் அவற்றை நீங்கள் எடுத்துத் தின்ன இயலாது. கிளைகளை வளைத்தோ அல்லது மரத்தில் ஏறியோதான் பறித்துத் தின்ன இயலும். அதிலும் உலர்பழங்கள் காம்பிலேயே தங்கிவிடும் அதிசயம் இந்த மரத்திலும் உண்டு.

ஒருமுறை அப்படித்தான். நான் ஆலடியான் கோயிலருகில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தபொழுது ஓடைக்கு மறுகரையில் யார் கண்ணிற்கும் சட்டெனப் புலப்படாத நுணா மரத்தைக் கண்டேன். அதில் ஏகப்பட்ட பழங்களும் உலர்பழங்களும் தென்பட, ஆர்வ மிகுதியில் ஓடிப்போய் மரத்தில் சரசரவென ஏற ஆரம்பித்தேன். என்னுடன் ஆடு மேய்க்கும் சோனிக்குப் பேச வராது. ஆனால் அதிபுத்திசாலி. ஆடுகளின் ஒவ்வொரு அசைவிற்கும் அவனுக்கு அர்த்தம் புரியும். எங்கே கௌதாரிகள் அண்டும், எங்கிருந்து முயல் கிளம்பும் என்பதிலிருந்து எப்பொழுது மழை வரும், கோடைக்காலத்தில் எங்கே தண்ணீர்க்கிழங்குகள் கிடைக்கும் என்பதுவரை அவனுக்கு எல்லாம் தெரியும். மேலும் ஆடுகள் வளர்ப்புப்பற்றிச் சகலமும் அவனுக்கு அத்துப்படி.

நான் மரத்தில் ஏறுவதைச் சிரித்தவாறே பார்த்துக்கொண்டிருந்தவன் திடீரென்று 'ஓ'வென்று கத்தியவாறே கையை ஆட்டி சைகையால் ஏதோ சொன்னான். ஆனால் எனக்கு எதுவுமே விளங்கவில்லை. அவன் மீண்டும் மீண்டும் மேலே கையைக் காட்டி சைகையால் ஏதோ உணர்த்த முயன்றான். நான் கொஞ்சம் அண்ணாந்து பார்த்தேன். உச்சி வெயில் வேளையாதலால் எதுவும் எனக்குப் பிடிபடவில்லை. எனக்கு மேலாக இருந்த உச்சிக் கிளைகளனைத்தும் உச்சிவெயிலில் வர்ணங்களில்லாக் கோட்டுருவங்களாகத் தெரிந்தன.

அவன் வேகமாக அளக்குத் தடியோடு ஓடிவந்தான். கீழிருந்தவாறே அளக்குத் தடியை உயர்த்தி எனது தலைக்கு மேலாக இருந்த சிறு கிளையை அறுத்துக் கீழே கிடாசினான். சொத்தென்று அந்தக் கிளை கீழே விழுந்தது. நான் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே விழுந்த கிளையிலிருந்து ஒரு பாம்பொன்று சரசரத்துக் கிளம்பியது. அவ்வளவுதான். எனக்குக் கை காலெல்லாம் உதறலெடுக்க அவசர அவசரமாகக் கீழிறங்கினேன். சோனி மிக இலாவகமாக அளக்குத் தடியினாலேயே அந்தப் பாம்பினை எடுத்துகொண்டுபோய்க் கூப்பிடு தொலைவிலிருந்த வெள்ளிமலை அடிவாரப் புதருக்குள் விட்டுவிட்டு வந்தான். வந்தவன் அந்தப் பாம்பு கொம்பேறி மூக்கன் வகையறா என்றும் கொஞ்சம் போல் தான் விஷம் இருக்குமாதலால் என்னைப் பயப்பட வேண்டாம் என்றும் சைகையில் உணர்த்தினான்.

அன்று நான் மிகவும் பயந்து போயிருந்தேன். வழக்கமாக ஆலமர விழுதுகளில் அதீத உற்சாகத்துடன் ஊஞ்சலாடும் நான், அன்றைக்கு அனைத்து விழுதுகளும் பாம்புக்கூட்டங்களாகவே தெரிந்ததால் ஊஞ்சலாடுவதைத் தவிர்த்துவிட்டேன். எனினும் மனதில் ஏன் சோனிக்குப் பேச வரவில்லை? அவனுக்கு மட்டும் பேசத் தெரிந்திருந்தால் முன்பே அவன் பாம்பைப் பற்றிச் சொல்லியிருப்பான். தானும் உடனடியாக இறங்கியிருக்கலாம் அல்லவா? என்றெல்லாம் சிந்தித்தவாறிருந்தேன்.

சோனிக்கு வாய்பேச வராததால்தானே அவன் சொல்ல வந்தது எனக்குப் புரியவில்லை. 'ஆறறிவு படைத்த நமக்கே இந்த நிலையென்றால் ஆறறிவுக்கும் கீழேயுள்ள மிருகங்கள் எல்லாம் எவ்வளவு கஷ்டப்படும்?' எண்ணியெண்ணி அன்றைக்கு இரவு முழுவதும் உறக்கம் தொலைத்து வெறுமனே சிந்தித்தவாறிருந்தேன். அடுத்த நாள் பேச்சுவாக்கில் கங்காணி (எப்பொழுதோ கண்டியின் தேயிலைத் தோட்டங்களில் வேலை பார்த்தவராம். அதனால் இந்தப் பெயர். இன்னமும் கருப்பு

ஜூலையில் காணாமல் போன தனது தம்பி மற்றும் தம்பியின் குடும்பத்தவர்களைப் பற்றிய நினைவுகளிலேயே வாழ்பவர்) பெரியப்பாவிடம் இதைப் பற்றிக் கேட்க அவர் உரக்கச் சிரித்தார்.

"தம்பி, நீ நெனைக்கிறமாதிரி பிராணிகளெல்லாம் கஷ்டப்படுறதில்லை. அதததுங்களுக்கு என்ன தேவையோ அதை அத்தனையும் ஆண்டவன் கொடுத்துருக்கான். ஆனால் மனுஷங்களுக்குத்தான் தனக்கு என்ன வேணுங்குறதிலயும் எவ்வளவு வேணுங்குறதுலயும் இன்னமும் தெளிவில்லாம இருக்கு. உண்மைய சொன்னா பிராணிகளெல்லாம் நம்மளவிடவும் தெளிவா தன்னோட சுற்றத்தையும் இந்த இயற்கையையும் ரொம்ப நல்லா புரிஞ்சுவச்சிருக்குங்க. தனக்கு யாரு எதிரிங்குறது நல்லாவே தெரியும். அதிலயும் நிரந்தர எதிரிங்கிறது கெடையாது. பசிச்சு வர்ற, தன்னை வேட்டையாட வர்ற மிருகங்கள்கிட்டயிருந்து தன்னைக் காப்பாத்திக்க தப்பியோடுமே தவிர நிரந்தர எதிரியா எந்த மிருகத்தையும் எந்த மிருகமும் நினைக்குறதுயில்ல. அதே நேரத்துல வேட்டையாடுற எந்த மிருகமும் பசிக்காக வேட்டையாடுமே தவிர, தன்னோட கவுரவத்துக்காகவோ தான்தான் பெரியவன்றதுக்காகவோ வேட்டையாடுறதுல்ல. பசியில்லாதப்போ சிங்கத்துக்குப் பக்கத்துல புள்ளிமான் சாதாரணமா மேயும். காரணம் இந்த மிருகங்களுக்கு எப்பவுமே தன்னோட தேவைகள் என்னன்றதும் தன்னைச் சுத்தி என்ன இருக்குங்குறதும் நல்லாவே தெரியும்.

உதாரணமா சோனிக்குப் பேச வரல. ஆனா அவனுக்கு இந்த ஆடுகளப் பத்தியும் நம்ம மண்ணப் பத்தியும் என்னயவிடவும் நல்லாத் தெரியும். அவன் சொல்ற நேரத்துல ஆடுங்க குட்டிய ஈனுதுங்க. அறுவது வயசாச்சி ஆனாலும் அவனளவுக்கு நேக்கா எனக்குக்கூட தல திரும்பியிருக்குற குட்டிய ஆட்டோட வயித்துலருந்து வெளில இழுக்க முடியாது. அவன் ஆடுங்களப் பொறுப்பெடுத்ததுக்கு அப்புறம் இத்தன வருஷத்துல ஒரு ஆடுகூட செத்தது இல்ல. மூணாம் வருஷம் ஆடுங்களுக்கெல்லாம் கால் வெஷாதி வந்தப்போ ஒன்னோட என்னோட ஆடுங்களெல்லாம் செத்துதே. அவனோடது ஏன் சாவுல? எல்லாருக்கும் மழை காலத்துல மழை வரும்னு தெரியும். ஆனா அவனுக்கு அந்த வருஷம் மழை அதிகமா வரும்னு தெரிஞ்சி அவனோட பட்டிய ரெண்டடிக்கு உசத்துனதும் இல்லாம கூரையையும் நல்லா நீட்டி சாயமானமா வச்சி ஒரு துளி மழைத்தண்ணிகூட உள்ள வராதமாரிக் கட்டிக்கிட்டான். அவன் கட்டும்போது ஊரே சிரிச்சிச்சி. அவுங்கப்பன் கூட இவன 'ஊமைக்கு கிறுக்குப் புடிச்சிருக்கு'ன்னு சொல்லிக்கிட்டுத் திரிஞ்சான். ஆனா என்னாச்சி? இவன கிறுக்கன்னு சொன்ன அத்தனை பயலுவளும் கிறுக்குப்புடிச்சுத் திரிஞ்சதுதான் மிச்சம். உண்மைய சொன்னா, இது எல்லாருக்கும் இருக்கு. மனுஷனாலயும் அதாவது நம்மளாலேயும் இந்த மண்ணையும் காத்தையும் பிராணிங்க மாறியே, இல்லனா நம்ம சோனி மாறியே புரிஞ்சிக்க முடியும். ஆனா இந்த 'பாஷை'ன்ற ஒரு விஷயம் இந்த உணர்வையே மழுங்கடிச்சிருச்சி. ஆண்டவன் இயல்பாவே நமக்குக் கொடுத்ததைத் தொலைச்சிட்டு நாம கண்டுபிடிச்சதை வச்சிக்கிட்டுச் சரியா இருக்கிற அவனைப் பார்த்து 'ஊமை, ஊனம்'ன்றோம்.

எனக்குத் தெரிஞ்சி நாம பேசுறது இயற்கைக்கு எதிரானதில்ல. ஆனா அதுல விதவிதமா பாஷைகளை உருவாக்கி இருக்கோம்ப்பாரு அது இயற்கைக்கு எதிரானது. ஏன்னா இத்தனை பாஷைங்க இல்லன்னா உலகம் முழுக்க மனுஷன் இந்த மிருகங்களைப் போல ஒரே மாதிரிதான் சைகையில் பேசியிருந்திருப்பான். பாஷையினால மனுஷன் இழந்த நுண்ணுணர்வுகளெல்லாம் அப்படியே இருந்துருக்கும். அப்ப இவ்வளவு குழப்பம் இருந்துருக்காது. உனக்கும் இந்த சந்தேகம் வந்துருக்காது," என்றவர், சிறிது நேரம் கழித்து "உண்மையில சோனிக்கு இருக்கிறது ஊனம் கிடையாது. நமக்குத்தான் பாஷைங்குற ஊனம் உண்டு," என்றார்.

அப்பொழுது கொஞ்சம்போல் புரிந்தாலும் பேசமுடியாமல் இருப்பதைவிட பேசத்தெரிவது எப்படி ஊனமாகும் என்றபடி சிந்தித்தவாறிருந்தேன். ஆனால் அவரிடம் என்னால் எதுவும் எதிர்த்து வாதிட முடியவில்லை.

பொதுவாக வார இறுதி விடுமுறை நாட்களிலும், காலாண்டு, அரையாண்டு மற்றும் கோடை விடுமுறை நாட்களிலும் ஆடு மேய்க்கச் செல்லும் நான், தந்தையின் இறப்பிற்குப் பிறகு ஆடுகள் அனைத்தும் விற்கப்பட்டுவிட்டதனால் அதன் பிறகு ஆடு மேய்க்கப் போகவே இல்லை. பத்தாம் வகுப்பிற்குப் பிறகு விடுதியில் சேர்ந்ததனால் அதன் பிறகு சோனிக்கும் எனக்குமான தொடர்புகளும்கூட அறுந்து போனது.

கடந்த வருடம் ஊர்த்திருவிழாவிற்குக் குடும்பத்தோடு சென்றிருந்தேன். சில பதின்மங்களுக்குப் பிறகான திருவிழா என்பதால் நான் கண்டிப்பாகச் செல்ல வேண்டியிருந்தது. அதே ஆலடியான் கோயில். ஓடையில் நீரோட்டம் இல்லையென்றாலும் சிறிய தடுப்பணையின் உதவியால் கோயில் நீள அளவிற்கு நீர் தேங்கியிருந்தது. மனதில் பதின்மப் பருவத்தின் உற்சாகம் தொற்றிக்கொள்ள, ஒன்றரை வயதேயான எனது மகளைக் கையில் வைத்தபடியே கோயிலின் சுற்றுப்புறங்களை வளைய வந்தேன். ஆலமரத்தின் விழுதுகளை ஒற்றைக்கையால் பிடித்துக்கொண்டு ஊஞ் சலாடினேன். மற்றொரு கையில் எனது மகள். எனது மகள் பூப்போல மலர்ந்து சிரித்தாள். மனைவி வந்து வெடியென வெடித்தாள். அவளுக்கு மகளை நான் தவற விட்டுவிடுவேனோ என்ற பயம். அவள் வெடித்த வெடியில் கொஞ்சம்போல் பயம் என்னையும் தொற்றிக்கொள்ள ஊஞ்சலாடுவதை விட்டுவிட்டு ஊஞ் சலுக்காக மறுபடியும் அடம்பிடிக்கும் மகளைத் தேற்ற ஓடை நீரில் நடந்து மறுகரைக்கு வந்து அவளுக்கு விளையாட்டு காட்டிக்கொண்டிருந்தேன்.

ஓடை நீரில் நடந்து வருகையில் அள்ளித்தெளித்த குளிர்ந்த நீரிலேயே அழுகையை நிறுத்திவிட்டு அவள் மீண்டும் குதூகலிக்கத் தொடங்கியிருந்தாள்.

ஒரு காலத்தில் செழித்திருந்த வெள்ளிமலை உடைக்கப்பட்டு, கல் குவாரியாக முன்னேற்றம்( !) கண்டு அருகே செல்ல முடியாத அளவிற்குப் புழுதியை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அந்த நுணா மரத்தைப் பார்த்தேன். அது அந்த வருடத்தில்தான் பூத்துக் காய்த்திருக்க வேண்டும். மரமும் அல்லாமல் செடியும் அல்லாமல் அதிகபட்சமாக ஐந்தடி உயரம்தான் இருந்தது. அதில் ஒன்றிரண்டு பழங்களும் நான்கைந்து உலர்பழங்களும் இருந்தன. ஆர்வ மிகுதியால் இரண்டு உலர் பழங்களைப் பறித்து வாயிலிட்டுச் சுவைத்தேன். கையிலிருந்த மகளுக்குப் பழம் ஒன்றைப் பறித்துக் கொஞ்சம் போல் சாறை மட்டும் அவளின் நாவினில் பிழிந்துவிட்டேன். முதலில் முகம் சுழித்தவள் பின்பு அதனை ஒருவாறு ஏற்றுக்கொண்டுவிட்டாள். மீண்டும் ஓரிரு பழங்களை அவளுக்குச் சுவைக்கக் கொடுத்தேன். ரோஜாப்பூவெனச் சிவந்திருந்த அவளின் நாக்கில் கொஞ் சம்போல் நுணாப்பழங்களின் கரும் மேகங்கள் படிந்ததைக் கண்டேன்.

திருவிழா முடிந்த கையோடு மகள் மட்டும் தனது தாத்தா அம்மாச்சியோடு எனது மனைவியின் ஊருக்குச் சென்றுவிட, இரண்டு நாட்கள் கழித்துத்தான் நானும் மனைவியும் அவர்களின் கிராமத்துக்குச் சென்றோம். நாங்கள் சென்றபொழுது மெலிதாக இருட்டியிருந்தது. வீடே அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. எனது மாமனார் எனது மகளை இறுகப் பிடித்திருக்க அவள் கொல்லைப்புறம் நோக்கிக் கத்தியபடியிருந்தாள். நான் ஓடிச் சென்று அவளைக் கையிலேந்திக்கொண்டேன். என்னைக் கண்டதும் அவளின் அழுகை கொஞ்சமாகக் குறைந்தது. நான் எனது மாமனாரிடம் விசாரித்தேன்.

"என்னாச்சி மாமா? ஏன் அழுவுறா?"

"என்னன்னு தெரில தம்பி. பின்னாடி முள்ளுவேலியக் காட்டிகிட்டே பாயுது. எனக்குப் பயம். முள்ளு ஏதாவது குத்துனா என்ன பண்றது? அதான் தூக்கிட்டு வந்துட்டேன்."

நான் அவளைத் தூக்கிக்கொண்டு கொல்லைப்புறம் சென்றேன். அவளிடம் கேட்டேன்.

"இங்க என்னம்மா பாத்த. என்ன வேணும்?"

அவள் கையைக் காட்டிய இடத்தில் முள்வேலியைத் தவிர வேறொன்றும் இருளில் தெரியவில்லை. எனவே அவளின் அழுகையை மெதுவாக மடைமாற்றிச் சமாதானப்படுத்தி அழைத்து வந்து சாப்பிட வைத்தோம். எனது மாமியார் கொஞ்சம் போல் விபூதி கொண்டுவந்து பூசிவிட்டார். எனது மகள் எதையோ கண்டு பயந்திருக்கிறாள் என்பது அவரின் எண்ணம். இறந்துபோன முன்னோர்கள் பிள்ளைகளின் கண்களுக்குத் தெரிவார்கள் என்று அவர்கள் சொன்னதை நான் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. இருப்பினும் மகளை உறங்கவைத்துவிட்டு மீண்டும் ஒருமுறை கொல்லைப்புறம் சென்று மிகக் கவனமாகச் சில நிமிடங்கள் ஆராய்ந்தேன். இருளில் ஒன்றுமே எனக்குப் புலப்படவில்லை. வந்து மகளருகே படுத்தவன் உறக்கம் வராமல் நெடுநேரம் சிந்தித்தவாறே படுத்திருந்தேன். ஏனோ சோனி ஞாபக அடுக்கிலிருந்து மீண்டும் மீண்டும் எழுந்து வந்தான்.

கால ஓட்டத்தில் மேய்ச்சல் நிலங்கள் அருகிப்போக, ஆடுகளை விற்றுவிட்டுச் சென்னைக்குக் கூலிவேலைக்காகச் சென்ற சோனி அதன்பிறகு ஊருக்கு வருவதேயில்லை. சமீபத்தில் அவனை ஏதோ ஒரு உணவகத்தில் மேசை துடைப்பவனாகப் பார்த்ததாக அண்ணன் சொன்னபொழுது எனக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது. தனது மனதில் உள்ளதை விளக்கிச் சொல்லும் திறன் வரும்வரை அனைவருமே ஊமைகள்தான் போலும் என்றெண்ணியவாறே இருந்தவன் எனக்கே தெரியாமல் அதிகாலையில் உறங்கிப்போனேன்.

மாமியார் வீட்டுச் செல்ல மருமகன் என்பதால் விடிந்து நெடுநேரம் வரை உறங்கியவன் என் மீது புரண்டு விளையாடும் பிஞ்சு உடலின் உணர்கையால் விழித்தெழுந்தேன். இலவம் பஞ்சு உதடுகளால் என் முகமெங்கும் முத்தமழை பொழிந்தவள் என்னை எழுப்பித் தனது பிஞ்சுக்கரங்களால் கொல்லைப்புறத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கே சென்றவுடன் அவளைத் தூக்கிக்கொள்ளச் சொல்லி இரு கரங்களையும் விரித்து உயர்த்தினாள். வாரி எடுத்துக்கொண்டவன் மென்மேலும் அவளுக்கு முத்தங்களைக் கொடுத்துக்கொண்டே,

"என்னம்மா என்ன வேணும்? எதுக்கு இங்க கூட்டிட்டு வந்துருக்க?" என்று கேட்டேன்.

அவள் எதுவும் பேசாமல் தனது பிஞ்சுக்கரங்களை முள் வேலியை நோக்கிக் காட்டினாள். எனக்கு ஒன்றும்புரியாமல்,

"அது முள்ளு வேலிடா செல்லம். அங்கெல்லாம் போகக்கூடாது. முள்ளு குத்திடும்" என்றேன்.

அவள் மீண்டும் தலையை ஆட்டி நான் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைப்போல் மறுப்பு தெரிவிக்கவே, அவளை மிகக் கவனமாக முள் வேலியினருகில் தூக்கிச் சென்றேன்.

"ம். இப்ப காட்டுடா. என்ன வேணும்?"

இப்பொழுது அவள் காட்டுவது இன்னதென்று எனக்கு விளங்கியது. அது ஒரு சிறிய நுணா மரம். முள்வேலியின் நடுவே வெறும் நான்கடிக்கு வளர்ந்திருந்தது. அதில் கொஞ்சம்போல் பழங்களும் உலர்பழங்களும் இருந்தன.

கங்காணி பெரியப்பா சொன்னது முழுவதும் புரிந்ததுபோல் இருந்தது எனக்கு இப்பொழுது.

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

அம்மையார் ஹைறுநான்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டி 2025

**சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை**


படைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநான்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற படைப்பாளி பெத்தனசுதா அருஞ்சுனைக்குமார் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17-03-2025

பெத்தனசுதா அருஞ்சுனைக்குமார்



# வாய்க்கரிசி

அரிசி இருந்த அந்தப் பாத்திரத்தினை எடுத்து எடுத்துப் பார்த்தால் மட்டும் அதில் அரிசி நிரம்பிவிடுமா என்ன? அப்படித்தான் இருந்தது அந்தக் குடும்பத்தின் நிலை. தலைவன் இல்லாத வீடு அது. தலைவிதான் தடுமாறாமல் தடம் மாறாமல் தன்னையும் தனது இரு குழந்தைகளையும் காத்துவருகின்றாள். அவள் பெயர் அன்னம்.

கடந்த ஒரு வாரமாக மழை விடாமல் பெய்துகொண்டிருந்ததால் அவள் இதுவரை செய்துகொண்டிருந்த கட்டட வேலைக்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே இருந்தாள். வேறு எந்த வேலைக்குமே செல்ல முடியாதபடி மழை முடக்கிப் போட்டிருந்தது.

அன்றாடம் வாங்கும் கூலியால் மட்டுமே அவள் குடும்பத்தில் அடுப்பெரியும். இன்று ஒரு வாரங் கடந்த நிலையில் அடுப்பிற்குப் பதில் வயிறுதான் எரிந்துகொண்டிருந்தது.

இருந்ததெல்லாம் நேற்றோடு காலியாகியிருந்த நிலையில் இன்று என்ன செய்வதென்றே தெரியாத நிலை. இரண்டு நாட்களாக குழந்தைகளுக்கு மட்டுமே சமைத்துத் தந்தவள் பட்டினியாகத்தான் இருந்தாள்.

இன்று கண்ணைக் கட்டியது போல் இருந்தது. என்ன செய்ய ஒன்றும் புரியவில்லை. மழை இன்னும் லேசாக தூறிக்கொண்டுதான் இருந்தது. எப்படியும் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் ஆகும் என்று முன்தினம்தான் மேஸ்திரி சொல்லியிருந்ததாகப் பக்கத்து வீட்டு வள்ளி சொல்லியிருந்தாள்.

அந்தப் பகுதி முழுக்க கட்டட வேலை செய்யும் ஆட்கள்தான் வசிக்கின்றனர். எல்லாருக்குமே சிரமமான வாழ்க்கை முறைதான். அவள் மட்டும் என்றால் கூட கொஞ்சம் சமாளிக்க முடியும். குழந்தைகள் இரண்டையும் பட்டினியாய்ப் பார்க்க மனம் ஒப்பவில்லை.

என்ன செய்வது யாரிடமும் கடன் வாங்கவும் முடியாது. அப்படியான ஒரு நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். மளிகைக் கடையில் கூட பாக்கி வைத்திருந்தாள்

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

அன்னம்.. இப்போது போய்க் கேட்கவும் முடியாது.

அப்போதுதான் அவளுக்குப் பக்கத்தில் இரு வீடு தள்ளியிருந்த வேணி நினைவுக்கு வந்தாள். உடனே முகம் மாறியது.. வேணியின் வாழ்க்கை முறை வேறு.

இருந்தாலும் வேறு வழியில்லை... அவளிடம் கேட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் தலையில் ஒரு துண்டினை எடுத்துப் போர்த்திக்கொண்டு சென்றாள்.

அந்த வீட்டுக்குச் செல்லுவதற்கு முன்பே அவளுக்கு உடல் கூசியது. ஆனாலும் கடனாகத்தானே, விரைவில் திருப்பிக் கொடுத்துவிடலாம் என நினைத்து நடந்தாள். வாசல் அருகே வரும்போதே உள்ளிருந்து பேச்சுக்குரல் கேட்டது.

"என்ன வேணி? நான் சொன்னது என்னாச்சு? அந்த அன்னத்தை எப்படியாவது மடக்கி என்கிட்ட அனுப்பி வைப்பன்னு பார்த்தால் நீயென்டான்னா அதைப் பத்தின நினைப்பே இல்லாமல் இருக்க.." சின்னனின் குரல் கேட்கவும் அவளது நடை நின்று போனது. அவளைத்தான் சொல்கிறான். அவன் பார்வை படுவதை அடிக்கடி அவளும் கவனித்திருக்கிறாளே..

"இங்க பாரு சின்னா.. நான்தான் சொன்னேன்ல, கூடிய சீக்கிரமே அவ என்னைத் தேடி வருவா. உனக்குத் தகவல் சொல்லுறேன்னு. அதுக்குள்ள நீ ஏன் அடிக்கடி வந்து தொல்லை பண்ணுற. இந்த ஒருவாரமா அவ வேலைக்கே போகலை. கண்டிப்பா அவ என்னைத் தேடி வந்துதான் ஆகணும். அதுக்குள்ள அவசரப்பட்டால் எப்படி?" வேணி பதில் சொன்னாள்.

"என்ன பண்ணுறது. அந்த அன்னத்தைப் பார்த்ததுல இருந்து அப்படியிருக்கே.. அவ எப்படா என்கிட்ட வருவான்னு தோணுது. அவ மட்டும் சரின்னு சொன்னா நான் ஏன் உன்கிட்ட கெஞ்சிட்டு இருக்கப் போறேன்.. புருஷன் இல்லாத பொம்பளை அப்படி இப்படி இருந்து நாலு காசு பார்ப்போம்னு இல்லாமல் கண்ணியம் கட்டுப்பாடுன்னு வாழ்ந்து என்னத்த சாதிக்கப் போகுது. இப்போ பாரு ஒரு வாரமா பட்டினி கிடந்ததுதான் மிச்சம். அவ மட்டும் லேசா கண் காமிச்சாலே போதும் எப்படி வாழலாம் தெரியுமா? அதெல்லாம் அவளுக்கு எங்கத் தெரியப் போகுது.." பெருமூச்சு விட்டவன் அவளது அங்கங்களின் அளவினை நினைத்துக்கொண்டான் எப்போதும் போல.

வெளியே நின்றிருந்தவளுக்கு உடல் கூசிப் போனது. கேட்கக் கூடாதது எல்லாம் கேட்டுவிட்டதால் கண்கள் வலியில் கலங்கத் தொடங்கின. கணவன் இல்லாமல் கண்ணியத்தோடு வாழ நினைப்பது நகைப்புக்கு உரியது போலல்லவா இவர்கள் பேசுகிறார்கள்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என ஐயன் சொல்லியதை நினைத்துப் பார்த்தாள் அன்னம்.

பசியாலே செத்துப் போனாலும் பரவாயில்லை ஒழுக்கம்தான் உயிர். அதை சமரசம் செய்து வாழ்வதற்கு, பெத்த இரண்டு புள்ளைங்களையும் கொன்றுவிட்டுத் தானும் இறப்பதே மேலானது என்னும் முடிவுக்கு வந்தவள் வீட்டிற்கு வந்தாள்.

பசியால் சோர்ந்து வயிறு ஒட்டிப்போய் இருந்தன இரு குழந்தைகளும். குழந்தையைப் பார்த்த உடனே அவளுக்குக் கலக்கம். இப்போ என்னதான் பண்ணுறது? வீட்டில் இருந்த தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு அவள் பார்க்க "பசிக்குதும்மா" எனப் பையன் பாவமாய் உரைத்தான்.

"கொஞ்சம் பொறுத்துக்கோடா தங்கம். அம்மா எப்படியாவது சாப்பாடு செஞ்சுத் தர்றேன்.." அன்னம் சொல்லி தட்டிக் கொடுக்க அந்தச் சோர்வில் கண்ணயர்ந்தனர் இரு செல்வங்களும்.

"பேர்லதான் அன்னம் இருக்கு.. இப்போ நான் அன்னத்துக்கு எங்க போவேன்.." கண்ணீர் உருண்டு விழ அவளது தோற்றம்

அந்தத் தெளிவில்லாத கண்ணாடியில் விழுந்தது.

அவளது உடல் அழுக்குப் படிந்த அந்தக் கண்ணாடியில் பட்டுத் தெரிய 'அவ மட்டும் கொஞ்சம் அட்ஜஸ் பண்ணினால் எப்படி வாழலாம் தெரியுமா? இப்படி பசிகூட குடித்தனம் நடத்த அவளுக்கென்ன தலையெழுத்தா?' வேணியின் வீட்டில் பேசியவனின் குரல் கேட்டது.

அது மட்டுமே இப்போது அவளுக்குள் கேட்டுக்கொண்டே இருந்தது. கண்முன்னே தன் குழந்தைகளின் பசி... அவளை அப்படியே புரட்டிப் போட்டது.

எப்படியாவது அவர்களுக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டும். வைராக்கியம் மனதில் எழ அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு வேகமாக எழுந்தாள். அவள் ஒரு முடிவுக்கு வந்தது போல் இருந்தது.

குழந்தைகளை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தாள்.

செய்வது சரியா தவறா என்று அவளுக்குப் புரியவில்லை. எதுவாக இருந்தாலும் குழந்தைகளுக்காகத்தானே என்று தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டாள். வெளியே வந்தாள். மீண்டும் வேணியின் வீட்டினை நோக்கி நடந்தாள்.

வீடு வருவதற்குள் கூனி குறுகிப் போயிருந்தாள் அன்னம்.

"அடடே வா அன்னம்..." அவளது ஆர்ப்பாட்டமான வரவேற்பு இதைத்தான் எதிர்பார்த்தேன் என்பது போல் இருக்க "பிள்ளைங்க இரண்டும் பசியில ரொம்பவே வாடிப் போயிடுச்சுக்கா.. வேலையும் இல்லை. இன்னும் இரண்டு நாளுக்கு மேல ஆகும்னு வள்ளி சொல்லிடுச்சு. அதுவரைக்கும் புள்ளைங்க பசி தாங்காதுக்கா. கொஞ்சம் பணம் கொடுங்க. நான் வேலைக்குப் போன உடனே உங்க காசைக் கொடுத்துடுறேன்" கேட்பதற்குள் உள்ளுக்குள் மரித்துத்தான் போனாள்.

"என்ன அன்னம் நீ.. இதுக்கெதுக்கு தயங்குற. இங்க பாரு.. புள்ளைங்க நல்லா இருக்கணும் அதுதானே நமக்கு முக்கியம். வேலைக்குப் போய்க் காசு கொடுக்குறது எல்லாம் இருக்கட்டும். உனக்கு நான் செய்ய மாட்டேனா.. இரு பணம் எடுத்துட்டு வர்றேன்" உள்ளே இருந்து பணம் எடுத்து வந்த வேணி.. "அப்பறம் அன்னம் நாளைக்கு நீ குழந்தைகளை இங்க விட்டுட்டு நான் சொல்லுற இடத்துக்குப் போயிட்டு வந்துடு. ஒரு மணி நேர வேலைதான்.. ராணி மாதிரி இருக்கலாம்.." என்று மெல்லக் காய் நகர்த்தினாள்.

"அந்த மாதிரிப் பொண்ணு நான் இல்லைக்கா.. நான் நான்....வேண்டாம்..."

"இங்க பாரு பசியை நீ தாங்குவ. புள்ளைங்க தாங்குமா.. பாவம் இல்லையா.. இனியும் வீம்பு பிடிச்சா சரி வராது அன்னம். இதெல்லாம் யாருக்கும் தெரியாது. அப்படியே தெரிஞ்சாலும்தான் என்ன? நீ இப்படி அப்படின்னு பேசுவாங்க... பேசுறவங்க என்ன ஒரு வாரம் பேசுவாங்களா. அடுத்து அவனுங்களுக்கு வேற வேலை இருக்கும்.. ஆனால் இப்போ நீ ஒரு முடிவு எடுக்கலைன்னா புள்ளைங்களைப் பறிகொடுத்துட்டு நிப்ப.. அது பார்த்துட்டு உச் கொட்டிட்டுப் போறவனுங்க உனக்காக வாழ ஏதாவது செய்வாங்களா என்ன? மாட்டாங்க.. நான் சொல்லுறதை மட்டும் கேளு.. புள்ளைங்க நல்லது சாப்பிட்டு நல்லா இருப்பாங்க டி... என்ன சொல்லுற. இப்போ கூட ஒன்னும் கெட்டுப் போகலை. நல்லா யோசி.. நாளைக்குக் காலையில உன்னோட பதிலை சொல்லு.. இப்போ இதை வச்சுக்கோ..." பணத்தினைத் திணித்தாள்.

"இல்ல.. வேணாம்."

"அன்னம் காசை வேண்டாம்னு சொல்லாத. புள்ளைங்களுக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்துட்டு நான் சொன்னதை யோசி..." நீட்டிய காசை வாங்க உயிருக்குப் பதிலாக ஓடிக்கொண்டிருந்த மானம் தடுத்தது. கைகள் இரண்டும் நடுங்க இங்கு வந்தது

தவறு என முகத்தில் அறைந்துகொண்டு சட்டென வெளியே வந்துவிட்டாள்.

'இவ்வளவு தூரம் வந்தவ சீக்கிரமே மனசை மாத்திக்குவா. எப்படியோ அவளால நமக்கும் கொஞ்சம் நல்லது நடக்கும்...' வேணி மகிழ்ந்தவளாய் இருந்தாள்.

வெளியேறியவள் வீட்டுக்குச் செல்லவில்லை. அப்படியே கால் போன போக்கில் நடந்தாள். வெகுதூரம் நடந்து வந்தவள் சில விநோத சத்தம் கேட்டதில் நடையை நிறுத்திவிட்டுப் பார்த்தாள்.



ஒதுக்குப்புறமாக இருந்த சுடுகாடு தென்பட பயத்தில் தொண்டை அடைத்தது. இவ்வளவு நேரம் நடந்ததில் மயக்கம் வரும் போல இருந்தது. அப்படியே உள்ளே எட்டிப் பார்த்தாள்.

சொந்த பந்தம் கிளம்பியிருக்க அவள் உள்ளே வந்தாள். பெண்கள் உள்ளே வரக்கூடாது என்ற கட்டுப்பாடு எல்லாம் இப்போது அவளுக்கே ஞாபகம் இல்லை. நடந்தவள் சிதைக்கு முன்னதாக அமர்ந்துகொண்டாள். அவளது கண்கள் வெறிக்க வெறிக்க அந்த நெருப்பினையே பார்த்துக்கொண்டிருந்தது. அங்கிருந்த ஊழியர் நெருப்பினை நன்றாக எரியவிட்டுத் திரும்ப திடுக்கிட்டுப் போய்விட்டார்.

"சுடலை மாடா" நெஞ்சில் கைவைத்தபடி அவளைப் பார்த்தார். அது ஆத்மா இல்லை என்பது புரிந்ததும் பயம் விலகியது.

"தாயீ! என்னதிது இங்க வந்து இருக்க. தப்பு தாயீ.. வீட்டுக்குக் கிளம்பு.."

"அவ்வளவுதான் இல்ல" விரக்தியாய்ப் பேசினாள். அவளது பேச்சு முதியவரைத் திடுக்கிட வைத்தது. இந்த சிறு வயதில் இவ்வளவு விரக்தியா? பார்க்கவே பாவமாக இருந்தது அந்த மனிதருக்கு.

"என்னத்தா! என்ன பேசுற?" அவளிடம் ஆறுதலாகக் கேட்டார்.

"இவ்வளவுதான இந்த மனுஷப் பொறப்பு. அதைச் சொன்னேன் ஐயா."

"அவ்வளவுதான்த்தா வாழ்க்கை. நான்தான் பெரிய ஆள்.. எனக்கு நிகர் யாருமே இல்லைன்னு இறுமாந்து திரியும்போது சட்டுன்னு வாழ்க்கை முடிஞ்சு இதோ இங்க வந்து சாம்பலாகிடும்.. சரி சரி இங்கலாம் இருக்கக்கூடாது கிளம்பு.." இப்போது கொஞ்சம் அதட்டல் தொனியால் சொன்னார்.

"ஐயா! இப்பவே என்னோட வாழ்க்கையை முடிச்சுக்கலாம்னு தோணுது. ஆனால் என்னை நம்பிப் பொறந்திருக்க இரண்டு ஜீவனை நினைக்கும்போது அந்த நினைப்பு கரைஞ்சுப் போயிடுது ஐயா.. நான் என்ன பாவம் பண்ணேன்னு தெரியல.. இப்படி பசி பட்டினியோட போராடணும்னு என் தலையில எழுதியிருக்கே..." அவள் முகத்தினைப் பார்க்கையிலேயே அவள் சாப்பிட்டு மூன்று நாட்களாவது ஆகியிருக்கும் என்று தோன்றியது அந்த மனிதருக்கு.

"என்னை உன் அப்பா மாதிரி நினைச்சுக்கோ. என்னம்மா நடந்தது. உனக்கு என்ன பிரச்சனை?" என அவர் வினவ, அவள் நடந்தது அத்தனையும் சொல்லிக் கண் கலங்கினாள்.

உழைத்து ஒழுக்கமாக வாழ நினைக்கும் இந்தப் பெண்களை அவ்வளவு சுலபமாக வாழ விடமாட்டேங்குதே இந்தச் சமூகம் எனக் கலங்கிப்போனார்.

உடனே அந்தக் காரியத்தினையும் செய்திருந்தார்.. இறந்தவர்களுக்கு வாய்க்கரிசி போடுவதற்குக் கொண்டு வந்த அரிசியை அப்படியே துணியில் மூட்டையாய்க் கட்டி வந்திருந்தார். அதை எடுத்து அவளிடம் நீட்டினார்.

"அய்யோ வேண்டாம்." பின்னால் நான்கடி நகர்ந்துவிட்டாள்.

"ஏன் வேண்டாம்னு சொல்லுற? இப்போத்தான சொன்ன புள்ளைங்க இரண்டும் பசியா இருக்கும்னு.. அதுங்க உன்னை நம்பி வந்ததுங்க. அதுங்களைப் பட்டினி போடுறது தப்புத்தா. போ.. இதை எடுத்துட்டுப் போ... இதையும் வச்சுக்கோ..." தனக்கென வந்த அந்தச் சில்லரைக் காசுகளையும் சில நோட்டுக்களையும் அவளிடம் நீட்டினான்.

"வேண்டாம் ஐயா.." அவள் பயந்தே போனாள்.

"ஏன் யோசிக்கிற.. பிணத்துக்கு வந்ததுன்னா... அதனால என்னத்தா.. இதை எடுத்துட்டுப் போ... செத்துப் போயி இந்த மகராசி உன் குடும்பத்துக்கு நல்லது பண்ணுறானு நினைச்சுக்கோ.. போ தாயீ... இல்லை நானும் தப்பான நோக்கத்துல கொடுக்கறதா நினைச்சுட்டயா... நான் உன்னைப் பெத்த பொண்ணா நினைச்சுத்தான் இதைப் பண்ணுறேன்.. எடுத்துட்டுப் போமா."

"எனக்கு ஒரு மாதிரி இருக்கு ஐயா... நான் வேணும்னா இங்க இருந்து இந்த இடத்தைச் சுத்தம் பண்ணிட்டு வாங்கிக்கவா..." படபடவென்று அங்கிருந்த துடைப்பத்தினை எடுத்துச் சுத்தம் செய்துவிட்டு வந்து நின்றாள்.

"அரிசியை மட்டும் குடுங்க ஐயா.. போதும்."

"அதெப்படி காணும்.. காய் இதெல்லாம் வாங்க வேண்டாமா... இதையும் எடுத்துக்கோ ஆத்தா.. இந்தக் கிழவனுக்குச் செலவுக்கு என்ன இருக்கு... அப்பவே எனக்குச் சாப்பாடு வாங்கிக் கொடுத்துட்டுத்தான் போனாங்க... நான் அதைச் சாப்பிட்டுக்குவேன். நீதான் குழந்தைங்களை வச்சுருக்க.. போ அவங்களைக் கவனி.. நீயே சோர்ந்து போய்த் தெரியுற.. இந்தா இந்த வாழைப்பழத்தைச் சாப்பிட்டுட்டுப் போய்ச் சமையல் செஞ்சுப் பசியை ஆத்து.." எனச் சொல்ல அவள் கைகூப்பினாள்.

"ஐயா! சாமி மாதிரி எனக்கு நீங்க இப்போ உதவி பண்ணியிருக்கீங்க. இதை நான் மறக்கவே மாட்டேன்.. வர்றேன்."

"சொல்லாமல் கிளம்பு தாயீ."

"வருவேன் ஐயா.." சொல்லிவிட்டுக் கண்ணைத் துடைத்துவிட்டு மனபாரம் அகன்றவளாய் அவள் நகர அவளையே பார்த்துக்கொண்டிருந்த அந்த மனிதருக்கு நேற்றைய தினம் இதோ இந்தச் சுடுகாட்டின் சுவற்றின் மீது அமர்ந்து நாலு இளவட்டப் பையன்கள் பேசியது நினைவுக்கு வந்தது.

"நீ சப்ஸ்கிரைப் பண்ணிட்டயா.. அய்யோ நான் பண்ணல டா.. இதோ பண்ணனும்.. நானூறு தானடா.." சொல்லியபடி அவன் சப்ஸ்கிரைப் செய்ததும் எல்லாரும் சேர்ந்து ஜாலியாக அதைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

"டேய் 6000 சொச்சம் பேர் சப்ஸ்கிரைப் பண்ணியிருக்கானுங்க டா.. 6000 பேர் நானூறுன்னா அப்பாடி 24 லட்சம் வருது டா... நம்மளால அந்தப் பொண்ணு மாசத்துக்கு 24 லட்சம் சம்பாதிக்குது. நாம பாரு அந்த வீடியோவை நாக்கத் தொங்கப்போட்டுப் பார்க்குறோம். இப்போலாம் பொண்ணுங்க எப்பிடி இருக்குதுங்க பாரு.. ஆன்லைன்லயே அவுத்துப் போட்டுட்டு இருக்குதுங்க.."

"ம்ம் அதுக்குத்தானே நாம இந்த நானூறு தர்றோம்.. டேய் டேய் வீடியோ ஒன்னு வந்துருக்குடா..." என்றவுடனே பேச்சு தடைபட்டுவிட்டு மொபைலில் கவனமாகிவிட்டார்கள்.

இன்று அதை நினைக்கையில் அன்னத்தின் நிலைமை உறுத்தியது அந்த முதியவருக்கு.

இப்படித்தான் வாழ வேண்டுமென்ற அன்னத்திற்குத் தான் கொடுத்த வாய்க்கரிசியால் இன்னும் கொஞ்சம் துணிவு வந்திருக்க... எங்கயோ இருந்து இணையத்திலேயே பட்டவர்த்தனமாக விபச்சாரம் செய்யும் அந்தப் பெண் இன்னும் எத்தனை பேருக்கு வாய்க்கரிசி போடத் துணிந்திருக்கிறாளோ...!

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டி 2025

**சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை**

**கவியோவியத்தமிழன்**



படைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநூன்பீவி நினைவு
சிறுகதைப் பரிசுப்போட்டியில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி கவியோவியத்தமிழன்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17-03-2025



# காலத்தின் ஒப்பனைகள்!

ஊருக்கு வந்த நாளன்றே பழனியப்பன் இறந்துவிட்ட செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். எப்படி இறந்தார் எதனால் இறந்தார் என்று பற்பல கேள்விகளால் அம்மாவைத் துளைத்தெடுத்தேன். அம்மாவும் சலிக்காமல் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள். அவளது பதில்களில் அவ்வப்போது உறைந்தும் கனத்த அமைதிக்கும் மன கொந்தளிப்புகளுக்கும் உள்ளானேன்.

சென்னையில் சினிமாத்துறையில் மேக்கப் ஆர்ட்டிஸ்டாக வேலை செய்கிறேன். இயக்குனர் கனவை அதீதமாய் வளர்த்து வைத்திருப்பவன். அதே நேரம் காலத்தையும் வீணடிக்க விரும்பாதவன். இடையில் கிடைத்த வேலைகளைச் செய்யலாம் என்ற நோக்கில் எந்த வேலையையும் செய்யக் கூசாதவன். ஆபீஸ் பையனாக, லைட் மேனாக, போட்டோகிராபராக, துணை நடிகர்கள் ஏஜெண்டாக பல்வேறு அவதாரங்கள் எடுத்துத் திரிந்தாலும் எனது இலக்கு இயக்குனர் ஆவதுதான்.

மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ, ஆறு மாதத்திற்கு ஒருமுறையோதான் ஊருக்கு வருவேன். இந்தமுறை வந்ததுமே அம்மாவிடமிருந்து இப்படியொரு தகவல் வருமென்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் நிலைகுலைந்துதான் போனேன்.

• • •

எனது கலை உணர்ச்சிகள் பெருக தூபம் போட்டவர் இந்தப் பழனியப்பன்தான். சுற்றுவட்டாரங்களில் எங்கு திருவிழா நடந்தாலும் அங்கு பழனியப்பனின் நாடகம் இல்லாமல் திருவிழா முழுமையடையாது. பவளக்கொடி, வள்ளி திருமணம், அரிச்சந்திர

மயானகண்டம், சித்திரவள்ளி, பாசுபதக்கணை என்று எல்லா நாடகங்களையும் கரைத்துக் குடித்திருந்தார். ஊரில் நான்கு பழனியப்பன்கள் இருந்ததால் எந்தப் பழனியப்பன் என்று குழப்பம் உண்டாகும் என்பதால் தமது பெயரோடு ராஜபார்ட்டைச் சேர்த்துக்கொண்டவர். இராஜபார்ட் பழனியப்பன் என்றால் சுத்துப்பட்டில் அவ்வளவு பிரசித்தம்.

பழனியப்பன் ஒரு நாடக நடிகர் என்பதோடன்றி எனது அப்பாவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராகவும் இருந்ததால் அவரை அடிக்கடி பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பா நடத்திய டீக்கடையில் காலையும் மாலையும் தவறாமல் அவரைப் பார்த்துவிடுவேன். அவரும் என்மேல் நிரம்ப அன்பு கொண்டிருந்தார். எல்லோரும் பணம் சேர்க்கவும் பொருள் சேர்க்கவும் அலையாய் அலைந்துகொண்டிருக்கையில் இவர் மட்டும் நடிப்புக்கலையில் வெறித்தனமாய் இருக்கிறாரே என நான் வியக்காத பொழுதுகளில்லை.

நான் எழுதிய சில கவிதைகளை ஒருமுறை எனது தந்தைக்குத் தெரியாமல் பழனியப்பனிடம் வாசித்துக்காட்டினேன். அவர் எதுவும் சொல்லாமல் அமைதியாய் என் கண்களையே உற்றுப் பார்த்தார். அவரின் அமைதி கண்ட நான் "கவிதை நல்லாயில்லையா?" என்றேன். அவர் வார்த்தைகளற்றவராய் என்னை வாரியணைத்து உச்சந்தலையிலும் கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் வைத்தார்.

"உனக்கு கலைமகளின் அருள் பூரணமாய் இருக்குடா. நீ கலையுலகத்தில் பெரிய ஆளாய் வருவ..." என்றார்.

எப்போதும் வெள்ளை வேட்டி சட்டையில் பளிச்சென்று தெரிவார். நடையில் எப்போதும் மிடுக்கிருக்கும். ராஜநடை என்பது இதுதானோ என்று எண்ணத் தோன்றும். அவர் மீசையோடு இருந்து யாரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. நாடகங்களில் பல்வேறு வேடங்களை நடிக்க நேர்வதால் எப்போதும் மழித்த முகம்தான். சுருட்டை முடி கருகருவென சிவாஜிகணேசன் ஸ்டைலில் இருக்கும். அவர் தலைமுடி கலைந்து யாரும் பார்த்ததேயில்லை. செதுக்கி வைத்ததுபோல் ஒரு கோபுரக் கலசம் போல அப்படியே நிற்கும்.

ஊரில் கோயில் திடலும் பள்ளிக்கூடமும் நாடகமேடையும் ஒரே இடத்தில் இருந்தன. அந்த நாடகமேடை தனக்காகவே கட்டப்பட்டது போன்ற தோரணையில் பழனியப்பன் தூண் ஒன்றில் சாய்ந்தபடி அமர்ந்திருப்பார். அந்தப்பக்கமாக இளசுகளும் பெரியோர்களுமாகக் கலந்து ரம்மி, வெட்டுச்சீட்டு என்று விளையாடிக்கொண்டிருப்பர். இவரோ லோகிதாசனை நினைத்து அரிச்சந்திரன் ஏங்கிப்பாடும் அரிச்சந்திர மயானகண்ட நாடகப் பாடலை முணுமுணுத்துக்கொண்டிருப்பார்.

விவசாயம், பஞ்சுமில், விறகு வெட்டும் வேலை என்று விடிந்தால் ஊரிலுள்ள எல்லோரும் சிட்டாய்ப் பறந்துவிடுவர். இவர் மட்டும் ஆற்றங்கரை, ஆலமரத்தடி, கோயில் அரசமரத்தடி, நாடக மேடை என்று ஏதாவது ஒருபக்கம் அமர்ந்துகொண்டு நாடகப் பாடல்களை உச்சஸ்தாயியில் பாடிக்கொண்டிருப்பார். அல்லது தான் நாடகங்களில் நடிக்கும்போது அணியும் ராஜா வேஷத்திற்கான ஆடைகளைச் சரிசெய்துகொண்டிருப்பார் அல்லது ஊசிநூலில் ஜரிகைகள் வைத்துத் தைத்துக்கொண்டிருப்பார்.

பிற்பாடு ஒருமுறை அம்மா சொல்லித்தான் தெரியும் அவர் திருமணமே செய்துகொள்ளவில்லை என்று. உடன்பிறந்தோர்கள் என்றோ சொந்தம் என்றோ சொல்லிக்கொள்ள யாருமில்லாதவர் என்பதை அறிந்த அன்றுதான் அவர்மீது நான் கொண்டிருந்த பாசம் பலமடங்கு பெருகியது.

• • •

பழனியப்பன் மணப்பாறை நாடக நடிகர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து அந்தச் சங்கத்திலேயே காலண்டர் போட்டிருந்தார். அவ்வப்போது சங்கத்தின் மூலம் கிடைக்கும் நாடகங்களிலும் நடித்துக்கொண்டு தமது தனிப்பட்ட செல்வாக்கின் மூலம் அமைகின்ற நாடகங்களிலும் நடித்து வந்தார். என்றாலும் வருடத்திற்கு ஒருமுறை வாய்க்கும் உள்ளூர் நாடகத்தில் நடிப்பதற்காகவே ஏங்கிக்கிடப்பவராகத் தெரிவார்.

நாடகம் பழகுவதில் ஆர்வமுள்ள வெளியூர்க்காரர்கள் இவரிடம் வந்து காணிக்கை செலுத்திப் பாடம் எழுதி வாங்கிப்போவதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். சிலர் வந்து இவரோடே தங்கி நாடகப் பயிற்சி எடுப்பதையும் காணமுடியும். கட்டப்பொம்மன் நாடகமும், வள்ளி திருமணம் நாடகமும் இவரளவுக்குக் கற்றுத்தர மாவட்டத்திலேயே வேறு ஆள் இல்லை என்று சொல்வார்கள்.

ஆள் நடமாட்டமில்லாத பகுதிகளில் போய் அமர்ந்துகொண்டு சத்தம் போட்டுப் பாடுவார். வேறு யாருக்கும் கிடைக்காத பெரும்பேறு தமக்குக் கிடைத்திருப்பதாகவும், தம்மைப்போல நாடகக் கலைஞனாக ஆகமுடியாமல் நிறையப்பேர் தவித்துக்கொண்டிருப்பதாகவும் அவருக்குள்ளாகவே ஒரு எண்ணவோட்டம் எப்போதுமிருந்தது.

காலை மாலை வேளைகளில் எங்கள் டீக்கடையில் அரசியல் விவாதம் சூடு பறக்கும். கட்டிப்புரளாத ஒரு குறைதான். அவ்வளவு உக்கிரமாக விவாதித்துக்கொள்வார்கள். எனது அப்பா அனைவரின் பேச்சையும் முற்றிலும் மறுத்து அடித்துப்பேசும் ரகம். இதனால் நிறையப்பேர் எங்கள் கடைக்கு வருவதையே நிறுத்திக்கொண்ட சம்பவமெல்லாம் உண்டு. எந்த விசயமென்றாலும் பழனியப்பன் எப்போதும் அப்பாவின் பக்கம்தான். லோக்கல் விவாதங்கள் ஒருபுறம் ஓடிக்கொண்டிருந்தால் இவர் எல்லோரின் பேச்சும் திசைமாறும்படி பி.யூ.சின்னப்பா, சங்கரதாஸ் சுவாமிகள், டி.ஆர்.மகாலிங்கம், சந்திரபாபு என்று கலை ரீதியிலான மேம்பட்ட விசயங்களை அவிழ்த்துவிடுவார். கடைவீதி என்றோ தாம் அமர்ந்திருப்பது டீக்கடை என்றோவெல்லாம் பார்க்கமாட்டார். ராகம் போட்டுப் பாடுவார்.

அவர் அடிக்கடி பொது இடங்களில் பாடுவது 'இதோ எந்தன் தெய்வம் முன்னாலே...' என்ற பாடலைத்தான். அந்தப் பாடலிற்குப் பின் ஒரு பெரிய கதையே இருப்பதாக எல்லோரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் என்ன கதையென்றுதான் தெரியவில்லை.

• • •

அடைமழை ஓய்ந்து வெயில் முகம் காட்டிய ஒரு தினத்தில் திருவிழா நடத்துவதெனப் பேசிமுடித்து ஊரில் சாமி சாட்டியிருந்தார்கள். ஊரெல்லாம் சுத்தம் செய்யப்பட்டுப் பளிச்சென்று இருந்தது. ஞாயிறு கரகம் சோடிப்பின் போது கரகாட்டமும் திங்கள் கிழமை கிடாவெட்டி பொங்கல் வைப்பு என்றும் அன்று இரவு பத்து மணிக்குக் கோயில் முன்பாக அமைந்துள்ள சிங்காரக் கலையரங்கில் 'சித்திரவள்ளி' நாடகம் என்றும் போட்டுத் திருவிழா நோட்டீசும் அடித்துவிட்டார்கள்.

தேசாய் பேப்பரில் மஞ்சள் நிற நோட்டீஸ் அது. ஒரு வரி விடாமல் படித்து வந்தேன். அப்போதுதான் அதில் பழனியப்பன் பெயரும் ராஜநடிகர் என்ற அடைமொழியோடு இடம் பெற்றிருந்தது. எனக்கு ஏக மகிழ்ச்சி! அப்போதே விடிய விடிய தூங்காமல் முழு நாடகத்தையும் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டேன். குறிப்பாக பழனியப்பன் வரும் சீன்கள் ஒன்றைக்கூட தவறவிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தேன்.

குறித்த நாளும் வந்தது. ஊரே திருவிழாக் கோலத்தில் அல்லோகலப்பட்டது. எங்கு பார்த்தாலும் பலூன்காரர்களும் ஐஸ் வண்டிக்காரர்களும் தென்பட்டனர். தொட்டிராட்டினங்கள் மூன்று இடங்களில் அமைக்கப்பட்டு ஓயாது

சுழன்றுகொண்டிருந்தது. வெயில் பல்லைக் கெஞ்சிக்கொண்டு அடித்ததால் ஐஸ் வண்டிக்காரர்கள் தமது சைக்கிள்களில் இருந்த ஒலிப்பான்களை அலறவிட்டுக்கொண்டேயிருந்தனர். கண்ட இடங்களிலெல்லாம் பூக்கடைகள்... நீர்மோர் பந்தல்கள்... மூக்கொழுகியபடி ஐஸ் சப்பும் குழந்தைகள்...

இரவு காய்த்து முற்றிக் கனிந்துகொண்டிருந்தது. ஒரு வேனில் வந்து இறங்கிய பிற நாடக கலைஞர்களைக் கவுன்சிலர் வீட்டுக்குச் சாப்பிட அழைத்துப்போனார்கள். கூடவே பழனியப்பனும் போவதைப் பார்க்க முடிந்தது. நேரம் போனதே தெரியவில்லை. நாடகம் தொடங்கி பபூன் டான்ஸ் அலப்பறைகள் முடிந்த பிறகு பச்சை நிற ஸ்கிரீனைப் பிடித்து ஆட்டி உச்சஸ்தாயில் ஒரு கதைப்பாடலைப் பாடியபடியே பழனியப்பன்தான் வெளியே வந்தார். ராஜா வேஷம் அவருக்குக் கம்பீரமாகப் பொருந்தியிருந்தது. அவரின் கரிய நிறம் முழுக்கவும் ஒப்பனைகளால் மறைக்கப்பட்டுச் சிவந்த நிறமாய் மின்னொளியில் தகதகவென ஜொலிப்பதைப் பார்க்க முடிந்தது. கைகளிலும் முகத்திலும் பவுடரோடு சேர்த்து ஜிகினா பொடியையும் பூசியிருந்ததால் உடலெல்லாம் ஒரே மினுமினுப்பு.

கோயில் திடல் ஜனங்களால் நிரம்பி வழிந்தது. நான் கிழக்குப்புறமிருந்த பள்ளிக்கூடத் திண்ணையில் நண்பர்களோடு அமர்ந்திருந்தேன். குமரிப்பெண்கள் மணக்க மணக்க மல்லிகைப்பூக்களை வைத்துக்கொண்டு தமது உறவினர்கள் சகிதமாய்ப் பாய், போர்வைகளை விரித்துப்போட்டு அமர்ந்திருந்தனர். வசனத்திலும் உடலசைவிலும் பழனியப்பன் மிகக் கம்பீரமாய்த் தமது உச்சபட்சக் கலைத்திறன்களை மெய்ப்பித்துப் பார்வையாளர்களை மெய் மறக்கச்செய்த வேளையில்தான் அந்தப் பாடலைப் பாடினார்.

"இதோ எந்தன் தெய்வம் முன்னாலே, நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே..."

கைகளை உயர்த்தித் தோள்பட்டையை சிலுப்பி அவர் கொடுத்த போஸ்கள் ஒவ்வொன்றும் அப்படியே 'பாபு' படத்தில் வருகின்ற நடிகர் திலகத்தை ஞாபகத்தில் நிறுத்தியது. அவர் கையசைவு, சுட்டல்கள் எல்லாம் பெரும்பாலும் எங்களுக்கு நேர் எதிராக இருந்த வேப்பமரத்துப் பாப்பா வீட்டை நோக்கியே இருந்ததை எதேட்சையாகத்தான் நானும் கவனித்தேன். பாப்பா தமது வீட்டை ஒட்டி இருந்த வேப்பமரத்தில் சாய்ந்தவாறே பழனியப்பனைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் பாடப்பாட அடிக்கடி பாப்பாவின் உடல் சிலிர்ப்பதும், தமது சேலையை அவ்வப்போது இழுத்து இறுகப் போர்த்திக்கொள்வதுமாக அமர்ந்திருந்தார். அதில் ஒரு விஷேசம் இருப்பதாய் உணர்ந்தேன். அடுத்தடுத்த பாடல்களிலும் பழனியப்பன் பாப்பா அமர்ந்திருந்த திசையை நோக்கியே உணர்ச்சிகளைக் கொட்டிக்கொண்டிருந்தார். பாப்பா கொலுவிலிருக்கும் அம்மனுக்கு நிகராகத் தம்மை அலங்கரித்துக்கொண்டு அமர்ந்திருப்பதாகப் பட்டது.

மறுநாள் விடியலில் மனம் துறுதுறுக்க விசாரணையில் இறங்கும்போதுதான் வேப்பமரத்து பாப்பா மீது பழனியப்பனுக்கு எல்லையில்லாக் காதல் இருப்பதை ஊர்ஜிதப்படுத்த முடிந்தது. இருவரும் இளம்பிராயத்தில் இருந்தே ஒருவருக்கொருவர் விரும்பியிருக்கிறார்கள். லோக்கல் லைலா மஜ்னு போல. குறுக்கே தடையாய் சாதி இருந்ததால் பாப்பாவுக்கு வேறுபக்கம் அவர்கள் சொந்தத்திலேயே திருமணம் முடித்துவைத்துவிட்டார்கள்.

ஏழெட்டு வருடத் திருமண வாழ்க்கையில் பாப்பாவுக்குக் குழந்தை ஏதும் இல்லாததால் விரக்தியான பாப்பாவின் கணவர் ஊரைவிட்டுப் போனவர்தான் திரும்பி வரவேயில்லை. எங்கு போனார் என்ன ஆனார் என்பதுவும் தெரியவில்லை. இவர்கள் எங்கெங்கோ தேடியும் விசாரித்தும் பார்த்துச் சலித்துவிட்டனர். ஆள் மட்டும்

கிடைக்கவேயில்லை. பாப்பா வீட்டில் மறுமணம் பண்ணிவைக்கவும் முயற்சி நடந்தது. ஆனால் அதற்கு பாப்பா இசையவில்லை.

பழனியப்பன் பாப்பாவை நினைத்துக்கொண்டே திருமணமே பண்ணிக்கொள்ளவில்லை. சொந்தத்தில் முறைப்பெண்கள் வலிய வந்தும் இவர் ஏற்கவில்லை. எந்நேரமும் பாப்பா நினைப்பிலேயே கசிந்துருகினார். நிறைய காதல் பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டு தான் நடிக்கும் நாடகங்களில் உருகி உருகிப் பாடினார். நீறுபூத்த நெருப்பாக இருவருக்குள்ளும் காதல் தீ சுடர் பெருக்கி எரிந்துகொண்டேயிருந்திருக்கிறது...

ஊரெல்லாம் நாடகத்திற்குப் போனாலும் தமது சொந்த ஊரில் நாடகத்தில் நடிப்பதை அவர் வாழ்நாளெல்லாம் ஒரு தவம் போல மேற்கொண்டார். ஒவ்வொரு வருடமும் மிகச்சரியாக பாப்பா தம்மை நன்கு அலங்கரித்துக்கொண்டு வேப்பரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருப்பதும் பழனியப்பனும் தவறாமல் அவரை நோக்கிக் கைகளை நீட்டி "இதோ எந்தன் தெய்வம் முன்னாலே..." பாடலை சுருதி சுத்தமாய்ப் படிப்பதும் வாடிக்கையாகவே போய்விட்டது. இது ஊரெல்லாம் தெரிந்த கதை என்பதே எமக்குப் பிற்பாடுதான் தெரிந்தது.

• • •

காலமும் தமது ஒப்பனைகளை மாற்றிக்கொண்டேயிருந்தது. மணப்பாறை நாடக நடிகர் சங்கத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சங்கத்திலிருந்து ஐந்து பேர் நீக்கப்பட்டதில் பழனியப்பனும் ஒருவர். யாரோ செய்த தவறுகளுக்கு இவர் மீதும் பழி சொல்லப்பட்டது. அதை இல்லையென்று மெய்ப்பிக்க அவர் எவ்வளவோ போராடியும் எடுபடாததால் சங்கமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று வெறுத்து விட்டுவிட்டார். சங்கத்திலிருந்து வெளியேறிய பிறகு அவ்வளவாய் நாடக வாய்ப்புகள் இல்லாதவராய் இருந்தார். புதிய கலைஞர்களை உருவாக்குவதில் நாட்டம் கொண்டு பலருக்கும் அவர் வீட்டுப் பக்கத்திலிருந்த மாந்தோப்பில் நாடகப் பயிற்சியும் வழங்கினார்.

காலம் வேகவேகமாய் உருண்டோடியதில் ரொம்பவே தளர்ந்து காணப்பட்டார். தலையெல்லாம் நரை அப்பிக்கொள்ள கண்டதையும் தடவி அதை மூடி மறைத்தார். நாடக வாய்ப்புகள் அறவே அற்ற நிலையில் அப்பாதான் அவருக்கு ஆதரவாக இருப்பதாக சென்னைக்கே அவ்வப்போது தகவல்கள் வருவதுண்டு.

முன்பொருமுறை ஊருக்கு வந்துவிட்டுக் கிளம்புகையில் அய்யலூர் பஸ்டாப்பில் புகையிலை வாங்க காசு கேட்டார். கேட்கையிலேயே அவர் முகம் சங்கடத்தில் நெளிவதைப் பார்க்க முடிந்தது. புகையிலையும் வாங்கிக்கொடுத்து தனியே இருநூறு ரூபாய் செலவுக்கு வைத்துக்கொள்ளச் சொல்லிக் கொடுத்தேன்.

நான் பஸ் ஏறும்வரை நாடக உலகத்தின் தற்போதைய நிலைகள் குறித்து மிகுந்த வெசனத்துடனே பேசிக்கொண்டிருந்தார். நான் பஸ் ஏறும்போது சென்னையில் சூதானமாக இருக்கும்படியும் உடம்பைப் பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி "நிச்சயம் நீ பெரிய டைரக்டரா ஆகத்தான் போற, அத இந்த ஊரு உலகம் பார்த்து வாயில கை வைக்கத்தான் போகுது" என்று அவர் சற்று சத்தமாகவே சொல்லியபோது பஸ்சுக்குள் இருந்தவர்களின் கவனமெல்லாம் படியை நோக்கித் திரும்பியதைக் கவனித்தேன். எனக்கு அவர் நிலையை நினைக்கையில் ஏனோ கண்கள் பனித்தது.

அது இரண்டாம் கட்டக் கொரோனா காலம். நான் ஊருக்கு வந்து வீட்டாளாய்க் கிடந்தேன். எங்கும் வெளியில் போகமுடியவில்லை. அம்மாவும் அப்பாவும் வெளியில் போவதை அனுமதிக்கவும் இல்லை. எங்கள் டீக்கடை திறந்தே மாசக்கணக்கில் ஆகிறது. எப்போதாவது

மளிகைப் பொருட்கள் வாங்க கடைவீதி போகும்படி இருந்தால் மட்டும் 'எங்கும் நிற்காமல் போனவுடன் வரவேண்டும்' என்று கண்டிப்பு காட்டுவார்கள்.

அப்படி ஒரு பொழுதில், லேசாய் சட்டரைத் திறந்துவிட்டு வியாபாரம் செய்த ஒரு மளிகைக் கடையில் நான் பொருட்கள் வாங்கிக்கொண்டிருக்கையில்தான் கவனித்தேன். பழனியப்பன் மிகவும் நலிந்து உடல் தளர்ந்த நிலையில் சாத்தப்பட்ட எங்கள் டீக்கடை முன்பு நின்றபடி வெறிச்சோடிக் கிடந்த கடைவீதியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அவர் கண்களில் அவ்வளவாய் ஜீவனில்லை. துவைக்கப்படா வெள்ளை வேஷ்டி சட்டை காற்றில் படபடத்துக்கொண்டிருந்தது. சாப்பிட்டாரா இல்லையா என்பது கூட தெரியவில்லை. கொரோனா பரவலால் நடமாட்டம் கூடாது என்று ஒலிபெருக்கியில் அறிவித்தபடியே வந்த போலீஸ் ஜீப் பார்த்து மளிகைக்கடை சட்டரெல்லாம் உடனே படீரென்று இழுத்துச் சாத்தப்பட நானும் அவ்விடம் விட்டு உடனே நகரும்படி ஆயிற்று.

அன்று இரவு அம்மாவிடம் கடைவீதியில் பழனியப்பனைப் பார்த்ததைச் சொன்னேன். அம்மாவும் மிகுந்த கவலை கொண்டாள்.

"அந்த அண்ணன் என்ன பண்ணும் பாவம்... ஒத்தக்கை ஆளு. கல்யாணம் காட்சி பண்ணியிருந்தாக்கூட பிள்ளகுட்டிக கஞ்சி ஊத்துங்க. அதுவும் பண்ணல... வயசுலயெல்லாம் நாடகம் ஆடுறேன் கலைய வளக்குறேனு ஊர் ஊரா சுத்தனதுதான் மிச்சம். பத்து பைசாவுக்குப் பிரயோஜனம் இல்லாமப் போச்சு. என்னதான் பண்ணப்போறாரோ..?" என்று புலம்பினாள்.

அடுத்த சில நாட்களில் எல்லாம் மழை பிடித்திருந்தது. வானம் எந்நேரமும் கருங்கும்மென்றிருந்தது. காற்றில் எப்போதும் குளிர் இருக்க அடிக்கடி உடல் சிலிர்த்ததை அனுபவித்தேன். மேற்கு வானில் அடிக்கடி வெள்ளைக் கொக்குகள் கூட்டமாய் மிதப்பதைப் பார்த்தேன். கருஞ்சாம்பல் நிற வானில் அக்காட்சி உயிரோவியமாய் உருக்கொண்டு அசைவது போலிருக்கும்.

மழை விட்டு விட்டுப் பெய்தது. தூறலும் இல்லாமல் கனமழையாகவும் இல்லாமல் மிதமாய்ப் பெய்தது. வரட்டாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்திருப்பதாய்ச் சொன்னார்கள். மழைக்குக் கம்மங்கூழ் கிண்ட ஆசைப்பட்ட அம்மா கம்பு வாங்கவென்று ரத்தினம் அத்தை வீட்டுக்குப் போய்விட்டு வந்திருந்தாள். மழைச்சருகையைப் போர்த்தியும் தொப்பலாய் நனைந்திருந்தாள். வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக "பாவம் அந்த அண்ணன்.. வீடு வாசக்கூட இல்லாம இந்த மழையில சீப்படுது. ஊதாக்கலரு பிளாஸ்டிக் தார்ப்பாயைக் கூம்பாச்சியா இழுத்துக்கட்டி உள்ள குளிருப்பிடிச்சு உட்காந்திருக்கு. சுத்திலும் தண்ணி. உள்ள ஒரு பிளாஸ்டிக் குடமும் ஒரு தகரப் பெட்டியும் மட்டும் இருக்கு. சாப்பாட்டுக்கு என்ன பண்ணுமோ ஏது பண்ணுமோ தெரியல. பக்கத்திலயும் ஒரு நாதி எட்டிப் பாக்காது போல. பக்கத்திலயிருந்தாலும் நாம இம்புட்டுக் கஞ்சித் தண்ணி கொடுக்கலாம். அதுவும் இல்ல... இதையும் ரத்தினம் வீட்டுக்குப் போகங்காட்டியும் பார்த்தேன். இல்லனா இதுவும் தெரியாது," என்றபடியே மூச்சு வாங்கினாள்.

அன்று முழுதும் நிம்மதியில்லை. இரவு படுக்கையில் உழன்றுகொண்டேயிருந்தேன். அரிதாரம் பூசி மின்னொளியில் ஜொலிக்கும் அவரின் முகம் மின்சாரமற்ற கும்மிருட்டிலும் மனக்கண்ணில் ஒளிர்ந்தது. மழை விடுவதும் வலுப்பதுமாக இருந்தது. மின்னல் கொடிகொடியாய் பூமியில் இறங்க அதன் ஒளி ஜன்னலில் தாவி வீட்டுக்குள் குதித்து மறைந்தது.

• • •

அம்மா கறி எடுத்துக் குழம்பு வைத்துக்கொண்டிருந்தாள். கொரோனா மட்டுப்பட்டிருந்தாலும் வானம் சொலுசொலுவென ஒழுகிக்கொண்டேதான்

இருந்தது. மணி எப்படியும் மூன்று இருக்கும். இப்போதே இருட்டிவிட்ட தோற்றத்தைத்தான் வெளி கொண்டிருந்தது. பழனியப்பன் மரணத்தை அம்மா சொன்னதிலிருந்து ஏனோ மனப்பாரம் கூடிக்கொண்டேயிருக்கிறது. நான் அவர் மேல் அன்புகொண்டவன் என்பதை அம்மா அறிந்து வைத்திருந்ததனால் நான் வருந்துவேன் என்ற நோக்கில் அம்மா நிறைய விசயங்களைச் சொல்லாமல் மறைக்கிறாளோ என்றும் தோன்றியது. சமையல் முடியும் வரை காலாற அப்படியே ஆற்றங்கரைப் பக்கம் போகலாம் என்றெண்ணிக் குடையோடு வாசலில் இறங்கினேன். அங்கிட்டு நூறடித் தொலைவிலேயே ஆற்றங்கரை என்பதால் சில நிமிடங்களிலேயே அதை அடைந்தேன்.

ஒரு ஆள் மட்டத்திற்கு நாணல்கள் வளர்ந்திருந்தன. ஆற்று நீர் நன்கு தெளிந்து கண்ணாடி போல ஓடிக்கொண்டிருந்தது. எப்படியும் முழங்கால் தண்ணியிருக்கும். ஆற்றின் மறுகரையில் அந்தத் தூறலிலும் யாரோ ஒருவர் தலையில் பிளாஸ்டிக் சாக்கைப் போட்டபடி நான்கைந்து வெள்ளாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்.

இந்த ஆற்றங்கரையில் பழனியப்பனின் கால்படாத இடம் இருக்க முடியாது. இங்குள்ள மரஞ்செடி கொடிகளெல்லாம் அவரின் பாடல்களைக் கேட்டு வளர்ந்தவைகளாகத்தான் இருக்கும் என்று பலவாறாக எண்ணங்கள் அலைபாய்ந்தன.

ஒரு சிறு மேடறிக் கீழிறங்கியவனின் கண்களில் எங்கள் ஊர் சுடுகாடு தென்பட்டது. பெரும்பாலான சமாதிகள் தூர்ந்து போயிருந்தன. சிலவற்றில் அடையாளத்திற்குக் கற்களை அடுக்கி வைத்திருந்தார்கள். அந்த மழையிலும் ஒரு சமாதி சற்று மேடாய் மாலைகள் காய்ந்து அழுகிய நிலையில் தென்பட்டது. அது நிச்சயம் பழனியப்பனைப் புதைத்த இடமாகத்தான் இருக்க வேண்டும். பக்கத்திலேயே சீத்தைமுள் வேலியில் கிழிந்த பிளாஸ்டிக் தார்ப்பாய், அழுக்கு வேட்டியோடு, துருபிடித்த நிலையிலான ஒரு தகரப்பெட்டி பாதி திறந்த நிலையில் கிடந்தது. உள்ளே பட்டுக்கரைகள் வைத்துத் தைத்த மஞ்சள் நிற ராஜபார்ட் உடை, பவுடர், பொட்டு டப்பாக்கள், சீப்பு கண்ணாடியெல்லாம் வேலியில் கவிழ்ந்த நிலையில் அலங்கோலமாய் அனாதையாய்க் கிடப்பது கண்டு பெருந்துயருக்கு ஆளானேன்.

ஒரு கலைஞனின் சொத்தல்லவா அது. சொத்து என்பதை விட அரிதாரப் பெட்டிதான் ஒரு கலைஞனின் உயிராகவும் இருக்க முடியும். என்ன கொடுமை இது. இந்த அரிதாரப் பெட்டியைக்கூட கைமாற்றிப் பாதுகாக்கவோ, அவரது நினைவாய் எடுத்து வைக்கவோ கூட ஆளில்லாமல்...

மனதில் பெரும் வலி படர்ந்தது. மயக்கம் வருவது போல இருந்தது. ஒரு கல் பிரட்டி விட கவனமற்று நிலை தடுமாறுகையில் கள்ளிக்கட்டாப்பில் இருந்து இரு மயில்கள் வெளி அதிரும்படி படபடத்து மேலெழும்பி எங்கோ மறைந்தன. இருள் கவிந்திருந்தது. அடர் மழை இறங்கும் சத்தம் கிழக்கே பெரும் இரைச்சலாய் கேட்டது. கறிக்குழம்பை இறக்கி வைத்துவிட்டு அம்மா புலம்புவது போலான சித்திரம் மனவெளியில் தோன்றி மறைந்தது.

பெருமழை துரத்தத் துரத்த ஓட்டமும் நடையுமாய் ஊரடைகையில் 'வேப்பமரத்து பாப்பா அவர்கள் இன்று மாலை ஐந்து மணியளவில் இறைவனடி சேர்ந்தார்' என்ற ஒலிபெருக்கி அறிவிப்போடு ஊருக்குள்ளிருந்து ஆட்டோவொன்று சீறியபடி வெளியேறுகிறது. அக்கணமே நின்று திரும்பி ஆட்டோவைப் பதைபதைப்போடு பார்த்துக்கொண்டிருக்கிறேன். அடர்மழை அடித்துப் பெய்யப் பெய்ய இருளில் திசை கிழிக்கும் அதே ஆட்டோவில் இருந்து கசிகிறது...

'இதோ எந்தன் தெய்வம் முன்னாலே... நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே..!'

அம்மையார் ஹைறுநான்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டி 2025

**சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை**


படைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநான்பீவி நினைவு
சிறுகதைப் பரிசுப்போட்டியில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி பா. ஜெயவேல்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17-03-2025

பா. ஜெயவேல்



ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# அறம்... பொருள்... துன்பம்!

கிழக்கு வெளுக்க இன்னும் நேரமிருந்தது. வண்டிமாட்டுக் குளம்படி குழித்தடங்களை ஓடை மணலில் சுரந்த நீர் மெதுவாய் நிரப்பிக்கொண்டிருந்தது. கூரீட்டி கண்கொண்டு ஆதவன் உற்று நோக்கினாலும் வேவு பார்க்க முடியாத அளவிற்குப் பகல் பொழுதில் இருமருங்கிலும் அடர்ந்த மரங்கள் ஓடையை மூடியிருக்கும். இரவுப் பொழுதின் அடர்த்தியைச் சொல்லிட்டு நிரப்ப வேண்டியதில்லை. முன்னிரண்டு சாமத்தில் சப்த சமிக்ஞை அனுப்பிக் கலவிக்குத் துணையைத் தேடிய பாச்சான் பூச்சி சப்தமும், தாடையை ஊதிப் பெரிதாக்கிக் காற்றை உமிழ்ந்து அதிர்வுறச் செய்யும் தவளைகளின் சப்தமும் நான்காம் சாம மத்தியில் ஓய்ந்திருந்தன. ஓடை அடரிருளின் மிரட்சியால் மாடுகள் அடியெடுத்து வைக்கத் தயங்கின.

அடிவயிற்றிலிருந்து 'ஹேய்... ஹேய்...' என அதட்டினான் ராமலிங்கம். ஏகாந்தத்தின் பேரமைதியை மரங்களின் அடர்வுகளில் மோதிச் சிதைத்தது அவனின் குரல். மின்மினிப் பூச்சியைப்போல வாயில் பீடிக் கங்கு சிவப்பொளியை உமிழ்ந்துகொண்டே இருந்தது. ஓடையைத் தாண்டியதும் மாடுகள் விறுவிறுவென நடையெடுத்தன. இதே வேகத்தில் இரண்டு மணிநேரம் போனால் போதும் காலையிலேயே அச்சிறுப்பாக்கம் சந்தையை அடைந்துவிடலாம். கால்கள் வேகமெடுத்தாலும், காளைகளின் நினைவுகளோ காலத்தைப் பின்னிழுக்கத் தொடங்கின.

ஆறு வருடங்களுக்கு முன்னால் மணப்பாறை காளைக்குக் காயடித்து ஜோடி தேடிக்கொண்டிருந்தபோது, இதே சந்தையில்தான் இன்னொரு காளையைப் பிடித்துவந்தான். சாதிக்குச் சாதி, வெள்ளைக்கு வெள்ளை, உயரத்திற்கு உயரம் எனத் தோதாக அமைந்தது ஜோடி. வளர்த்த மாட்டை வலதாகவும், சந்தை மாட்டை இடதாகவும் பூட்டிப் பழக்கினான். உழவுக்கும், வண்டிக்கும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாக

இருந்தன. யாருக்காவது இரவல் கொடுத்தால் மாடுகளை அடித்துவிடுவார்கள் என்பதால் இரவல் பேச்சே இவனிடம் எடுபடாது. வேலையில்லாத பொழுதுகளில் வரப்பில் பிடித்து மேய்ப்பான். காளைகளின் கழுத்து மணிச் சத்தம் அவன் காதுகளுக்கு இனிமையாய் இருக்கும். குளிப்பாட்டுவது, உண்ணிகளை அகற்றுவது, தடவிக் கொடுப்பது என மாடுகளைப் பராமரிப்பதென்பது அவனுக்குத் தனி சுகம். தாயும் பிள்ளையும்போல மாடுகள் அவனிடம் பழகின.

பொங்கல் வந்தால் போதும் மாடுகளுக்குத் திருவிழா கலைவந்துவிடும். ஓடை நீரில் குளிப்பாட்டி, கொம்பு சீவி அதற்கு பெயின்ட் அடித்து, திருஷ்டி போக்க இடுப்பிலும் கழுத்திலும் கறுப்புக் கயிறு கட்டுவான்.



ஓவியங்கள் : அமு.ரஜினிகாந்தன்

பனங்குருத்தோலையில் கொங்கரை, பலூன், கழுத்து மணிப்பட்டை, கொம்புக்கு மணி என மணப்பெண்ணைப்போல அலங்கரிப்பான். சிறுவர்களும் தாவணிப் பெண்களும் இவன் வண்டியில் போட்டிப் போட்டுக்கொண்டு ஏறிக்கொள்வார்கள். நாலு கால் பாய்ச்சலில் வண்டி சீறி ஓடும்போது முகத்தில் பெருமிதம் பொங்கும்.

பங்குனியில் ஒரு நாள் முன்னிரவு. திடீர் விருந்தாளியாக வீட்டிற்குள் நுழைந்தாள் அம்பிகா. லட்சுமிக்கு நெருங்கிய சொந்தம். சங்கதி இல்லாமல் வரமாட்டாள். உறக்கத்திற்கு முன்பாக மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

“கையில வெண்ணெய்யை வச்சிக்கிட்டு நெய்க்கு அலையுற கதையா இல்ல இருக்கு.”

“இன்னாக்கா சொல்ற?”

“கொடுங்காலூர்ல நம்ம பழனியப்பனோட மூத்த பையன் வெங்கடேசன் இருக்கான்ல.”

“ஆமாம், ஏதோ படிச்சுட்டு மெட்ராசுல வேல பாக்குதுன்னு சொன்னாங்க.”

“ஏதோ படிப்பு இல்லடி. இன்ஜினியர் படிப்பு. இப்பவே எட்டாயிரம் வாங்குறான். இன்னும் ஒரு வருஷத்துல பத்தாயிரத்துக்கு மேல கெடைக்குமாம். பையனுக்குப் பொண்ணு பார்க்க ஆரம்பிச்சுட்டாரு பழனியப்பன். பையன் நல்ல உத்தியோகத்துல இருக்கிறதால ஏகப்பட்ட கெராக்கி. காசு பணத்த விட நல்ல யெடத்துல பொண்ணு வேணும்னு சொல்லி இருந்தாரு. டக்குன்னு நம்ம பொண்ணு ஞாபகம் வந்துடுச்சு. அதான் கௌம்பி வந்துட்டேன்.”

“நல்ல யெடந்தான்க்கா. ஆனா அவங்க ரொம்ப எதிர்பார்ப்பாங்களே.”

“அம்பது சவரன்கூட போடாட்டி எப்படி? நமக்கும் கௌரவம் இருக்கு இல்ல.”

“ஏதோ இருவது முப்பதுன்னா பரவாயில்ல. திடீர்னு அம்பதுக்கு எங்க போறது?” என்றாள் லட்சுமி.

“இருக்குறத போட்டுக் கல்யாணம் பண்ணிடலாம். அவங்க மேற்கொண்டு எதிர்பார்க்கிறத தை மாசம் போடுறேன்னு சொல்லு. மத்தத நான் பேசிக்கிறேன். அடுத்து இருக்கிறது ஒரே பையன்தானே. பெருசா செலவு கெடையாது. அவனுக்கும் நல்ல யெடம் கெடைக்காமலா போயிடும்?

நெலத்தையும் பொண்ணையும் பேசிட்டு சும்மா இருக்கக்கூடாதுன்னு சொல்வாங்க. அப்புறம் உன் இஷ்டம்," என உசுப்பிவிட்டாள்.

ஆவணியில் திருமணம் நல்லபடியாக முடிந்தது. கல்யாணம், தீபாவளி வரிசை என எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்து முடித்திருந்தான் ராமலிங்கம். ஆனால் சீர்வரிசையில் பதினைந்து சவரன் மட்டுமே பாக்கியாக நின்றது. இதனால் மனக்கஷ்டம் வரக்கூடாது என நிலத்தை அடமானம் போட்டுக் கடன் வாங்கியிருந்தான். மார்கழி முதல் வாரத்திலேயே தந்தி அடித்ததுபோல வந்திருந்தாள் அம்பிகா.

"கல்யாணம் நல்லா பண்ணதால உன்மேல அவ்ளோ மதிப்பு வச்சிகீறாரு சம்பந்தி. ஏதோ ஆண்டவன் புண்ணியத்துல நல்ல யெடமா அமைஞ்சுடுச்சு" எனப் பேச்சை ஆரம்பித்தாள்.

"அமாங்க்கா... உன் கைராசி அப்புடி!" எனப் பூரித்தாள் லட்சுமி.

"மீதி நகையைப் பத்தி அவங்க இதுவரைக்கும் வாயைத் தொறக்கல. அதுக்கு முன்னால நாம முந்திக்கிட்டா கௌரவமா இருக்கும். அதான் ஒரு எட்டு பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்."

"கையில கொஞ்சம் இருக்கு. மிச்சத்துக்கு மாட்ட வித்துப் பொங்கலுக்கு சீர் செஞ் சிடலாம்னு இருக்கேன். அதோட குலதெய்வம் கோயிலுக்குப் போய் வந்தா மொத்த பாரமும் தீர்ந்திடும்," என்றான் ராமலிங்கம்.

"ஒன்னப் பத்தி எனக்குத் தெரியாதாப்பா. நாக்கு சுத்தமான ஆளாச்சே..." எனப் பல்வரிசையில் தாராளம் காட்டினாள் அம்பிகா.

மாட்டுச் சந்தையில் கூட்டம் குறைவாகவே இருந்தது. ராமலிங்கத்தின் மாட்டைப் பார்க்க வந்தவர்களெல்லாம் பல்லைப் பிடித்துப் பார்த்தார்கள்; சுழி சுத்தம் பார்த்தார்கள்; கண்ணில் பூ விழுந்திருக்கிறதா எனப் பார்த்தார்கள்; நொண்டுகிறதா என நடக்கவிட்டுப் பார்த்தார்கள். எல்லாம் சரியாக இருப்பதாக திருப்திபட்டுக் கொண்டாலும், அவர்களின் விலை முனியனின் விலைக்கு நெருங்கவில்லை.

"பதினைஞ்சுன்னா சொல்லு. இப்பவே முடிச்சுடலாம். ரெண்டு மூனு வியாபாரத்தை முடிச்சுட்டு வர்றேன்" என நழுவினார் கோனேரிகுப்பத்துத் தரகர். அடுத்தடுத்து வந்தவர்களும் அடிமாட்டு விலைக்குப் பேரம் பேசினார்கள். விழுப்புரத்திலிருந்து வருவதாகச் சொன்ன வியாபாரி மிடுக்காக இருந்தார். ஒருவழியாக பதினேழாயிரத்திற்கு அவரிடம் விலை படிந்தது. புதிய நூறு ரூபாய்க் கட்டு ஒன்றும் ஐந்நூறு ரூபாய் கட்டிலிருந்து பதினான்கு தாள்களையும் எண்ணிக் கொடுத்தார் வியாபாரி. சரிபார்த்துவிட்டு மாட்டின் கயிற்றை அவிழ்த்துச் சுருட்டிக்கொண்டு, திரும்பினான்.

இவன் போன பாதையையே பார்த்துக்கொண்டிருந்தன மாடுகள். இவனுக்கும் கண்களில் நீர் முட்டிக்கொண்டு நின்றது. பேருந்தில் பயணப்பட்டு வந்தவன் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி ஓடை வழியாக நடக்கத் தொடங்கினான்.

ஓடையெங்கும் காட்டுக் கொடிகள் புதரில் பின்னிக்கொண்டிருந்தன. கருத்துப் பழுத்த சுரட்டுமுள் பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. வெடித்துச் சிதறி எஞ்சிய விதைகளை வைத்திருக்கும் குன்றிமணி விதைகள் கொடிகளில் கறுப்பும் சிவப்புமாகத் தெரிந்தன. புதர் மண்டிய மரங்களின் இடுக்குகளில் இருள் சன்னமாக இருந்தது. சணல் பஞ்சு உருண்டைகளைப் புதர் இடுக்குகளில் செருகி வைத்தாற்போல அணில் கூடுகளும், அதையொத்த தோற்றத்தில் கொம்புத் தேன் கூடுகளும் ஆங்காங்கே இருந்தன. சில்வண்டுகள் ஓயாமல் சப்தமெழுப்பிக்கொண்டிருந்தன. தவிட்டுக் குருவிகள் கிளைக்குக் கிளை தாவி விளையாடிக்கொண்டிருந்தன. உயர்ந்த மரக்கிளை அடர்வுகளில் ஆந்தைகள் பாதையை நோட்டமிட்டுக்கொண்டிருந்தன. தேங்கிய



ஊற்றுநீரில் தலைப்பிரட்டைகளும் மீன் குஞ்சுகளும் நீந்தித் திரிந்துகொண்டிருந்தன. ஓடையைக் கடந்து வீடு வந்ததும், சாமி படத்திற்கு முன்பாக பணத்தை வைத்து வேண்டிக்கொண்டான். அந்தி சாய்ந்ததும் பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்தாள் லட்சுமி.

அடுத்த சில தினங்களில் ராமலிங்கத்தைத் தேடிவந்த முத்துசாமி, "நீ கொடுத்ததுல, ஒரு நோட்டு கள்ள நோட்டு. ஒரக்கடைக்காரன் திருப்பிக் கொடுத்துட்டான்," என நூறு ரூபாய்த் தாளை நீட்டினார்.

"கள்ள நோட்டா?!"

"ஒனக்கு யார் கொடுத்தது?"

"சந்தையில மாட்டு வியாபாரி ஒருத்தன் கொடுத்தான்."

"ஆள் வெவரம் தெரியுமா?"

"ஏதோ விழுப்புரம்னு சொன்னான்."

"முன்னபின்ன தெரியாதவங்களாண்டலாம் பணத்தை வாங்குறப்ப பார்த்து வாங்கணும். இதோட அவன் சந்தை பக்கமே வரமாட்டான். அடுத்த ஊருக்குக் கௌம்பிடுவான். அவன் கொடுத்த பணத்தையெல்லாம் கொண்டு வா பார்க்கலாம்."

ராமலிங்கம் லட்சுமியை நோக்கினான். சந்தையில் வாங்கி வந்த மொத்தப் பணத்தையும் அவள் எடுத்துவந்தாள். எல்லா தாள்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் நூறு ரூபாய்த் தாள்களில் இரண்டும், ஐந்நூறு ரூபாயில் இரண்டும் எனக் கள்ள நோட்டுகளைத் தனியாக தரம் பிரித்து எடுத்துக் கொடுத்தார் முத்துசாமி. கள்ள நோட்டுகளைக் கண்டறியும் முறைகளையும் சொல்லிக் கொடுத்தார். அவனுக்கு முகம் வியர்த்தது. தலையில் இடி விழுந்தாற்போல தரையில் அமர்ந்தான்.

"நாளைக்கு நகைக் கடைக்குப் போகலாம்னு இருந்தேன்."

"நல்ல வேளை... அங்க போனா போலீஸ் கேஸ்னு போயிருக்கும்."

"பேங்க்குல மாத்தித் தருவாங்களா?"

“பிரச்னைய வெல கொடுத்து வாங்காத. பரபரப்பா வியாபாரம் ஆகுற யெடமா பார்த்து எப்படியாவது மாத்திடு. இதப்பத்தி வெளியில யார்கிட்டேயும் மூச்சுவிடக்கூடாது,” என எச்சரித்துவிட்டுப் போனார் முத்துசாமி.

கள்ள நோட்டுப் பிரச்சனையைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என அவற்றைத் தனியாகப் பத்திரப்படுத்திக்கொண்டான். பொங்கலுக்குச் சீர் வரிசை செய்யும் வேலையில் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தான். பொங்கல் முடிந்த பிறகுதான் மனம் நிம்மதிகொண்டது. ஆனாலும், கள்ள நோட்டுகள் அடிக்கடி கண்களில் வந்துபோயின. திடீரென ஒரு ஞாயிற்றுக்கிழமை தனியாக எடுத்து வைத்திருந்த அந்தப் பணத்தை எடுத்துக் கீழ்பாக்கெட்டில் வைத்துக்கொண்டு சந்தைக்குக் கிளம்பினான். சந்தையில் கூட்டம் நிரம்பியிருந்தது. ஏமாற்றிய மாட்டு வியாபாரியைக் கண்கள் தேடின. சந்தை முழுக்க அலைந்து திரிந்தும் அவன் புலப்படுவதாக இல்லை. நீண்ட நேரத்திற்குப் பிறகு கடைத்தெருவிற்கு வந்தான். பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த மளிகைக் கடையில் சாமான்களை வாங்கிக்கொண்டு வேட்டிக்குள் கையைவிட்டுக் கீழ்பாக்கெட்டிலிருந்து ஓர் ஐந்நூறு ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்தான்.

“இது கள்ள நோட்டு. எங்க ஏமாந்தீங்க. வேற ஏதாவது கொடுங்க.”

“கள்ள நோட்டா?” புதிதாகக் கேட்பவனைப்போல முகம் பாவித்தான். பிறகு அந்தத் தாளை வாங்கி இரண்டு முறை திருப்பிப் பார்த்துவிட்டு, “இப்பதான் வாங்குனேன். நல்லவேளை சொன்னீங்க. வாங்குன யெடத்துலேயே இத கொடுத்துடுறேன்” எனச் சட்டை பாக்கெட்டிலிருந்த நூறு ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்தான். கூட்டமாக இருந்த டீக்கடைக்குச் சென்று, டீயைக் குடித்துவிட்டு, இரண்டு வடையைச் சாப்பிட்டான். கீழ்பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினான்.

“சில்ற இல்லை. ஒண்ணேகால் ரூபா சில்றையா கொடுப்பா.”

டீக்கடைக்காரனின் பதில் ஏமாற்றத்தைத் தந்தது. வேறுவழியில்லாமல் மேல் பாக்கெட்டிலிருந்து சில்லறையைக் கொடுத்துவிட்டு நகர்ந்தான். அடுத்ததாக அவன் உத்தேசித்திருந்தது ஒயின் ஷாப். இதுவரை அதன் வாசலைக்கூட அவன் கால்கள் மிதித்ததில்லை. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கடைக்குள் நுழைந்தான். பிராண்ட் பெயரைக்கூடச் சொல்லத் தெரியாமல் இரண்டு பிராந்தி பாட்டில்களை வாங்கிக்கொண்டு கீழ்பாக்கெட்டில் வைத்திருந்த ஐந்நூறு ஒன்றை எடுத்துக் கொடுத்தான். மீதிப் பணத்தை வாங்கிக்கொண்டு கடையைத் திரும்பிப் பார்க்காமல் அங்கிருந்து நகர்ந்தான். ஓர் ஐந்நூறு ரூபாயை மாற்றிவிட்டதில் நான்கு பெண்களில் ஒரு பெண்ணைக் கட்டிக்கொடுத்ததுபோல இருந்தது. மளிகைச் சாமான்களோடு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். பையில் பிராந்தி பாட்டில்களைக் கண்ட லட்சுமி அதிர்ந்தாள். “இது என்ன புதுப்பழக்கமா இருக்குது!” என்றவளுக்கு மெதுவாக விளக்கிச் சொன்னான்.

அடுத்த நாளில் மதுராந்தகம் சந்தைக்குச் சென்றான். பரபரப்பாக இருக்கும் கடைகளில் நுழைந்து பொருட்களை வாங்கினான். சில்லறையாக வேண்டும் என்றதும், “வேண்டாம்” என நழுவிவிடுவான். சில கடைகளில் ‘கள்ள நோட்டு’ எனத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். இதனால் வேறு பணத்தைக் கொடுத்துத் தேவையில்லாத பொருட்களை வாங்க நேரிட்டது. ஹோட்டல், டீக்கடை எனச் செலவும் அதிகரித்தது. பல இடங்களில் முயன்றும் கொண்டு வந்த இரண்டு நூறு ரூபாயும், ஓர் ஐந்நூறும் கீழ் பாக்கெட்டில் அப்படியேதான் இருந்தன.

கூட்டம் அதிகமாகக் கூடும் இடம் எது என நினைத்தபோது சினிமா பக்கம் திரும்பியது பார்வை. அலங்கார் தியேட்டரில் ரஜினியின்

‘தர்மதுரை’ படம் ஓடிக்கொண்டிருந்தது. கூட்டத்தில் நுழைந்து கீழ்பாக்கெட்டிலிருந்த நூறு ரூபாயைக் கொடுத்து டிக்கெட் எடுத்தான். மீதி சில்லறையை வாங்கிக்கொண்டு அரங்கிற்குள் நுழைந்தான். நம்பிக்கைத் துரோகமும் சமூகச்சீரழிவும் அப்பாவி மனிதனை எப்படியெல்லாம் சிதைத்துச் சீரழிக்கிறது எனக் காட்சிகள் சித்தரிக்கப்பட்டிருந்தன. அவை ரசிகர்களை உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்த்தின. வில்லன்களுக்குள் ஏற்பட்ட போட்டியில் கள்ள நோட்டு அடிக்கும் போட்டியாளனைப் போட்டுக்கொடுப்பான் இன்னொரு வில்லன். ‘கள்ள நோட்டு அச்சடித்த குற்றத்திற்காகவும், தங்கம் கடத்துனதுக்காகவும் உங்களை நான் அரெஸ்ட் செய்யறேன்’ எனக் கமிஷனர் வில்லன்களைத் துப்பாக்கி முனையில் அதிரடியாகக் கைது செய்வார். இந்தக் காட்சிகளைக் கண்டபோது கீழ் பாக்கெட்டில் இருந்த பணம் பெரும் பாரமாய் இருந்தது. கூட்டத்தில் தன்னை யாராவது பார்க்கிறார்களா என ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டான். இப்படியொரு நல்ல படத்தைக் கள்ள பணத்தில் பார்க்க நேரிட்டது மனதுக்குள் உறுத்தியது. தஞ் சாவூர் தலையாட்டி பொம்மை, கிளிக் கூண்டு எனத் தேவையில்லாத பொருட்களோடு வீட்டிற்குத் திரும்பினான்.

இரண்டு நாள் கழித்து ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு திண்டிவனம் சென்றான். பெட்ரோல் பங்கில் இரண்டு லிட்டர் பெட்ரோலை நிரப்பிக்கொண்டான். பதினேழு ரூபாய் பணத்திற்குக் கீழ்பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாயைக் கொடுத்தான். ‘இது கள்ள நோட்டு. எங்கிருந்து வர்றீங்க?’ என்றதும் ஊர்ப் பெயரை மாற்றிச் சொல்லிவிட்டு மேல்பாக்கெட்டிலிருந்து பணத்தைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினான். துணிக்கடை ஒன்றில் வேட்டியும் சட்டைத் துணியும் எடுத்துக் கொண்டு கீழ் பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு அவசர அவசரமாகத் திரும்பினான். மீண்டும் பெட்ரோல் பங்க்கைக் கடக்கும் போது திக்திக் என்றது மனம். இப்போது ஓர் ஐந்நூறு ரூபாய் மட்டுமே அவனிடம் மிச்சமிருந்தது. அதைத் தொட்டாலே கைகள் நடுக்கம் கொள்ள ஆரம்பித்துவிடுகின்றன. முகம் இறுக்கமாகி வார்த்தைகள் தடுமாறத் தொடங்கிவிடுகிறது. அவனின் பயமே அவனைக் காட்டிக் கொடுத்துவிடும் என்பதைப்போல உணர்ந்தான். இப்போதைக்கு அதை வெளியில் மாற்றக்கூடாது என உறுதிகொண்டான்.

அடுத்தநாள் டீக்கடைக்குச் சென்றபோது, அங்கே அரசியல் வாடை பலமாக வீசியது. ஈரான்ஈராக் போர் உச்சத்திலிருந்த காலம் அது. சதாம் உசேனும் அணு ஆயுதமும் தமிழ்ப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாயின. அவை உள்ளூர் டீக்கடையிலும் பேசுபொருளாயின.

“பொண்ணைக் கட்டிக் கொடுத்தாச்சு. புதுமாப்பிள்ளை மாதிரி ஜாலியா சுத்திக்கிட்டுத் திரியறியே மாமா,” என நக்கலடித்தான் சுப்பிரமணி.

“கல்யாணம் பண்ணிப்பாரு. கஷ்டம் இன்னான்னு தெரியும்.”

“உன் கஷ்டத்தைப் பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். ஞாயித்துக்கெழம ஒயின் ஷாப்புக்குப் போயிருக்க. திங்கக்கெழம மேட்னி ஷோ ரஜினி படம் பார்த்துட்டு வந்திருக்க. ரெண்டு நாளைக்கு முன்னகூட புதுத்துணி எடுத்துக்கிட்டு வந்திருக்க. உன்னைப் பார்த்தா கஷ்டத்துல இருக்குற மனுஷன் மாதிரியா தெரியுது!”

வலக்கை கண்ணாடி டம்ளரில் இருந்த டீ லேசாகத் தளும்ப ஆரம்பித்தது. மெதுவாய் அதைப் பெஞ்சில் வைத்தவன், “குடிக்கிற பழக்கம் எனக்கு இல்லைன்னு இந்த ஊருக்கே தெரியும். வேலை செய்யறவங்க கேட்டாங்களேன்னு ஏதோ ஒரு நாள் வாங்கியாந்து கொடுத்தேன். மத்தியானம் பஸ்ஸு இல்லையேன்னு சினிமாவுக்கு போனேன். இதெல்லாம் ஒனக்கு எப்புடி தெரியும்?” என்றான்.

“யாரோ பார்த்தவங்க சொன்னாங்க.

ஏதோ சந்தோஷமா இருந்தா சரிதான்.”

“திருச்சியில நாலு கோடி ஹவாலா பணம் சிக்கிருச்சி பார்த்தியா?” எனச் செய்தித்தாளைக் காண்பித்தார் வாத்தியார்.

“ஹவாலா பணம்னா, கள்ளப் பணமா?” என அவர் பக்கம் திரும்பினான் சுப்பிரமணி.

“ஹவாலா பணம்னா பேங்க்குக்குத் தெரியாம வெளிநாட்ல இருந்து கள்ளத்தனமா கொண்டு வர்றது. கறுப்புப் பணம்னா கவுர்மெண்ட்டுக்குக் கணக்கு காட்டாம கள்ளத்தனமா வச்சிருக்குற பணம். அரசாங்கம் அடிக்க வேண்டியதை நாமே திருட்டுத்தனமா அடிச்சிக்குறது கள்ள நோட்டு. மாட்டினா அவ்ளோதான். கள்ள நோட்டு அடிக்கிறது தேசத் துரோகம். கள்ள நோட்டுன்னு தெரிஞ்சு வீட்ல வச்சிருக்கிறதும், யாருக்காவது கொடுக்கிறதும்கூட குற்றம்தான். ஜாமீன்கூட கெடைக்காது. பத்து வருஷம் உள்ள போக வேண்டியதுதான்.”

“போன வாரம்கூட மருதாடு சந்தையில கள்ள நோட்டு வச்சிருந்த ரெண்டு பேரை போலீஸ் புடிச்சிட்டுப் போயிடுச்சாம் வாத்தியாரே.”

“இப்பல்லாம் நாட்ல எவனையும் நம்ப முடியல. வெள்ளையும் சொள்ளையுமா ஊரைச் சுத்தித் திருட்டுப் பசங்களா திரியறானுங்க.”

டீக்கடையில் வாயைக் கொடுக்காமல், சட்டையிலிருந்து சில்லறையைக் கொடுத்துவிட்டு நகர்ந்தான் ராமலிங்கம். கள்ள நோட்டு பற்றிய பயம் மனத்தில் வேரூன்றத் தொடங்கியது. வீட்டிற்குச் சென்றதும் அந்தத் தாளை மட்டும் பத்திரப்படுத்தி ரகசிய இடத்தில் வைக்கச் சொன்னான்.

திடீரென ஒருநாள் அவன் வீட்டின் முன்பாக போலீஸ் ஜீப் வந்தது. ஜீப்பில் வந்தவர்கள் திபுதிபுவென இறங்கி வீடு முழுக்க சல்லடை போட்டு அலசினார்கள். பீரோவிலிருந்தும், பெட்டியிலிருந்தும் கட்டுக் கட்டாய்க் கள்ள நோட்டுகளை எடுத்தார்கள். ராமலிங்கத்தின் கைகளில் விலங்கை மாட்டித் தரதரவென இழுத்துச் சென்று ஜீப்பில் ஏற்றினார்கள். கதறி அழுதாள் லட்சுமி. “என்னை விட்டுடுங்க.. நான் எந்தத் தப்பும் செய்யல” எனக் கதறினான் அவன்.

நள்ளிரவு தூக்கத்திலிருந்த லட்சுமி பதறியெழுந்தாள். “ஒன்னுமில்லை, கெட்ட கனவு” எனச் சொல்லிவிட்டுப் படுத்தான். விபூதியைக் கொண்டுவந்து அவன் நெற்றியிலிட்டுப் படுத்தாள் லட்சுமி. அதன் பிறகு அவன் இமைகள் மூடவேயில்லை.

‘முத்துசாமிக்கும் லட்சுமிக்கும் மட்டும்தான் விஷயம் தெரியும். ஊருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. சினிமாவுக்குப் போனதெல்லாம் எப்படியோ ஊரில் இருப்பவனுக்குத் தெரிந்து விடுகிறதே’ என நினைத்துக் கவலைப்பட்டான். இந்த விவகாரத்தில் மாட்டிக்கொண்டால் செய்தித்தாளில் பெயர் வரும், ஊரில் தனக்கு உள்ள மதிப்பும் கெட்டுப் போகும் என்பதை நினைக்கையில் அவனுக்குப் பயம் அதிகரித்தது. தான் ஏமாற்றப்பட்டதற்கு



சகமனிதர்களை ஏமாற்றுவதென்பது எப்படிச் சரியாகும். இது அறமல்ல என்பதை உணர்ந்தான். குற்ற உணர்வு நெஞ்சைக் குத்திக்கொண்டே இருந்தது.

அன்று விடுமுறைக்காக வந்திருந்தான் சங்கர். “அப்ரண்டிஸ் முடிஞ்சுடுச்சு. இதோட கம்பெனியில எப்ப கூப்பிடுறாங்களோ அப்பத்தான் போகமுடியும். துபாய்ல வேலைக்குப் போலாம்னு எங்கூடப்

ஓவியங்கள்: அமு.ரஜினிகாந்தன்

படிச்சவங்க சொல்றாங்கப்பா” என்றான்.

“உனக்கு எது சரின்னு படுதோ அதை செய்” என விருப்பத்தைச் சொன்னான் ராமலிங்கம்.

இப்போதெல்லாம் புதிய மனிதர்களைப் பார்த்தாலே அவனுக்கு மனம் பயம் கொள்கிறது. எதையும் உளறிவிடக்கூடாது என்பதற்காகவே பழகியவர்களிடம்கூட பேச்சுக் கொடுக்கத் தயங்கினான். இதனால் தேவையில்லாமல் வெளியில் செல்வதைக்கூட தவிர்த்துக்கொண்டான். திடீரென ஒரு நாள், ”ராமலிங்கம் வீடுதானே இது?” எனக் காக்கி உடையணிந்து வந்த காவலர் கேட்டார். “தோட்டத்துல இருக்கார். கூட்டிட்டு வர்றேன்” என்றாள் லட்சுமி. போலீஸ் வந்திருப்பதாகத் தகவல் சொன்னதும், அவனுக்கு அடி வயிற்றைக் கலக்குவதுபோல இருந்தது. விஷயம் தெரிந்து வந்திருப்பார்களா, சந்தேகத்தில் விசாரிக்க வந்திருப்பார்களா என மனம் பயம்கொண்டது. துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, காவலர் முன்பாக வந்து நின்றான்.

“கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்கு.”

“எதுக்கு சார்?!”

“பையன் பாஸ்போர்ட் விஷயமாத்தான்.”

விவரங்களைக் கேட்டறிந்த பின்பாக “சாயங்காலம் ஸ்டேஷன் வந்து லட்டர் வாங்கிக்குங்க,” எனச் சொல்லிவிட்டுச் சென்றார். அப்போதுதான் அவனுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

“சங்கர் வெளிநாட்டு வேலைக்குப் போறதுக்கு முன்ன ஒரு தடவை குலதெய்வம் கோயிலுக்குப் போய் வந்திடலாம். அதுதான் மனசுக்குக் கொறயா இருக்குது,” என்றாள் லட்சுமி. அவனுக்கும் அது சரியாகப்பட்டது. மகளும் மாப்பிள்ளையும் ஊருக்கு வந்திருந்தார்கள். குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று சிறப்பு அபிஷேகம் செய்து, பொங்கலிட்டுப் படையலிட்டார்கள். எல்லாப் பிரச்சனையும் இன்றோடு தீரணும் என மனக் கவலைகளைச் சொல்லி வேண்டினான். உண்டியலில் காணிக்கையிட்டான். நீண்ட நாட்களாக மனத்தில் மலைபோல் இருந்த பாரம் இறங்கியதுபோல இருந்தது. அடுத்த நாளே மகளும் மாப்பிள்ளையும் புறப்பட்டுச் சென்றார்கள்.

“ஏங்க.. பீரோவுல வச்சிருந்த அந்தப் பணத்தை எடுத்தீங்களா?”

“அத வச்சு கடன் ஒன்னுத்த அடைச்சுட்டேன்.”

“யாருக்கு?”

“பச்சையம்மாவுக்கு!”

“அடப்பாவி மனுஷா.. சாமிக்குப் போய் கள்ள நோட்டுக் காணிக்கை போட்டிருக்கியே, அடுக்குமா ஒனக்கு? கோயிலு இன்னா குடிக்கிற யெடமா இல்ல கூத்தடிக்கிற யெடமா? இந்தக் காரியத்த செய்யறதுக்கு முன்ன பொண்ணு வாழ்க்கையைக் கொஞ்சம் நெனச்சுப் பார்த்தியா?” எனப் பூஜை அறைக்கு ஓடினாள். “ஏதோ தெரியாம செஞ்சிட்டாரு. அந்தப் பணத்துக்கு ஈடா வேற பணத்தைப் போடுறேன் தாயீ,” எனக் கற்பூரத்தை ஏற்றிக் கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.

“உனக்குத்தான் இது கள்ள நோட்டு. என்னைப் பொருத்தவரைக்கும் அந்த நோட்டோட மதிப்பு ஐந்நூறு ரூபாய். இந்த நாட்டைத் தாண்டிட்டா நம்ம காசு செல்லாது. மேல இருக்கிற சாமிக்கு எப்படிச் செல்லும்? கடவுளோ, கழுதையோ மனுஷனோட எல்லாப் பணமுமே காகிதம்தான்,” தீர்க்கமாகச் சொல்லிவிட்டுக் கழனியை நோக்கி நடந்தான்.

மாடுகளின் மணிச்சத்தம் காதுகளில் இதமாய் ஒலித்தது.

அம்மையார் ஹைநூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டி 2025


**சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதை**


படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைநூன்பீவி நினைவு
சிறுகதைப் பரிசுப்போட்டியில்
சிறப்புப் பரிசு பெற்ற
படைப்பாளி சந்துரு மாணிக்கவாசகம்
அவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்

17-03-2025

சந்துரு மாணிக்கவாசகம்



ஓவியம் : அமு.ரஜினிகாந்தன்

# நகுலனின் முதல் நாள்

நேற்றிரவு மனமுடைந்து போன சுமதியும் சரவணனும் இன்னும் சமநிலைக்கு வந்தபாடில்லை.

நள்ளிரவு நேரத்தைப் பற்றியெல்லாம் யோசிக்கத் தோன்றாமல், தன் தந்தை கேசவமூர்த்திக்கும் ஃபோனைப் போட்டு விசும்பி வைத்திருந்தாள் சுமதி. ஒரு விநாடிகூட தாமதிக்காமல், கிடைத்த வண்டியைப் பிடித்து அவசர அவசரமாக தஞ்சையிலிருந்து கிளம்பி அதிகாலையிலேயே சென்னை வந்திறங்கியிருந்தார் அவர்.

இப்பொழுது காலை மணி எட்டு பதினைந்து. தயங்கியபடியே நகுலனின் அறைக்கதவைத் தட்டச் சென்ற சுமதியை, 'வேணாம் விடு. அவனா எழுந்திருச்சு வரட்டும்' எனத் தடுத்தார் கேசவமூர்த்தி.

தினமும் ஐந்து, ஐந்தரைக்கெல்லாம் எழுந்து ஜாகிங் சென்றுவிடும் நகுலன், இன்று இன்னமும் அறையைவிட்டு வெளியே வரவில்லை. இத்தனைக்கும் நேற்றிரவு ஏழு மணிக்கெல்லாம் தோசை ஊற்றச்சொல்லிச் சாப்பிட்டுவிட்டு அறைக்குள் சென்று அடைந்துகொண்டிருந்தான்.

ஒன்று, இரவு முழுவதும் அவன் உறங்காமல் விழித்திருந்திருக்கவேண்டும். அல்லது வழக்கமான நேரத்தில் விழித்து, வெளியே வரப் பிடிக்காமல் உள்ளேயே முடங்கியிருக்கவேண்டும்.

நேற்று..

இதேநேரம்.. சரவணனும் சுமதியும் எப்படியிருந்தார்கள் தெரியுமா..?

நேற்றுதான் நகுலன் பணியில் சேரவேண்டிய முதல் நாள். வீட்டுவாசலில் அரசு வாகனம் வந்து நின்று, ஓட்டுநர் வணக்கம் வைத்தபொழுது சரவணனுக்கும் சுமதிக்கும் பெருக்கெடுத்த மகிழ்ச்சியும் பெருமிதமும் இருக்கிறதே.. அப்பப்பா..!

உச்சபட்ச சந்தோஷத்தில் படபடப்புடனே திரிந்துகொண்டிருந்தார்கள் இருவரும். பலமுறை பாத்திரங்களைத் தவறவிட்டாள் சுமதி. மகனுக்கு வாழ்த்து சொல்வதற்காக வந்த அழைப்புகள் அனைத்திற்கும் உதடுகள் துடிக்க நன்றி சொல்லிக்கொண்டிருந்தான் சரவணன்.

சாதாரணமாகவே அது ஒரு பெருமகிழ்ச்சியான நிகழ்வென்றாலும், அவர்கள் இருவரின் உறவு வட்டத்தில் படிப்பை முடித்த வேகத்தில் இப்படி சார்பதிவாளர் அளவிற்குப் பணி ஆணை பெற்ற இளைஞர், இளைஞிகள் எவருமில்லை

என்பது கூடுதல் பெருமையாக இருந்தது அவர்களுக்கு.

முதல் நாள் மாலையில் சரவணனின் நண்பர் காளிகாம்பாள் கோவிலிலிருந்து எலுமிச்சம்பழத்துடன் கொண்டு வந்து கொடுத்துச் சென்றிருந்த குங்குமத்தை நகுலன் கிளம்புவதற்கு முன்னதாக புன்னகையுடனும் கலங்கிய கண்களுடனும் மிகச்சன்னமாக நெற்றியில் வைத்துவிட்டிருந்தாள் சுமதி.

புதிதாக வாங்கியிருந்த, அளவில் பெரிதான பல அடுக்கு ஹாட்பேக்கில் அவன் விரும்பி உண்ணும் அசோகாவையும் செய்து வைத்திருந்தாள். அசோகாவிற்கென பிரத்யேகமாக நேரம் செலவழிக்க வேண்டியிருந்ததால் சற்று சீக்கிரமாகவே எழுந்து சமையல் வேலையைத் துவக்கியிருந்தாள்.

நகுலனுக்கான சாப்பாட்டுக்கூடையை வாகனத்திற்கு எடுத்துச்செல்ல சரவணன் முற்பட்டபோது, ஓட்டுநர் அவசரமாய் கையை நீட்டியபடியே ஓடி வந்தார். சரவணன், ‘விடுங்க விடுங்க. இதெல்லாம் உங்க வேலையில்ல. நானே வச்சுர்றேன்’ என எத்தனை சொல்லியும் கேட்கவில்லை. பிடுங்காத குறையாக வாங்கிச்சென்று பவ்யமாக வாகனத்தில் வைத்துக்கொண்டார்.

தேர்வில் வெற்றிகரமாகத் தேர்வானபொழுதும் சரி, இப்பொழுது பணி ஆணை வந்தபொழுதும் சரி, தனது மகிழ்ச்சியை விட பெற்றோரின் அதீத மகிழ்ச்சியே நகுலனுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது. தனது தாத்தா பாட்டிகளின் ஆசீர்வாதத்தையும் ஃபோன் வழியாகவே பெற்றுக்கொண்டிருந்தான்.

மாலையில், பணி முடிந்து வருபவனை வரவேற்று முதல்நாள் அனுபவங்களைக் கேட்க ஆவலோடு காத்திருந்தார்கள் சுமதியும் சரவணனும். ஊழியர்களிடமிருந்து அவனுக்குக் கிடைத்த வாழ்த்து வரவேற்பெல்லாம் எப்படி, முதல்நாள் பணியை அவன் எப்படி உணர்ந்தான், ஒரு இளம்வயது அதிகாரியாய் அவன்மீதான மக்களின் பார்வையும் அணுகுமுறையும் எப்படியிருந்தது.. இப்படி ஏகப்பட்ட கேள்விகளை வைத்துக்கொண்டு காத்திருந்தார்கள்.

அவன் வாகனத்திலிருந்து இறங்கியவுடன் வாசலில் ஆரத்தியெடுத்தபிறகே உள்ளே அழைத்து வரவேண்டும் என்றாள் பக்கத்து வீட்டு வசந்தா. சுமதியோ நெளிந்தபடி சரவணனை ஒருமுறை பார்த்துவிட்டு வசந்தாவைப் பார்த்தாள்.

“அதெல்லாம் பண்ணுனா எதாச்சும் சொல்லுவான்க்கா அவன்.”

“அவன் எது வேணும்னாலும் சொல்லிட்டுப் போவட்டும். பண்ணவேண்டியத பண்ணாம வுட்ருவியா? நீ எடுக்கலன்னா வுடு, நானே எடுக்கறேன். ஊர்ல போனதுவந்ததுங்க கண்ணெல்லாம் புள்ளமேல பட்டுருக்காது?”

வசந்தாவே ஆரத்தி தட்டைத் தயார் செய்து எடுத்து வந்தாள். வாசல் நிலையருகே வைத்துவிட்டு, ‘வர்றப்ப ஒரு குரல் குடு’ என்றுவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டிருந்தாள்.

நகுலன் வந்திறங்கினான்.

வசந்தா ஆரத்தி முடித்து, வெற்றிலை மீதிருந்த சூடம் அணைந்துவிடாவண்ணம் சாலையின் மையத்தில் இளஞ்சிவப்பு நீரை ஊற்றிவிட்டு நிமிர்ந்தாள்.

“என்னப்பா, ஆரத்தி எடுத்தவங்களுக்குத் தட்சணையெல்லாம் வைக்கறதில்லியா? கண்டுக்காம போற?” என வம்பிழுத்தாள். சிரிக்காவிட்டாலும் பெயருக்காகவேனும் ஒரு புன்னகையை உதிர்த்திருக்கலாம் அவன். அவளுக்கு என்னவோ போலிருந்தது. சுமதி சொன்னதுபோல் ஆரத்தி பிடிக்காததால் உருவான சலிப்பாக இருக்கலாமெனச் சமாதானப்படுத்திக்கொண்டாள்.

ஆனால், சுமதிக்கும் சரவணனுக்கும் புரிந்தது, அவனுக்குள் ஏதோவொரு பிரச்சனையென்பது. நகுலனின் முகத்தைப் பார்த்ததும் இருவரும் பட்டியலிட்டு

வைத்திருந்த கேள்விகளனைத்தும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயிருந்தன.

"குளிச்சுட்டு வர்றியாப்பா, காபி தர்றேன்?"

"ம்."

மாற்றுத்துணிகளை எடுத்துக்கொண்டு குளியலறைக்குள் புகுந்துகொண்டான்.

"என்னங்க என்னமோ மாதிரி இருக்கான்? குளிச்சுட்டு வந்ததும் விசாரிக்கிறீங்களா?"

"வேணாம் வேணாம். அவனா சொல்றவரைக்கும் எதுவும் கேட்டுக்கவேணாம்."

அமைதியானாள்.

குளித்துவிட்டு வந்தவன் ரிமோட்டை எடுத்துச் செய்திகளைப் போட்டுவிட்டு சோபாவில் அமர்ந்தான். கொலைகள், தற்கொலைகள், பாலியல் வழக்குகள், மனதுக்குப் பிடிக்காத சில அரசியல்வாதிகளின் செய்தியாளர் சந்திப்புகள் என வரிசைகட்டின. சேனல்களை மாற்றிக்கொண்டே வந்தவன், டிஸ்கவரிக்கு வந்து நின்று இரைக்காக மட்டுமே அலையும் விலங்குகளைப் பார்க்கத் துவங்கினான்.

காபியைக் கொடுத்துவிட்டு அருகில் அமர்ந்தாள் சுமதி. அவனது வருகைக்குப் பிறகு வீடு இத்தனை அமைதியாகிப்போகுமென நினைக்கவில்லை இருவரும். சோகமாகிப் போனார்கள். வீட்டில் என்றைக்குமில்லாத நிசப்தம் நிலவுவதை அநேகமாக அவனும் உணர்ந்திருக்கவேண்டும். சுமதியைத் திரும்பிப் பார்த்தான்.

"என்னம்மா.. ஊர்லேர்ந்து எல்லாரும் ஃபோன் பண்ணாங்களா?"

"ஆமாமா.. காலைலேர்ந்து ஒருத்தர் மாத்தி ஒருத்தர் கூப்ட்டுகிட்டேதான் இருந்தாங்க. உனக்கு ஃபோன் பண்ணி வாழ்த்து சொல்லலாமான்னு கேட்டாங்க. நாங்க பண்ணினாலே எடுக்கமுடியாதுன்னு சொல்லிட்டுப் போயிட்டான், இப்ப எதுவும் பண்ணாதீங்கன்னு சொல்லிட்டேன் எல்லார்கிட்டயும்."

"ம்."

மீண்டும் அமைதி. ஊர்ந்துகொண்டிருந்த கருநாகங்களின் கண்களை மிக அண்மைக்காட்சியாகக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

"எதாச்சும் ஐடி கம்பெனிக்கு வேலைக்குப் போயிடலாமான்னு பாக்கறேம்மா."

படபடத்தது சுமதிக்கு. மிடறு விழுங்கி சரவணனைப் பார்த்தாள். வார இதழ் ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்த சரவணன், நகுலனைப் பார்க்காமல் தொடர்ந்து புத்தகத்தையே புரட்டியபடியே இருந்தான். டிவியில் ஓடிக்கொண்டிருந்த காட்சிகளிலிருந்து நகுலனின் மனம் வெளியே வந்திருந்தது. ஆனாலும் கண்கள் அங்கேயே நிலைகுத்தியிருந்தன.

"நான் இப்புடி ஒரு வேலைக்கிப் போகணும்னு எதுக்காக ஆசைப்பட்டீங்கன்னே எனக்குப் புரியல."

"பிரச்சனை என்னன்னு சொன்னீன்னா நல்லாருக்கும் நகுல்" – புத்தகத்தைப் புரட்டியபடியே பேசிய சரவணனின் குரலில் மெலிதாய் ஒரு கோப ரேகை தெரிந்தது.

"ப்ச்.." என்றவன், விளக்கம் கொடுக்கக்கூட விருப்பமில்லையென்பதை உடல்மொழி வாயிலாகக் காட்டினான். ரிமோட்டை டீபிளில் போட்டுவிட்டு, கால்களைத் தூக்கி மடித்து இரு கைகளாலும் கட்டிக்கொண்டான்.

"இந்த வேலையெல்லாம் எனக்கு ஒத்து வராதுப்பா."

புத்தகத்தை மூடி அருகில் வைத்துவிட்டுக் கைகளைக் கட்டிக்கொண்டபடியே அவனைக் கூர்மையாகப் பார்த்தான் சரவணன். நகுலன் சரவணனையோ சுமதியையோ பார்க்காமலே பேசினான்.

"ரொம்ப கௌரவமான வேலையா இருக்கும்னு கற்பனை பண்ணிக்கிட்டதெல்லாம் என்னோட தப்புதான் போலருக்கு. பிராக்ட்டிகல் லைஃபுக்கு ஒத்துவராத

கற்பனை.”

“சரிப்பா. புடிக்கலன்னா ரிஸைன் பண்ணிடு.”

சரவணனின் பதிலில் அதிர்ந்தாள் சுமதி.

“ஏங்க, பிரச்சனை என்ன ஏதுன்னு விசாரிச்சு சரி பண்ணனும்னு இல்லாம நீங்கபாட்டுக்குப் பொசுக்குன்னு ரிஸைன் பண்ணிடுங்கறீங்க? என்னாச்சு உங்களுக்கு?”

“பின்ன? இதெல்லாம் கட்டாயப்படுத்தி உக்காரவச்சு செய்ற வேலையா? அடுத்தடுத்த லெவலுக்குப் போகணும்னு ஈடுபாட்டோட செய்றது. அது இல்லேன்னா அந்த போஸ்ட்டால அவனுக்கும் யூஸ் இல்ல, அந்த போஸ்ட்டுக்கும் மரியாதை இல்லாமத்தான் போவும். கடமைக்காக சோத்தைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டு வந்துகிட்டிருந்தா அவனைச் சுத்தி இருக்கவங்களும் மக்களும்தான் கஷ்டப்படணும். எதுக்கு அந்தப் பாவம் நமக்கு? அவன் சொல்றமாதிரி வேற ஏதாச்சும் வேலைக்கே போவட்டும்.”

நகுலன் பதிலெதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தான்.

“டேய், என்னதான்டா பிரச்சனை உனக்கு? அதையாச்சும் சொல்லித் தொலையேன். ஏன் இப்புடி மொதநாளே ஒரு குண்டைத் தூக்கிப்போட்டு வேதனைப்படுத்தற?”

“எதுவும் சொல்ற மனநிலைமையில நான் இல்லம்மா. நீ போயி தோசையை ஊத்து.”

வழக்கத்தைவிட வேகமாகவே சாப்பிட்டு முடித்தவன், முகத்தை ‘உம்’மென்று வைத்துக்கொண்டபடியே, ‘சரி, நான் படுக்கறேன்’ என்றுவிட்டு பதிலைக்கூட எதிர்பார்க்காமல் அறைக்கதவை மூடிக்கொண்டான்.

அவர்களிருவருக்கும் இரவு உணவும் உறக்கமும் பிடிக்காமல் போயிருந்தது. கண்ணீரோடு படுக்கையில் கிடப்பவளைச் சரிசெய்ய சிரமப்பட்டான் சரவணன்.

“தேவையில்லாம எதையாச்சும் போட்டு ஒலப்பிகிட்டுக் கெடக்காத. நார்மலாயிருவான் விடு.”

“எனக்கென்னமோ அப்புடி தோணலங்க. இவ்ளோதூரம் கஷ்டப்பட்டதெல்லாம் வீணாப்போயிருமோன்னு பயமா இருக்கு. அவன் ஏன் இப்புடி பேசறான், என்ன பிரச்சனைன்னு ஒண்ணுமே புரியமாட்டேங்குதேங்க. இந்த மாதிரி ஒரு வேலைக்கி போயிட்டாங்கற சேதி ஊர்பூரா வேற பரவியிருச்சு. இவன்பாட்டுக்கு வேலையைத் தூக்கிப் போட்டுட்டு வந்துட்டான்னா ஆளாளுக்கு ஒரு கதை கட்டமாட்டாங்க? ஊர் மூஞ்சியில எப்புடிங்க முழிக்கறது?” அழுதாள்.

“தேவையில்லாத கற்பனையெல்லாம் பண்ணிக்கிட்டிருக்காத. உங்கப்பாவுக்கு ஃபோனைப் போட்டு விஷயத்தைச் சொல்லு.”

இப்படித்தான் முடிந்திருந்தது இந்த வீட்டின் நேற்றைய இரவு.

மணி எட்டே முக்காலை நெருங்கிக்கொண்டிருந்தது.

அறையின் தாழ்ப்பாள் நீக்கப்படும் ஓசை கேட்டது. மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டுவிட்டுப் பேச்சை நிறுத்தினார்கள். கேசவமூர்த்தி செய்தித்தாளை எடுத்து வைத்துக்கொண்டார். சரவணனும் சுமதியும் அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருப்பதுபோல் காட்டிக்கொள்ளத் தயாரானார்கள்.

அறையிலிருந்து வெளியே வந்தவனுக்குக் கேசவமூர்த்தி பெரும் ஆச்சரியமாக இருந்தார். புன்னகை அரும்பியது அவனுக்கு.

“தாத்தா, என்ன தாத்தா திடீர்னு சொல்லாமகொள்ளாம கௌம்பி வந்துருக்கீங்க.”

“ஆமாய்யா.. நேத்து காலையில நீ வேலைக்கிப் போறதுக்கு முன்னாலயே வந்துடணும்னுதான் ஆசை. முடியாம போச்சு. என்னோட வேலை பாத்த நெருங்குன கூட்டாளி ஒருத்தனோட பேத்திக்குக் கல்யாணம். என்ன காரணம் சொன்னாலும் ஒத்துக்கமாட்டான். அதான்,

வரமுடியாம மாட்டிகிட்டேன்."

"ஓஹோ.. அம்மாச்சியை ஏன் கூட்டிட்டு வரல?"

"உன் மாமன்காரன் வுடமாட்டேங்கறானே. இங்க வந்தா பேரன்கூடவே உக்காந்துகிட்டுத் திரும்பி வரமாட்டேங்கறாளாம்" – சொல்லிவிட்டுச் சிரித்தார். "நேத்து மொதமொத ஆபிஸ் போறப்ப நானும் கூடவே வந்து பாக்கலாம்னு நெனைச்சேன், ஒரு நாள் லேட்டாயிருச்சு. சரி சரி கௌம்பு. ஆபிஸுக்கு நாழியாவுது" என்றார்.

நகுலன் அமைதியாக சரவணனையும் சுமதியையும் ஒருமுறை பார்த்துவிட்டுத் தொடர்ந்தான்.

"இன்னைக்கி லீவு போடலாம்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன் தாத்தா."

"லீவா? பைத்தியக்காரப் பயலாடா நீ? வேலைக்கி சேர்ந்த ரெண்டாவது நாளே எவனாச்சும் லீவு போடுவானா? அதுவும் ஒரு சப்ரிஜிஸ்ட்ராரு.. இப்பல்லாம் கூட்டம் ஜாஸ்தியா இருக்குன்னு சனிக்கிழமைகூட ஆபிஸ் வைக்கணும்னு ஆர்டர் போட்ருக்காங்க, தெரியும்ல? லீவு போடறானாம் லீவு."

"இல்ல தாத்தா.. அது.."

"மொதல்ல போயி குளிச்சுட்டு வா. மத்ததையெல்லாம் ஆபிஸ் போறப்ப பேசிக்கலாம்."

"எதுவாயிருந்தாலும் இங்கேயே பேசிக்கலாம் தாத்தா. ஆபிஸுக்கெல்லாம் நீங்க வரவேணாம்."

"நீ கூட்டிட்டுப் போவலன்னாலும் கவலையே படமாட்டேன். பப்ளிக் மாதிரி நைஸா வந்து பாத்துட்டுதான் வரப்போறேன். நீ கௌம்பற வழிய பாரு."

"உங்களுக்கு எப்புடி தாத்தா புரியவைக்கறது?" – சிறுவனைப் போல் முகத்தைச் சுளித்துக்கொண்டான்.

"எதுவும் புரியவைக்க வேணாம். ஆபிஸுக்கு வந்து உன் பக்கத்துல சேரைப் போட்டு உக்காந்துக்குவேன்னு எதுவும் பயப்படாத. சும்மா ஒரு ரெண்டு நிமிஷம். ரெண்டே நிமிஷம்தான். நீ அந்த சீட்ல உக்காந்தவுடனே பாத்துட்டுக் கௌம்பிடுவேன்."

அதற்குமேல் நகுலனால் எதுவும் பேசமுடியாமல் போனது. அவர்மேல் அதீத பாசம் வைத்திருப்பதைப் போலவே அவரது வார்த்தைகளுக்கும் மரியாதை கொடுத்துப் பழகியிருந்தவன் அவன். எழுந்து துண்டை எடுத்துக்கொண்டு குளிக்கக் கிளம்பினான். சற்றே நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டாள் சுமதி.

சீரான வேகத்தில் வண்டியைச் செலுத்திக்கொண்டிருந்த டிரைவரிடம், "தம்பி.. அந்த ஈஸ்வரன் கோயிலுகிட்ட கொஞ்சம் ஓரமா நிறுத்துய்யா" என்றார்.

"என்ன தாத்தா, கோயிலுக்கு போவணுமா?"

"ஆமா. ரெண்டு பேரும்தான்."

தரிசனத்தை வேகமாக முடித்தவர், கொடிமரத்தின் முன்னே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிவிட்டு அப்படியே சம்மணமிட்டு அமர்ந்தார்.

"உக்காருய்யா."

நகுலன் அருகில் அமர்ந்தான். சில விநாடிகள் கழிந்தது.

"வேலையில எதாச்சும் பிரச்சனையாய்யா ஒனக்கு? எதுக்கு இன்னைக்கி லீவு போடறேன்ன?" – நேரடியாகவே கேட்டார்.

குனிந்துகொண்டு நகத்தை நோண்டினான்.

"தாத்தாகிட்ட சொல்றமாதிரி இருந்தா சொல்லு. இல்லன்னா வேணாம்."

"ரகசியம்லாம் ஒண்ணும் இல்ல தாத்தா. எனக்கு இந்த வேலை புடிக்கல. அவ்ளோதான்."

"புடிக்கலையா?"

"ஆமா தாத்தா. பேருதான் பெருசு. வேலை என்னமோ ஃபைனான்ஸ் கம்பெனி கலெக்ஷனுக்குப் போறமாதிரி இருக்கு."

"என்னய்யா சொல்ற?"

“இந்த ஆபிஸுக்கு வேலைக்கி வந்துகிட்டிருக்கற ஒருத்தர்கூட மக்களுக்காக வேலை செய்யணும்கற எண்ணத்துல வரல தாத்தா. காசு காசு காசுதான். ஆபிஸுக்குள்ள நுழையற ஒவ்வொருத்தரையும் பணமாத்தான் பாக்கறாங்க. மாச சம்பளம் வரலன்னாகூட கவலைப்படமாட்டாங்க போலருக்கு. அவ்வளவு காசு பொழங்குது.”

“ஒரு கையெழுத்துக்கு இவ்வளவுன்னு ட்ரெய்னிங் லெவல்ல இருக்கற என்கிட்டயே பேரம் பேச ஆரம்பிச்சுட்டாங்க. இன்னும் போகப்போக என்னென்னல்லாம் செய்யச் சொல்லுவாங்களோ தெரியல. இந்த ஆபிஸ்லேர்ந்து மாசாமாசம் இவ்வளவு வரணும்னு மேலேர்ந்து டார்கெட் வேற ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்களாம். அந்த ‘மேல’ யாருன்னுதான் தெரியல. அந்தக் கலெக்‌ஷனுக்கும் நான்தான் பொறுப்பெடுத்துக்கணுமாம். சொல்லுங்க தாத்தா, இந்தமாதிரி கேவலமா சம்பாதிக்கறதுக்காகவா விழுந்து விழுந்து படிச்சு குரூப் எக்ஸாம் பாஸ் பண்ணிட்டு வந்தேன்? இந்த வேலைக்கிப் போறேன்னு ஊரெல்லாம் பெருமை, போய்ட்டு வந்ததும் ஆரத்தி வேற.”

அமைதியாக இருந்தார் கேசவமூர்த்தி.

“ஒரு பேப்பர் டேபிளுக்கு வந்தா, அது ஒழுங்கா இருக்கா இல்லியான்னு பாத்து ஓகே பண்ணணும், இல்லன்னா ரிஜெக்ட் பண்ணணும். ஆனா, அதெல்லாம் எதுவும் நடக்கறதில்ல தாத்தா. எந்த பேப்பர் வந்தாலும் அதுல இருக்கற பிரச்சனையை வச்சு, அதுக்குத் தகுந்தமாதிரி ஒரு ரேட்டு ஃபிக்ஸ் பண்ணி வேலைய முடிச்சு அனுப்பறாங்க. இந்த மட்டமான ரப்பர் ஸ்டாம்ப் வேலைக்கி நான் எதுக்கு? இங்க வேலை செஞ்சு நான் என்னத்த சாதிக்கமுடியும்னு நெனைக்கறீங்க, சொல்லுங்க.”

பெருமூச்சு விட்டுக்கொண்டார்.

“நீ சொல்றதெல்லாம் கரெக்ட்தான்யா. இல்லன்னு சொல்லல. ஆனா, இந்தப் பிரச்சனை எந்த டிபார்ட்மெண்ட்ல, எந்த ஆபீஸ்ல இல்ல சொல்லு? பப்ளிக்கே அதுக்கெல்லாம் பழகிட்டாங்கப்பா. யாராச்சும் அங்கொருத்தரு இங்கொருத்தருதான் கம்ப்ளெய்ண்டு அது இதுன்னு போறாங்களே தவிர, மீதி ஜனங்க பூரா குடுக்கவேண்டியத குடுத்து வேலைய முடிச்சுட்டுப் போவணும்னுதான பாக்கறாங்க?”

“இந்த நியாயமெல்லாம் வேலைக்கே ஆவாது தாத்தா. என்னாலயெல்லாம் இந்தக் கூட்டத்தோட சேர்ந்துகிட்டுக் கேவலமா கைநீட்டவும் முடியாது, அடுத்தவன் பண்றதை வேடிக்கை பாத்துகிட்டுச் சும்மாவும் இருக்கமுடியாது. அந்த சீட்ல இருந்தேன்னா தேவையில்லாத பிரச்சனைங்கதான் வரும்.”

“ம்.. கரெக்ட்டு. அதைத்தான் நானும் சொல்றேன். பிரச்சனை பண்ணு. இந்தமாதிரி ஆபிஸுங்கதான் நாம யாருன்னு மொத்த ஊருக்கும் காட்றதுக்கான சரியான எடம். கெடைச்சுருக்கற வாய்ப்பை வுட்றாதன்னு சொல்றேன்.”

“கொஞ்சம் க்ளியரா சொல்லுங்க தாத்தா.”

“கொஞ்சம் இல்ல. சொல்றதுக்கு நெறையவே இருக்குய்யா. உனக்குதான் போர் அடிச்சுரும்னு பாக்கறேன்.”

“தாத்தா.. லைஃப்ல முக்கியமான விஷயத்தையெல்லாம் நீங்கதான் எனக்குப் புரியறமாதிரி சொல்லிக் குடுத்துருக்கீங்க. எப்பவுமே போரடிச்சதில்ல. ப்ளீஸ் தாத்தா.”

“அடுத்தவன் மாதிரி நீயும் கையை நீட்ற ஆளா இருந்தா, வழக்கமான ஒரு கவர்மெண்ட் சர்வன்ட்டா, பத்தோட பதினொன்னா காணாமதான் போவ. உன்னோட பலமே சரியா இருக்கணும்னு நெனைக்கறதுதான்யா. யாரையும் பாத்துப் பயப்படாம நீ நீயாவே நின்னு காட்டு. நியாயமா இருக்கறதுக்கு எதுக்காகப் பயந்து ஓடணும், சொல்லு? நியாயவாதியால மட்டும்தானே தைரியமா நிக்கமுடியும்?”

“நாங்க திருச்சியில இருந்த காலத்துல, நிஜமான ஹீரோவையெல்லாம் நேரடியாவே பாத்துருக்கேன்யா. நான் மட்டும்

இல்ல, மொத்த ஊருமே பாத்து வாய் பொளந்து நின்னுச்சு. சாதாரணமா வந்து போய்கிட்டிருந்த கலெக்டருங்களுக்கு நடுவுல சாந்தா ஷீலா நாயர்னு ஒருத்தங்க வந்தாங்க. ஐ.ஏ.எஸ். பாஸ் பண்ணினதுக்கப்பறம் அங்கதான் அவங்களுக்கு முதல் கலெக்டர் போஸ்ட்."

"ஒரு தியேட்டர் திறக்கறதுக்கு முன்னாடி, அவங்க ரோட்டை ஆக்கிரமிச்சுக் கட்டியிருந்த காம்பவுண்டு, கேட்டையெல்லாம் எடுக்கச் சொல்லி எச்சரிக்கை குடுத்துருந்தாங்க. ஆனா, அதை ஒரு விஷயமாவே எடுத்துக்காம திறப்பு விழா வச்சாங்க அவங்க. நாம இந்த வேலைக்கிப் புதுசா வந்துருக்கோமே, என்ன பண்றதுன்னெல்லாம் அந்தக் கலெக்டரம்மா கொஞ்சங்கூட யோசிக்கல. திறப்புவிழா நடக்கற அன்னைக்கே படையோட போயி ஆக்கிரமிப்பு எல்லாத்தையும் அடிச்சுத் தூக்கி எறிஞ்சுட்டு வந்துச்சு."

"அதேமாதிரிதான் கமிஷனரா வந்த ஸ்வரன்சிங்கும். எல்லாக் கட்சிக்காரனும் அலறி ஓடுவான். எம்.பி, எம்.எல்.ஏன்னு யாரோட பினாமி காண்ட்ராக்ட்டா இருந்தாலும் ரூல்ஸை மீறுனா கேன்சல் பண்ணித் தூக்கி எறிஞ்சுட்டுப் போயிருவாரு. போலீஸ்ல ஹானஸ்ட் அம்பிகாபதின்னு ஒருத்தரு.. இப்புடி சொல்லிக்கிட்டே போவலாம்யா."

"யாரைப் பாத்தும் பயப்படாம ஆக்‌ஷன்ல எறங்குன இவங்களையெல்லாம் அந்த ஊர் மக்கள் இன்னைக்கிவரைக்கும் மறக்காம இருக்காங்கன்னா, அதெல்லாம் எவ்வளவு பெரிய சாதனை, சொல்லு? இந்தமாதிரி எத்தனையோ அதிகாரிங்க இன்னைக்கும் இருந்துகிட்டுத்தான் இருக்காங்க. அவங்கள்ல ஒருத்தனா நீ இருன்னுதான்யா சொல்றேன்."

"அந்த ஆபிஸை உன்னோட கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவா. மக்களுக்கு எது நல்லதோ அதைப் பயப்படாம பண்ணு. நீ வந்ததுக்கப்பறம் ஆபிஸ் மொத்தமும் மாறிப்போச்சுன்னு மக்களைப் பேச வை. இப்புடி பண்றதுனால உனக்கு கீழ வேலை செய்றவங்களுக்கெல்லாம் நீ பெரிய எதிரியா மாறிப் போவ. இந்த எடத்துலேர்ந்து உன்னைத் தூக்கிவிடறதுக்கு என்னென்ன செய்யணுமோ அத்தனை வேலையும் செய்வாங்க. எதைப்பத்தியும் கவலையேபடாத."

"ஒரு கட்டத்துக்கு அப்பறம் நீ போராடவேண்டிய அவசியமே இருக்காதுப்யா. அத்தனை டிபார்ட்மெண்டுக்கும் நகுலன்னா யாரு, எப்புடின்னு தெளிவா தெரிஞ்சுப் போவும். நீ போற எடத்துலயெல்லாம் அவங்களாவே மாறவேண்டிய கட்டாயம் வந்துரும். 'இங்க வேலை செஞ்சு நான் என்னத்த சாதிக்கப்போறேன்'னு கேட்டியே, அந்த சாதனை, இப்புடி ஒரு மாற்றத்தைக் கொண்டுவர்றதாதான் இருக்கும். உன்னை மாதிரி புதுசா, இளசா வர்ற அதிகாரிங்களால மட்டும்தான் இதையெல்லாம் செய்யமுடியும். உன்கிட்டேர்ந்து ரொம்ப எதிர்பாக்கறேன்யா. ஏமாத்திடாத."

நகுலனின் அகம் தெளிந்து முகம் முழுவதுமாக மலர்ந்திருந்தது. பெருமூச்செறிந்தான். அவனது எதிர்மறையான கவலைகள் அனைத்தும் அவனைவிட்டு வெளியேறியது போல் உணர்ந்தார் கேசவமூர்த்தி.

"சரி தாத்தா.. ஆபிஸுக்கு லேட்டாயிருச்சு. கெளம்புவோம்" என்றான்.

புன்னகையுடனே எழுந்த கேசவமூர்த்தி, மீண்டும் ஒருமுறை இறைவனைக் கையெடுத்துக் கும்பிட்டார். 'ஆண்டவா.. இவனது இந்த மனநிலை அவன் ஓய்வுபெறும் வரை தொடரவேண்டும். அவன் வாங்கவிருக்கும் கடன்கள், கட்டவிருக்கும் பங்களா என எதற்காகவும் அவனது மனதை மாற்றி, நான் மட்டுமா வாங்குகிறேன்? என நியாயம் பேச வைத்துவிடாதே'.

நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கும் கொடிமரத்தை வணங்கிவிட்டுக் கிளம்பினார்கள் இருவரும்.

உலக சினிமா

தொடர் 59

கவிஜி



# உணர் அன்பின் பதிவு

**திரைப்படம் :**

**A Tale of Two Sisters**

மருத்துவமனை அறைக்குள் ஒரு செவிலியரால் தாங்கிப் பிடித்தவாறு உள்ளே அழைத்து வரப்படுகிறாள் நாயகி. மருத்துவர் அவளிடம் சில கேள்விகள் கேட்பதில் தொடங்குகிறது இந்தப் படம். அதிரும் தட்டில் இருக்கும் நீருக்குள் மருத்துவரின் கை அலம்பும் முதல் காட்சியிலேயே கனத்த மௌனம் உணர்வோம். தலைமுடி முகத்தில் மறைக்க, உடல் என்ற ஒன்று இல்லாத நடையில் அவளொரு தனி உலகமாக வருகையில்... அம்மட்டும் படத்தின் திரையில் இசை இல்லை. ஒரு தயங்கு நிலை நேர்த்திக்குள் தன்னை விரித்துக்கொள்ளும் அடுத்தடுத்த காட்சிகள் நம்மையும் அரூபமெனத் திரை மேய விடுகின்றன.

மருத்துவமனையில் இருந்து... அழகு மிளிரும் இயற்கை வளம் சூடிய வீட்டுக்குத் திரும்பி வரும் அக்கா... கூடவே தங்கையையும் அழைத்து வருவதில் ஆரம்பிக்கும் காட்சியின் துண்டு அதுவே தூண்டிலாகும் மனோ தத்துவத்தை நமக்கு அவிழ்ப்பதில் அவிழ்வது அதுவென அப்போது நமக்குத் தெரியாது. எப்போது தெரிய வருகிறதோ அப்போது மீண்டும் படம் நம்முள் ஆரம்பிக்கிறது.

நிறுத்தி நிதானமாக.... இருக்கும் இருத்தலின் பாத்திரங்களைத் திரையில் ஏற்றி மாயம் காட்டுவதில் இயக்குனர் இல்லாத மொழியை நமக்குள் கடத்துகிறார். இருக்கும் மொழியோ இதயத்தைப் பிழியும் துக்கத்தின் ரீங்காரத்தை நமக்குள் சொட்டுகிறது. சொல்லப்போனால் இந்தப் படத்துக்கு மொழியே தேவை இல்லை. முழுக்க உணர்வுகளாலும் உணர் அன்பாலும் பின்னப்பட்ட பதிவு.

இரு சகோதரிகள். அக்கா பெயர் சுமி. தங்கை பெயர் சியூன். இவர்கள்தான் கதையின் நாயகிகள். இவர்களைச் சுற்றி நிகழும் சம்பவங்களின் கோர்வையில் அங்கொரு உலகம் சுழலுவதையே இந்தப் படம் நமக்குச் சுழன்று சுழன்று காட்டுகிறது. கண் சிமிட்டும் நேரத்தில் காட்சியின்

கோர்வை விடுபடும் அபாயம் இருக்க... மனம் சிமிட்டவும் விடாத பாத்திர படைப்புகளைப் பின் தொடரும் கவனம் தேவை.

அக்கா தங்கை. ஒரு சித்தி. ஒரு வீடு. கொஞ்சம் பேச்சு. நிறைய மௌனம். ஒரு மாயம். கொஞ்சம் பிரமை. நிறைய நினைவு. அப்பா இருக்கிறார். மனக்கீறல். அவர்கள் தனி. உள்ளப் பிணி. அவளாகும் தான். தானாகும் சித்தி. கடைசி வரை புதிர். கடைசியில் முதல். அழுகை. ஆன்மா. அன்பு. வலி. மரணம். பிணம். துக்கம். தூங்கா நினைவு. அமானுஷ்யம். கனவு. வெறுப்பு. உயிர்ப்பு. அச்சம்... எல்லாம் தாண்டி அம்மா.... என மொத்தப் படமும் மாய யுத்தம் செய்வதை முழுவதுமாக உள் வாங்கிய பிறகு உணர்வோம்... நிழலுக்கும் நிஜத்துக்கும் இடையே இரு சகோதரிகளின் வாழ்வும் சாவுமென ஒரு புதிருக்குள் பூத்திருக்கும் சின்னஞ்சிறு பூக்களின் கதை இதுவென.

இக்கதையின் மையம் அம்மாவாக இருக்கிறது. அவளின் இருப்பும் இல்லாமையும் நடத்தும் ஞாபக மறதியின் கூடு விட்டுக் கூடு பாயும் துயரம் யாருக்கும் தாங்கொணாத் தவிப்பையே தரும். சகோதரிகளுக்குக் கால துக்கமாக மாறும் சம்பவத்தின் அடிப்படைக்கு இழப்புகளே துளிர்விட்ட தோகையாக இருக்கின்றன. தாயின் மரணமும் அது கொண்ட காரணங்களும் பிள்ளைகள் இருவரையும் என்ன செய்கிறது என்ற முடிச்சுகளை நாமும் அவிழ்ப்பதற்குப் பதிலாக போட்டுக்கொண்டே இருக்கிறோம். இறுதிவரை இதயத்தின் தும்மலை அடக்கவே முடிவதில்லை. இறுதியிலும் இறப்பின் தீவிரம் உணர்ந்த பிறகும் இருக்கும் தேகத்தில் இன்னொரு உயிருக்குக் கூடு தேடும் இக்கதையின் நியாயம்.

அம்மாவைப் போலவே விசிலிலேயே ஹம் பண்ண முயற்சி செய்கையில் ஒரு மாயத் தாலாட்டு அங்கே நிகழ்வதை உணர முடியும். சித்தி வளர்க்கும் கிளி செத்துப்போவதில் ஆரம்பிக்கும் அவ்வீட்டின் காயாத தழும்பு.

காணக் காண... காணாமல் போகும். கண்டவை ஒன்றுமில்லை. விவரிக்க இயலாத் துக்கத்தில்... படக்கென விரித்துப் பறக்கும் சிறகில்லாப் பறவை இந்த இரு சகோதரிகளில் ஒருத்தி. ஒருத்தி இருக்கிறாள். இன்னொருத்தியும் இருக்கிறாள். யார் யாரிடம் என்பது திரைக்கதை. சித்தியின் கொடுமையில் இருந்து தங்கையைக் காப்பாற்றும் ஒரு அக்காவின் கதை என்றும் சொல்லலாம். தங்கையைக் காப்பாற்றும் ஒரு அக்காவே சித்தியின் நிழலோ என்றும் யோசிக்கலாம். தவிப்புக்கும் தகிப்புக்கும் இடையே மானுட மனதின் திரைகள் அடுத்தடுத்து அவிழும் அல்லது கிழியும் ஒரு ஞாபகப் பிழையென்றும் விவாதிக்கலாம்.

தங்கைக்கு அக்காவே ஆதாரம். ஆகாரம் வேண்டும் என்றாலும் அக்காவிடம்தான் கேட்பாள். அன்புக்கும் அழுகைக்கும்கூட அக்காதான் வேண்டும். அம்மாவின் இடம் எப்போதுமே அக்காவுக்குத்தானே. அதுதான் இங்கும் நடக்கிறது. பயந்து நடுங்கும் இரவுகளில் அக்காவின் நெஞ்சோடு முகம் புதைத்துத் தூங்குகிறாள். அம்மாவின் நினைவு ஆட்கொள்ளும் பொழுதுகளில் அக்காவின் கைகள் பற்றியே தன்னைத் தேற்றுகிறாள். உன்னை நான் கை விடுவதே இல்லை என்ற அக்காவின் கைகள் எப்போதும் தங்கையின் கைகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டுதான் இருக்கின்றன. சக உதிரிக்கு... தானே உயிராக இருப்பது பேரன்பின் மகத்துவம்.

அம்மா இல்லாத வீட்டில் இருக்கும் அப்பாவையும் சித்தியையும் இருவருக்குமே பிடிப்பதில்லை. அம்மாவின் இடத்தில் இன்னொரு பெண்ணை வைத்துப் பார்க்க முடியாத மனம் அப்படி ஓர் உறவில் இருக்கும் அப்பாவையும் வெறுக்கிறது. மனித மனம் ஆழமாய் நம்பும் அன்பையும் சரி வெறுப்பையும் சரி.. சரிக்கு நிகராகவே கைக்கொள்ளும். உடல்நிலை சரியில்லாத

அம்மாவைப் பார்த்துக்கொள்ள வந்த செவிலியர்தான் இன்று சித்தியாக இருக்கிறாள் என்ற உண்மை எப்போதுமே கசக்கிறது. அப்பா மருத்துவராக இருந்தும் அம்மாவைக் காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்காமல்... இன்னொரு பெண்ணை அதுவும் செவிலியரையே துணை ஆக்கிக்கொண்ட சம்பவம் எப்போதும் மன்னிக்க முடியாத முள் கூட்டு ஞாபகமெனவே இரு சகோதரிகளுக்கும் இருக்கிறது.

கணவனின் செயல்பாடுகளால் நொந்து அழுத்தம் தாங்காத... உடல்நிலையும் சரி இல்லாத அம்மா ஒருநாள் தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு வீட்டில் இருக்கும் பெரிய அலமாரிக்குள் தூக்கு மாட்டி இறந்து போகிறாள். தற்கொலைதான் என்றாலும் தூண்டப்பட்ட கொலை என்றே ஆகும் சம்பவத்தின் அடுக்கு அந்த வீட்டுக்குள் அலை அடிக்கிறது. சாவுக்கும் சங்கடத்துக்கும் இடையே மாட்டிக்கொண்ட ஆன்ம அலறல் எப்போதும் மாயத் துளியில் இருந்து அந்த வீட்டு மூலைகளில் அவ்வப்போது எழுவது அதன் பிறகு தொடரத் தொடங்குகிறது.

முந்தின இரவில் அமானுஷ்யமான கனவுகளும் கொடூரமான காட்சிகளும் மனதுக்குள் அலையடிக்க... அந்த விடியல் அவர்களுக்கு அச்சத்தில் கொந்தளித்த தனித்த தீவெனத் தெரிகிறது. அன்றிரவு சித்தியின் தம்பியும் தம்பி மனைவியும் விருந்து வருகிறார்கள். எல்லாரும் உணவருந்தும் வேளையில் தம்பி மனைவிக்கு வலிப்பு வந்துவிடுகிறது. கீழே விழுந்து புரண்டு கதறிக் கத்தித் துடிக்கிறாள். அது வலிப்பு மட்டும் வந்தது போல இல்லை. அப்படி ஓர் அலறல். மற்றவர்களுக்கு என்ன செய்வதென்றே புரிவதில்லை. பதற்றமும் பரிதவிப்புமாக ஆளாளுக்குத் தத்தளிக்க... அவள் கதறும் சத்தம்... மிரட்டிவிடும் உடல் வெடிப்பின் காட்சி பிறழ்வாகக் குகைக்குள் இருந்து பாய்ந்து வரும் வெள்ளமென இருக்கிறது. கூடவே கொத்துகொத்தாய் வவ்வால் கூட்டம் கத்திக்கொண்டு வெளி வந்தால் எப்படி இருக்குமோ அப்படி ஓர் அரட்டல்.. அந்த அறையை ஆட்டி வைக்கிறது.



ஒருவழியாக அப்போதைக்குச் சரி செய்யப்பட்டு விருந்தினர்கள் திரும்பி காரில் சென்றுகொண்டிருக்கிறார்கள். அப்போது தம்பி மனைவி தம்பியிடம்... அந்த வீட்டில் என்னவோ இருக்கிறது. நான் கீழே விழுந்து துடிச்சிட்டுருந்தப்ப... சிங்க்கு கீழ ஒரு கோரமான உருவத்தைப் பார்த்தேன்... என்று சொல்கிறாள். கதையின் ஜுவாலை வெக்கையோடு வெளிப்படும் இடம் இது.

ஒருபோதும் சித்தி அம்மாவாக முடியாது. சித்தியின் சித்திரத்தில் அம்மாவின் வண்ணங்கள் எப்போதுமே அழகூட்டுவதில்லை. அக்காவுக்குப்

புரிந்த எதுவுமே தங்கைக்கு உணர முடிவதில்லை. பூடகத்தின் விளிம்பில் சிறு புன்னகையும் மறு கோரமென ஆவதைச் சில காட்சிகளின் தெறிப்பு அற்புதமாக நிகழ்த்தி விடுகிறது. சித்திக்கும் சுமிக்கும் நடக்கும் சம்பாஷணைகளாகட்டும்... நடைமுறை வாழ்வியல் சிக்கல்களாகட்டும்.. எல்லாமே எதிரும் புதிருமாக ஒரு நியாயமும் அநியாயமும் சந்தித்துக்கொள்ளும் புள்ளியில் எப்போது வேண்டுமானாலும் வெடித்துக் கிளம்பக் காத்திருக்கும் ஆழ்மனச் சிதறல்களாக இருக்கின்றன. வெறுப்பின் வழி நிகழும் அசம்பாவிதங்களுக்குச் சாத்தியக்கூறுகள்... அப்படி அப்படியே சித்தியை சுமியாக்கும் சிந்தனை.... சிற்பம் மீறும் உளியின் வெற்றிட உறுமல்.

தங்கையை மூட்டையில் கட்டி சித்தி அடிக்கும் காட்சி நம்மைக் கலங்கடிக்கும். அதுவே அது அப்படித்தானா என்று மருவும்போது நிகழ்ந்துகொண்டிருப்பது என்ன என்ற பதற்றம் நம்மை ஆச்சரியப்படுத்திப் படபடக்கச் செய்யும்.

சித்தியின் கொடுமையோ தங்கை மீது தறிகெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. அதை அப்பாவும் கேட்பதில்லை என்ற கோபம் அக்கா சுமிக்கு. அதனால் தன்னால் மட்டுமே தங்கையைச் சித்தியிடம் இருந்து காப்பாற்ற முடியும் என்ற முழுமையான முடிவுக்கு வருகிறாள். இதன்பிறகு நடந்ததெல்லாம் மாயத்தின் மறுபக்கம். மானுடத்தின் தோல் உரிய மனதெனும் அடுக்குகளின் அடுத்தடுத்த திருப்பங்கள். நிஜமும் நிழலும் சரிக்குச் சமமாக நிற்கும் புள்ளியில் படம் முடிந்துவிடுகிறது. அவிழவே வேண்டாத முடிச்சொன்று படம் முடிந்த பிறகும் இறுக்கிக்கொண்டிருப்பது கனம்.

மெல்லிய நீரோடையாக ஆரம்பிக்கும் இந்தப் படம் கொஞ்சம் கொஞ்சமாக நதியாகி அருவியாகி பிறகு காட்டாறாக மாறுவதைக் கண்கூட காணக் காண விருட்டென்றும் பறக்க முடியாத விருந்துக்கும் இருக்க முடியாத சிறுபறவை கூட்டமாக நாம் மாறுகிறோம். படம் ஆரம்பிக்கும்போதே ஏரிக்கரையில் அமர்ந்து கால்களை நீருக்குள் விடும் காட்சி ஒன்று இருக்கும். அப்படி ஒரு பிரார்த்தனை போல அது. அந்தக் காட்சியே படத்தின் இறுதியிலும் வரும். அப்படி ஒரு மறுதலிப்பு அது.

புதிர் கொண்ட பொக்கிஷத்தில் கிடைப்பதெல்லாம் அன்பு மட்டுமே. அதன் வடிவம் சிதிலமடைந்தாலும் நினைவடுக்குகளில் சேர்ந்துகொள்ளும். தன்னைப் பின்தொடரும் நிழல் ஒன்றுக்கு நிஜம் பூட்டும் தத்துவங்களைக் கொண்டிருக்கும் அக்காவின் மனம் தங்கையின் தோகைக்குச் சித்திரமூட்டுவதைத் துளி நேரமும் கை விடுவதில்லை. யாரும் எதிர்பார்க்காத வளைவில் மீண்டும் முதல் ஒலிப்பானுக்குக் கண்கள் விரியும் நமக்கு இக்கதையின் பயணம் முடிவதே இல்லை.

யார் இருக்கிறார் யார் இருந்தவர் யார் இருப்பார் என்று யாருக்குத் தெரியும். இந்த உலகத்தின் தோற்றமும் மயக்கமும் மானுடத்தின் வாழ்வென நிகழ்ந்து பார்ப்பதை மிரட்சியோடு பார்க்க இதுபோன்ற ஆக்கங்களின் வடிவம் நம்மை எப்போதுமே அழைத்துக்கொண்டிருக்கிறது. நிகழ்த்தி நிகழ்த்திப் பார்த்து.... நிகழ்ந்துவிட்டு நகர்ந்துகொள்ளும் ஒரு மானுடப் பயிற்சியாக இந்தப் படம் செய்யும் மாயம் மகத்தானது. படைப்புகளின் வழியே வாழ்வின் துளியை உற்றுநோக்கும் ஒரு காரணக் கண்ணாடி கிடைத்திருக்கிறது. முகம் பார்க்கத் தொடங்கினாலும் தெரிய ஆரம்பிப்பது என்னவோ அகம்.

அது ஆழத்தின் கொந்தளிப்பு.

மொழி : கொரியன்

இயக்கம் : Kim Jee-woon

ஆண்டு : 2003



# ‘ஆதீண்டுக்குற்றி’
# அறமும் சான்றும்

மேய்ச்சலுக்குரிய ஆடு மாடுகளின் உணர்வை மதிக்கும் செயலாக விளங்கும் ஆதீண்டுக்குற்றி குறித்தும் அதன்வழியான அறச்செயல்பாட்டையும் விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## அறச்செயல்:

பழங்காலத்தில், கோவிலுக்குக் கொடை அளிப்பது, ஏரி, குளங்கள் வெட்டுவது போன்ற அறச்செயல்களில் ஒன்றாக ஆடு மாடுகளின் இயற்கை உணர்வுகளை நிறைவு செய்யும் பொருட்டுக் கல்தூண்களை வைத்துள்ளனர். "ஆதுலர் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறு சமயத்தோர்க்கு உணவு, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம், மகச்சோறு, மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத் தூரியம்; வண்ணார், நாவிதர், வதுவை, பூணூல், நோய் மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், சுண்ணம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தர், மடம், தடாகம், கா, ஆவுரிஞ்சி நடுதறி, ஏறு விடுத்தல், விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல், இச்செயல் முப்பத்திரண்டு அறம் என்ப." இது முன்னோர் வகுத்த 32 அறங்களுள் ஒன்று என சேந்தன் திவாகரம் (ப.170) குறிப்பிடுகின்றது.

## ஆதீண்டுக் குற்றி:

ஆதீண்டுக் குற்றி (ஆ+தீண்டும்+குற்றி) என்பது ஆடு, மாடு போன்ற கால்நடைகள் தங்கள் உடலில் தினவு ஏற்படும்பொழுது உடலைச் சொரிந்துகொள்வதற்காக வைக்கப்பட்ட கல்தான் ஆதீண்டுக்குற்றி ஆகும். கிராமப்புறத்தின் மந்தைகளில் மாடு உரசும் கல் நடப்பட்டு இருக்கும். ஆடு, மாடுகளின் உடம்பில் பூச்சிகளும் கொசுக்களும் தொடர்ந்து கடித்துக்கொண்டிருப்பதிலிருந்து தப்பிக்கவும், பலவிதமான தாவரங்களை உண்ணும்பொழுது உடம்பில் தினவெடுக்கும், அந்தத் தினவைப் போக்கிக்கொள்வதற்காகவும் நடப்பட்ட

கல்தான் ஆதீண்டுக் குற்றி. அக்கற்கள் ஒரு மாடு உரசக் கூடியளவு உயரத்தில் சொரசொரப்பான மேற்பரப்பையுடையனவாக அமைக்கப்பட்டிருக்கும். மேய்ச்சல் நிலங்களுக்கு அருகிலும், குளக்கரைகளுக்குப் பக்கத்திலும் உயரமான கல் நட்டு வைத்தனர்.

மேய்ச்சலுக்காக வெயிலில் சுற்றும் மாடுகள் நீர் நிலைகளை வந்தடைகின்றன. சேற்றினை உடம்பில் பூசிக்கொண்டு கரை ஏறும் மாடுகளுக்குத் தினவைத் தீர்க்க அவை ஆதீண்டுக் குற்றியை நோக்கிச் செல்கின்றன. கிராமப்புறங்களில் முன்பெல்லாம் குடிசை வீடுகளே அதிகமாக இருந்ததனால் ஆடு, மாடுகள் தங்களது உடலை உரசிக்கொள்ள முடியாத சூழலினாலும், மரங்களில் உரசினால் வளர்ச்சி பாதிக்கும் என்பதாலும், உயரமான கல்லை நட்டு வைத்தனர். பசுக்கள் உராய்ந்து தம் அரிப்பை நீக்குவதற்கு ஏற்ப நடப்படும் உயரமான கல்தூண் 'ஆதீண்டு குற்றி' என்று தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பெருஞ்சொல் அகராதி குறிப்பிடுகிறது. 13, 14ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் 'தன்மத்தறி' என்று இக்கல்லைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தர்மத்திற்காக நடப்பட்ட கல் என்பது இதன் பொருள்.

## வேறு பெயர்கள்

ஆதீண்டுக் குற்றி, தன்மத்தறி, நடுதறி, ஆவுரிஞ்சி, ஆவுரிஞ்சு தறி, ஆதீண்டுக் கல், ஆவோஞ்சிக்கல், ஆவுரிஞ்சிக்கல், மாடுசுரகல், தினவுக்கல் என்று பலவாறாகச் சொல்லப்படுகின்றன.

## சங்க இலக்கியங்களில் துறுகல்:

இன்றைய வழக்கிலிருக்கும் தொறுக்கல் எனும் சொல் சங்க காலத்தில் இருந்திருக்கிறது என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. ஆனால் அவற்றிலெல்லாம் 'துறுகல்' என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும்
குன்ற நாடநின் மொழிவல் என்றும்
பயப்ப நீத்தல் என்இவள்
கயத்துவளர் குவளையின் அமர்த்த
கண்ணே" (ஐங்குறுநூறு. 277)

குறவர் தம் வீட்டு முற்றத்தில் ஆடுமாடுகள் உரசிக்கொள்வதற்காகப் பெரிய கல்லை நட்டு வைத்திருப்பார்கள் என்பதைக் 'குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்' என்று ஐங்குறுநூறு சுட்டுகிறது.

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றுங்
காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே"
(குறுந்தொகை. 47)

தலைவன் தலைவியை விரைவில் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற தன் விருப்பத்தை வெளிப்படுத்தும் இப்பாடல் துறுகல் என்பதைக் 'குத்துப்பாறை' என்றே குறிப்பிடுகிறது. கருமை நிறமுடைய பாறையின்மேல் விழுந்து கிடக்கும் மஞ்சள் நிறமுள்ள வேங்கை மலர்களைக் கண்டு தலைவன் புலிக்குட்டி என்று எண்ணி அஞ்சக்கூடும் என்று தோழி கூறுகிறாள். இது 'கல்முட்டுகள்' என்று சொல்லப்படுகிறது. (சுந்தர சண்முகனார், மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள், ப.66)

"துறுகல் அயலது மாணை மாக் கொடி
துஞ்சு களிறு இவரும் குன்ற நாடன்,
நெஞ்சு களன் ஆக, 'நீயலென் யான்' என,
நற்றோள் மணந்த ஞான்றை, மற்றுஅவன்
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோதோழி !நின் வயினானே?"
(குறுந்தொகை. 36)

துறுகல் என்பது உருண்டைக் கல், பாறை என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது.

"கருந்துறுகல் லெனக்கருதிப் பிடியும்
கன்றும்
களிற்றினமும் உடன்உரிஞ்சக் கறையான்

ஏறிப்
பொருந்துமுழைப் புற்றதெனப் புயங்கம்
ஊரப்
பூங்கொடிகள் மரனென்று பாங்கே சுற்றப்
பரிந்துவெயில் நாள்மழைகாள் பனி நாள்
என்று
பாராமல் நெடுங்காலம் பயின்றான்
மண்ணில்
அருந்தவம்முன் புரிந்தோரில் இவனைப்
போன்மற்
றார்புரிந்தார் சிவசிவவென் றரிய வாறே."

ஒற்றைக் காலில் நின்றுகொண்டு நின்ற காலின் துடையில் இன்னொரு காலை ஊன்ற வைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு கதிரவனை விழிக்காமல் பார்த்துக்கொண்டு நிற்கும் பார்த்தனின் தோற்றத்தை மனம் காணல் வேண்டும். அதற்குமேல் அசையாது நிற்கும் கரிய உருவத்தையுடைய விசயனைக் கருந்துறுகல் என்று ஆண்யானைகளும் பெண்யானைகளும் உராயும் காட்சி, அவன் உடலைக் கறையான் புற்று என எண்ணிப் பாம்புகள் ஏறித்தவழும் காட்சி, மரம் என்று பூங்கொடிகள் அவன்மீது படர்ந்து நிற்கும் காட்சி என்னும் விவரிப்பில் துறுகல் குறித்த செய்தி இடம்பெற்றிருக்கிறது (வில்லி பாரதம், அருச்சுனன் தவநிலைச் சருக்கம், 41).

“அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்”– (புறநானூறு. 202:1820)

வேங்கை மரத்தடியில் சற்று நீண்ட கரும்பாறைகள் கிடக்கின்றன. அவற்றின் மேல் வேங்கை இணர்கள் விழுந்து கிடக்கின்றன. இக்காட்சியைப் பாடும் கபிலர் துறுகல் என்பதைக் கரும்பாறை என்று சுட்டுகிறார்..

“தேம்படு சிலம்பின் தெள்ளறல் தழீஇய
துறுகல் அயல தூமணல் அடைகரை"
(நற்றிணை.103:12)

தேன் உண்டாகின்ற பக்கமலை; அதனிடத்தே தெளிவான நீர் சூழ்ந்துள்ள ஒரு வட்டக் கற்பாறை; இப்பாடல் துறுகல் என்பதை வட்டக்கல் என்று சுட்டுகிறது.

“இரும்பிணர்த் துறுகல் தீண்டி வளி
பொரப்
பெரும் கை யானை நிவப்பின்
தூங்கும்” (அகநானூறு. 57;78)

துறுகல்–உருண்டைப் பாறை.

“மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்
பசலை யார்ந்தன குவளையங்
கண்ணே”(குறுந்தொகை. 13)

இப்பாடலில் இடம்பெறும் துறுகல் என்னும் சொல்லுக்கு உருண்டைக்கல் எனப் பொருள் கொண்டு, தன் உடலில் உள்ள புழுதி முற்றிலும் நீங்கும்படிக் கழுவப்பட்ட யானையைப் போலத் துறுகல்லில் உள்ள மாசுகளும் நன்கு கழுவப்படல் வேண்டும் எனப் பொருள் தருகிறார் உ.வே.சா. பிணர் என்பது கல்லில் விளையும் நால்வகை ஊறுகளில் ஒன்று என்றும், இதனை வடமொழியில் ஜர்ஜ்ஜரா என வழங்குவர் என்றும், இதற்குத் தமிழில் சருச்சரை எனப் பெயர் என்றும், இக்காலத்தில் சருச்சரை என்பது சுரசுரப்பு எனப் பொருள் தரும் என்றும் பலவாறு விரித்துரைத்துள்ளார். மேலும் துறுகல், யானைக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

“மழைகழூஉ மறந்த மாயிருந் துறுகல்
துகள்சூழ் யானையிற் பொலியத்
தோன்றும்” (குறுந்தொகை. 279:56)

“கூழை இரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்”
(குறுந்தொகை. 111:45)

“பொருத யானைப் புகர்முகங் கடுப்ப

மன்றத் துறுகல் மீமிசைப் பலவுடன்

ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்”

(குறுந்தொகை. 284:13)

பட்டினப் பாலை. 231–5, மலைபடுகடாம். 129–131, 384; அகநானூறு.57:6–8, இங்கே துறுகல் என்பது பெரிய பாறை அல்லது குண்டுக்கல், சிறுபாறை, நெருங்கின மலை என அறியமுடிகிறது.

**தொறுக்கல்:**

சங்க இலக்கியங்களில் துறுகல் என்று குறிப்பிடப்பட்டதுதான் மக்கள் வழக்கில் ‘தொறுக்கல்’ என்று ஆகியிருக்கக்கூடும். விருதுநகர் மாவட்டம், வெள்ளூர் என்னும் ஊரில் "ஆதீண்டுக்குற்றி" என்றழைக்கப்படும் ‘தொறுக்கல்’ ஒன்றுள்ளது. இது மிருகங்கள் குறிப்பாக மேய்ச்சலுக்குச் செல்லும் ஆநிரைகள் தங்கள் உடலில் ஏற்படும் தினவைத் தீர்க்க நடப்பட்ட கற்களாகும். இதுபோன்ற கற்கள் பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் காணப்படுகின்றன" (விருதுநகர் மவட்ட வரலாறு, ப.123) என்பதை அறியமுடிகிறது.

**ஆவுரஞ்சிக்கல்: தொல்லியல் சான்று**

ஆவுரஞ்சிக்கல் என்பது அதன் பயன்பாடு கருதி ஏற்பட்ட காரணப்பெயராக இருக்கலாம். (ஆ (பசு) + உரைஞ்சுதல்) பழைய தமிழிலக்கிய இலக்கண நூல்களான குற்றாலப் புராணம், சூடாமணி நிகண்டு, கந்த புராணம் முதலியவற்றில் இக்கல் ‘ஆவுரஞ்சுதறி’, ‘ஆதீண்டுக்குற்றி’, ‘மந்தைக்கல்’, ‘ஆவுரிஞ்சிக்கல்’ முதலான பெயர்களால் இனங்காட்டப்படுகின்றது. இது மக்களின் அறச்செயல்களில் ஒன்றாகவும் உள்ளது.

விவசாய உற்பத்திக்காக மாடுகள் வளர்க்கப்பட்ட இடங்களிலெல்லாம் இவ் ஆவுரஞ்சிக்கற்கள் இருப்பதைக் காணலாம். இலங்கையிலும் ஆவுரஞ் சிக்கற்கள் இருப்பதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. “வடமராட்சி – உடுப்பிட்டிக் கிராமத்திலுள்ள 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆவுரஞ் சிக்கல், அக்கிராமத்துப் பெண் ஒருவர் இறந்ததன் நினைவாக அமைக்கப்பட்ட வரலாற்றைக் கல்லில் பொறித்துச் சாசனமாக அமைக்கப்பட்ட நிலையில் தொல்லியல் சிறப்புக்கலை மாணவரான வி.மணிமாறன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. வடமராட்சி, உடுப்பிட்டிப் பிரதேசத்தில்



கண்டுபிடிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டினைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களும் உறுதிப்படுத்தியுள்ளார். தும்பளையில் காணப்படும் சில ஆவுரஞ்சிக்கற்கள் அவற்றை அமைத்துக் கொடுத்தவரின் சமய ஈடுபாட்டைப் பிரதிபலிக்கும் நோக்கில் சூரியன், சந்திரன், வேல், சூலம் முதலான குறியீடுகள் பொறிக்கப்பெற்றுள்ளன. ஆவுரஞ்சிக்கற்கள் இலிங்க வடிவில் அமைக்கப்பட்டதால் அவ்விடங்கள் பிற்காலத்தில் சிவன் ஆலயமாக

மாற்றமடைந்ததற்கான ஆதாரங்கள் உண்டு." (வீரசிங்கம் சிவரூபி, யாழ்ப்பாண வாழ்வியல், ப.68)

"தஞ்சாவூர் டெல்டா பகுதிபோல் காட்சியளித்த வழுக்கையாறு வழியாக நாங்கள் சென்றபோது ஆவுரஞ்சிக்கல், கேணி இரண்டும் அங்காங்கு கண்ணில் பட்டன. கேணிகள் அவ்வழியாக வரும் ஆடுமாடுகளின் தாகத்தைத் தணிக்கின்றன. ஆவுரஞ்சிக்கல் ஏறக்குறைய நான்கு அடி உயரமுள்ள உருண்டையான கற்றூண். ஆடுமாடுகள் உடலை உரசிக்கொள்வதற்காக இது நடப்பட்டிருந்தது. விவசாய நாகரிகத்தின் அச்சாணியாக விளங்கிய கால்நடைகளின் மீது யாழ்ப்பாணத்துத் தமிழர் காட்டிவந்த மனிதநேயத்தின் சாட்சியாக இவை இன்றும் நிற்கின்றன." (பக்தவச்சலபாரதி – வரலாற்று மானிடவியல், பக்.174–175)

உடுப்பிட்டிப் பகுதியில் இருநூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த வீராத்தை எனும் பெண் அந்தக் கிராமத்திற்குக் கேணிகளையும், ஆவுரஞ்சிக் கற்களையும், தண்ணீர்ப் பந்தலையும் தானங்களாக அமைத்துக் கொடுத்துள்ளார். மந்தை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்ட அந்தக் கிராமத்தின் மக்களுக்காக வீராத்தை செய்திருக்கும் பணிகளையும், அதைக் குறித்ததாக அந்தக் கிராமத்தில் நிகழும் வாய்மொழி வழக்காறுகளையும் ஆய்வு ரீதியிலான தகவல்களையும் திரட்டி ஆவணமாக்கும் முயற்சியே சுதீந்திர குமார் வசீகரனின் 'கரும்பவாளி' என்கிற ஆவணப்படமாகும்.

## கல்வெட்டுச் சான்று:

தூத்துக்குடி மாவட்டம், கோயில்பட்டி வட்டம், கடம்பூர் அருகிலுள்ள இளவேலங்கால் பேச்சியம்மன் கோயில் திடலில் உள்ள ஆதீண்டுக்குற்றிக் கல்தூணில் காணப்படும் 13அல்லது 14ஆம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டில், "முதுகுடிநாட்டு இளம்பனமான ராசபுரந்தர நல்லூர் திருவாய்ப் பாடிகளில் குறுமன் குப்பையான மறக்குல மாணிக்க நாடாள்வான் தன்தது" (வரலாறு ஆய்விதழ், 6:20) என்று பொறிக்கப்பட்ட வாசகம் காணப்படுகிறது.

நீர் வளமிக்க பகுதிகளில் விவசாயம் செழிப்பாக இருக்கும். விவசாயம் செழிப்பாக இருக்க ஆடு, மாடுகள் காரணமாகின்றன. அப்படி ஆடு மாடுகள் அதிகமாக இருக்கும் இடங்களில் இந்த ஆதீண்டுக்குற்றியைக் காணலாம். இது துறுகல், தொறுக்கல், ஒரு பெரிய உருண்டை வடிவக் கல், வட்ட வடிவக்கல், பாறை, குத்துப்பாறை என இலக்கியங்களில் குறிப்பிட்டிருப்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

## பயன்பட்ட நூல்கள்:


1. சுந்தர சண்முகனார், மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள், புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பக வெளியீடு, புதுச்சேரி, 1989.

2. செந்தமிழ், மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு, 2010.

3. சிவசுப்பிரமணியன்.ஆ, வரலாறும் வழக்காறும், காலச்சுவடு பதிப்பகம், 2008.

4. பக்தவதசலபாரதி, வரலாற்று மானிடவியல், அடையாளம் பதிப்பகம், 2013.

5. புஷ்பரட்ணம் ப, (பதி.ஆ.,) யாழ்ப்பாண வாழ்வியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 2012.

6. சேந்தன் திவாகரம், தாண்டவராய முதலியார், மநோன்மணிவிலாச அச்சுக்கூடம், சென்னை, 1927.

7. செந்தில் செல்வக்குமரன், மா. முனைவர், சந்திரவாணன் சொ, விருதுநகர் மாவட்ட வரலாறு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2001.

சலீம் கான் (சகா)



1

பைத்தியமில்லை
என்று சொல்ல என்னிடம் ஆதாரமில்லை...
எப்படி, பைத்தியம் என்று சொல்ல
உங்களிடம் ஆதாரமில்லையோ
அப்படியே!

2

என்னை நானே கண்டெடுத்து வருகிறேன்.
அதுவரை யாரும் என்னைத் தேடாதீர்கள்.

கொத்திக்கொண்டிருந்த காக்கைகளிடம்
தீமைக்குத் துணை சென்ற கண்களையும்
நாவையும் தேடி எடுத்துக்கொண்டேன்.

இடதும் வலதுமாக இழுத்துக்கொண்டிருந்த
ஓநாய்களிடம்
இரங்க மறுத்த இரு கரங்களையும்
சேகரம் செய்துகொண்டேன்.

எட்டியுதைத்த கால்களையும்
கவனமாகப் பத்திரப்படுத்திக்கொண்டேன்.

கழுகுகளின் கால்களுக்கடியில்
கனம் ஏறிப்போயிருந்த தலையையும்
வாரி எடுத்துக்கொண்டேன்.

இதோ கிடக்கிறது இரக்கமற்ற என் இதயம்,

இனி எதுவரை
எல்லாவற்றுக்கும் காரணம்
மனம் என்று சொல்லி
தப்பித்துக்கொண்டிருப்பது?

3

இசை மீட்டும் இரவுக் காற்றில் தூங்கி
வழிகிறது

சிறு வெளிச்சத்தில் இரை தேடிப் புறப்படுகிறது
மின்மினிப்பூச்சி...


ஓரமாய் ஒளிந்துகொண்டு தலை
நீட்டிப்பார்க்கிறது சுவற்றில் பல்லி....

குறுக்கும் நெடுக்குமாக சைக்கிள்
ஓட்டிக்கொண்டிருக்கிறது வௌவால்...

தன்வாயால் மாட்டிக்கொண்டு மரண
அறிவிப்பைச் சப்தமிட்டுச் சொல்கிறது
தவளை...

இப்படித்தான் தட்டுத்தடுமாறிக்
கொண்டிருக்கிறது தீ நுண்மிகளிடம் மாட்டிய
மனம்.

கவிதா லட்சுமி



# பாரதியின் சக்திக்கூத்து

## அகம்-அண்டம்-கலவியின்பம் -உயிர்த்தொடர்ச்சி

பாரதியின் கவிதைகள் ஆழமானவை. இந்தியத் தத்துவார்த்தச் சிந்தனை மரபுகள் பலவற்றை எளிமையாக எடுத்தியம்புபவை. கண்ணன் பாடல்கள், சக்திப் பாடல்கள், குயில் பாட்டு என்பவை சிறந்த உதாரணங்கள். பாரதியின் சக்திக்கூத்தும் அவ்வகையே.

சக்திக்கூத்தினை இரண்டு வகையாக உணர்ந்துகொள்ள முடியும்.

- பிரபஞ்சசக்தி இரகசியம் சார்ந்த தேடல்.
- சாக்த்த தத்துவம் பேசும் சக்தி மற்றும் அதன் சிந்தனை வடிவம்

### சாக்த்த தத்துவச் சிந்தனையும் சக்தி வடிவமும்

“அகத்தகத்தகத்தினிலே உள்நின்றாள்.

அவள் அம்மை அம்மை எம்மைநாடு பொய்வென்றாள்”

‘அகத்தகத்தகத்தினிலே’:அகத்தின் அகத்து அகம்.

மனித அகம் என்றாலும் அல்லது இவ் அண்டத்தின் அகமென்றாலும் அதன் மூலத்தை நோக்கி ஆய்ந்தறிந்துகொண்டே செல்லச்செல்ல கிடைக்கும் விடை ‘சக்தி’ (Energy), அறிவியலானாலும் ஆன்மீகமானாலும் இதற்கான விடை சக்தி என்றுதான் சொல்கின்றன.

காலங்காலமாக விடை தெரியாத பலவிடயங்களுக்குப் பின்னால் சக்தி ஒன்று இருக்கின்றது என்ற கருத்தை மட்டும் யாரும் மறுப்பதற்கில்லை. சக்தி, அதுதான் மனித அகத்தையும், அண்டத்தையும் இயங்கச்செய்கிறது. சாக்த மரபு சக்திக்குப் பெண் வடிவம் கொடுக்கிறது. காளி, கொற்றவை போன்ற தெய்வங்கள் இங்கே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. சாக்த மரபுக் கருத்தினையும் தாந்திரீகக் கருத்தினையும் ஒருசேர வெளிக்கொணரும் வகையில் எழுதப்பட்டதே இப்பாடல் என்று கருதமுடியும். சாக்த மரபில் தாந்திரீகச் சிந்தனை ஒரு பாகம்.

“புகப்புகப் புக வின்பமடா போதெல்லாம்

புறத்தினிலே தள்ளிடுவாய் சூதெல்லாம்

குகைக்கு ளங்கே யிருக்குதடா தீபோலேஅது

குழந்தையதன் தாயடிக்குகீழ் சேய்போலே”

இரண்டு விதமான கோணத்தில் உய்த்துணரக்கூடிய வகையில்

எழுதப்பட்டிருப்பதே இப்பாடல் வரிகளின் சிறப்பு.

**கருத்து ஒன்று: அண்டத்து இரகசியம் பற்றிய தேடல்.**

- அண்டத்துள் புகப்புக கிடைப்பது இன்பம். அண்டத்தின் மறைபொருளை, பிரபஞ்ச இரகசியத்தை அதன் ஞானத்தை தேடும் பயணத்திற் கிடைக்கப்பெறும் இன்பம். தேடலினால் முடிவில் கிடைக்கப்பெறக்கூடிய அறிவும், ஞானமும், ஒளிபோல (தீ) விளங்கும். இவ்வகையான தேடல் இன்பம் தரக்கூடியது. இது பற்றிப் பிழை கூறுபவர்களின் கருத்தைப் புறம் தள்ளிவிடு.
- குகை என்பது வடசொல். அகராதி கூறும் மூலக்கருத்து இரகசியம். அண்டத்துள் மறைந்திருக்கக்கூடிய இரகசியங்களைத் தேடும்போது, அங்கே தகித்துக்கொண்டிருக்கக் கூடிய ஞானமானது தீ போன்றது. இது படைப்பும் உயிர்த்தொடர்ச்சியும் பற்றியது.
- இவை அண்டத்திற்கான தேடலாகவும் இருக்கலாம், மனித அகத்தேடல் சார்ந்ததாகவும் இருக்கலாம். அண்டத்தின் பிரதிபிம்பமே அகம்.

**கருத்து இரண்டு: தாந்திரீக வழி சார்ந்து வருவது.**

- இது முழுக்க முழுக்க பாலுறவும் படைப்பும் (கலவியின்பம், உயிர்த்தொடர்ச்சி) சார்ந்து புரிந்து கொள்ளக்கூடியது. ஒருவரில் ஒருவர் புகப்புகப்புக, பொழுதெல்லாம் இன்பம்தான். இது பற்றி இழிவுபடுத்துபவர்களையும் பிழை கூறுபவர்களையும் புறத்தினிலே தள்ளி வைத்துவிடுங்கள் என்கிறது.
- குகை என்ற சொல்லுக்கு அகராதி தரும் விளக்கத்தில் யோனி (பெண்ணுறுப்பு) என்ற கருத்துமுண்டு. தீ என்பது பெண்ணின் கருமுட்டை. இது உயிர்த்தொடர்ச்சி நிகழும் இடமாகும்.
- குழந்தையதன் தாயடிக்குக் கீழ் சேய்போலே என்ற வரிகளை நாம் பதம் பிரித்துப் பார்த்தோமானால், இங்கு தாயடி என்பது, ஒரு குழந்தையினுடைய தாயின் அடி. தாயின் தாய். பின் அவளுடைய தாய் என்று போகக்கூடிய தாய்வழித் தொடர்ச்சி.
- ஒரு பெண் பிறக்கும்போதே இன்னொரு குழந்தையைத் தாங்கி வருகிறாள் என்ற கருத்துபட இவ்வரிகள் வருகின்றன. பெண்ணின் உடலின் தன்மை என்பது உயிர்த்தொடர்ச்சிக்கான அணுக்களைக் கொண்டிருப்பதாகும். ஒரு பெண் பிறக்கும்போதே மற்றொரு உயிரைச் சுமந்தே வருகிறாள் என்ற கருத்துப்பட இவ்வரிகள் இருக்கின்றன. இதைத்தான் சாக்த மரபு சக்திவடிவாகக் கொள்கிறது.

மனித உயிர்களின் உயிர்த்தொடர்ச்சி சார்ந்த இந்த இரண்டாவது கருத்தும் பிரபஞ்ச இரகசியத்தின் ஒரு பாகமாகும்.

இந்த இரண்டு கருத்துக்களும் தொனிக்கவே பாரதி இக்கவிதையை உருவகப்படுத்தியிருக்கின்றான். சாக்த சமயத்தில் இருக்கும் தாந்திரீக வழிபாட்டு மரபு, வஜ்ரஞான பௌத்தத்திலும் காணப்படுகிறது. இவ்விரண்டு மரபுகளும் இதை வெறும் பாலியல் சார்ந்த விடயமாகப் பார்க்காமல் அதற்கு ஒரு தெய்வீகத் தன்மையைக் கொடுத்திருக்கின்றன.

தாந்திரீகம் என்றால் தொழில்நுட்பம் ஒரு வழிமுறை, அல்லது அதீத ஒழுக்கம். உயிரை மீண்டும் மீண்டும் உருவாக்கக்கூடிய திறமை. தாந்திரீகம் என்பது உங்கள்மீது நீங்களே ஆளுமை உருவாக்கிக்கொள்வது என்று குறிப்பிடப்படுகிறது.

காளி சிவனின் உயிர் நீக்கி சிவன் நெஞ்சில் காளி மிதித்து நிற்கும் காட்சியும், பின் அவளே சிவனிற்குச் சக்தி கொடுத்து உயிர்த்தெழ வைக்கும் காட்சியும் ஓவியங்களாகக் காணக்கிடைக்கின்றன.

"மிகத்தகைப்படு களியினிலே மெய்சோர

உளவீரம்வந்து சோர்வை வென்று
மைதேரசகத்தினி லுள்ள மனிதரெல்லாம்
நன்றுநன்றெனநாம் சதிருடனே தாளம்
இசை இரண்டுமொன்றென"

மேற்குறிப்பிட்ட இரண்டு வகைத் தேடல்களினாற் பெறும் இன்பத்தினிலே (களியினிலே) வரும் உடற் சோர்வை, பெற்ற உச்சத்தினால் அல்லது ஞானத்தினால் வரும் பெருமிதம் (வீரம்) வென்றுவிடும்.

தாளமும் இசையும் ஒன்றென இயைந்து வரும் ஆட்டத்தைப் போல, உலகில் உள்ள மனிதரெல்லாம் மெச்சும்படியான விடயமாகத் திகழும்.

"இந்திரனா ருலகினிலே
நல்லின்பம்இருக்கு தென்பார் அதனை
யிங்கே கொண்டெய்தி,மந்திரம்
போல் வேண்டுமடா சொல்லின்பம்
நல்லமதமுறவே அமுதநிலை
கண்டெய்தி"

இந்திரன் உலகு இன்பம் சார்ந்த உலகு என்பது புராணக்கூற்று. அங்குதான் இக்காதல் இன்பங்கள் இருக்குதென்பார். ஆனால் நாமோ இவ்வுலகத்திலேயே அவ்வின்பங்களைக் கொள்வோம் என்கிறான் பாரதி.

காமத்திலும் காதலிலும் வாழ்வினிலும் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் உண்டு. மந்திரம் போன்ற இவ்வார்த்தைகள் வேண்டும். அத்தோடு நல்வழிப்பட்டு மேன்நிலையை, அதன் உச்ச நிலையை அடையவேண்டும் என்கிறான் பாரதி.

இவ் இன்பங்களிலெல்லாம் திளைத்து ஜொலிக்கும் தங்கம் போலத் தகத்தக என்று ஆட மாட்டோமோ. பிரபஞ்ச (சிவ) சக்தியை இசைத்துப் போற்ற மாட்டோமோ?

---

பழமையிற் புதுமையையும், புதுமையிற் பழமையையும் கோர்த்தவன் பாரதி. சுதந்திரப் பாடல்கள், ஆன்மீகம், உலக அரசியல், மொழிப்பற்று, மனம், கலைநயத்தோடு தத்துவார்த்தமும் அறிவியலும் சொன்ன கவி என அவனது சிந்தை விசாலமானது.

நாடு, உலகு என்பதைத் தாண்டி அண்டத்தினின்று அனைத்து உயிர்களுக்குமாகப் பாடினான் என்பதே அவனை மகாகவியென மனங்கொள்ளச் செய்தது. ஆம், 'கவிதை எனக்குத் தொழில்' என்று பாரதி வெறுமனே கூறிவிடவில்லை.

அவனுடைய தேடலும் வாசிப்பும் அளப்பரியன. இன்றைய புலவர்களால் நினைத்துப் பார்க்கமுடியாத அளவு வாசிப்பையும் அது சார்ந்த எழுத்தையும் குறுகிய தனது காலத்துட் கொண்டிருந்திருக்கிறான்.

பாரதியினுடைய எழுத்துக்கள் வேதாந்தமானவை என்ற பார்வையில் வரும் விமர்சனங்களே அதிகமானவை. அவனது எழுத்துக்களை ஆழமாகப் பார்க்கும் ஒருவரால் அவனுடைய பல்பரிமாண நிலையினைத் தரிசிக்க முடியும்.

எந்தப் பாடலில் எத்தகைய தத்துவ விசாரங்களை அவன் பேசியிருக்கிறான் என்று உணர்ந்துகொள்வதற்கு, வாசகர்களிடம் அது சார்ந்த ஞானமும் இருக்க வேண்டும். அல்லால் அவனது வரிகளின் ஆழத்தை உணராத விமர்சனங்களும், புரிதல்களுமே மிஞ்சும். ஒரு வேதாந்தியாக மட்டுமாக அவனை உணரவைக்கும்.

தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமை திறவாமல் இருந்த நிலையில்
தமிழகம் தமிழுக்குத் தகும் உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்
இலகு பாரதிப்புலவன் தோன்றினான்

இன்றைக் காலத்திலும் வேறெந்த கவிஞர்களாலும் தரமுடியாத வாசிப்பனுபவத்தை, தேடலை, ஞானத்தை, எளிமையாக்கித் தருகிறான் பாரதி. இவற்றை உய்த்துணர்ந்து அனுபவித்ததனாலேயே மேற்கண்டவாறு பாரதியை மெச்சுகிறான் பாவேந்தன் பாரதிதாசன்.

---

தொடர் 43

மு.முருகேஷ்

# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை



வாழ்க்கையைத் தொலைப்பது போலத்தான் இங்கே கவிதைகளைத் தொலைப்பதும் நிகழ்கிறது. ஆனாலும் பல நேரங்களில் தேடித்தேடி எப்படியாவது கவிதைகளைக் கண்டடைந்துவிடுகின்றோம். ஆனால், வாழ்க்கையைத் தேடுவதில் தான் நாமே தொலைந்துபோகின்றோம். வாழ்க்கையைக் கவிதைகளின் வழியே கண்டெடுக்கும் பாக்கியமிங்கே மிகச் சிலருக்குத்தான் வாய்க்கிறது. அப்படியான பாக்கியவான்களின் கவிதைகளே நமக்கான ஆறுதலாகவும் தேறுதலாகவும் அமைகின்றன.

எனது நாற்பதாண்டுக்கால இலக்கிய வாசிப்பில் முற்போக்கு, பிற்போக்கு, நவீனம் என்கிற பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லோரது கவிதை நூல்களையும் வாசித்து இருக்கின்றேன். இன்றளவும் வாசித்தும் வருகின்றேன். இதை என்னளவில் கவிதைக்குச் செய்கிற கைமாறாகவும் கருதுகின்றேன்.

அவ்வாறே ஆண்டுதோறும் நடைபெறுகிற சென்னைப் புத்தகக் காட்சியில் நான் வாங்கும் நூல்களில் அதிகமாகக் கவிதை நூல்களே இடம்பெறுகின்றன. அதிலும் குறிப்பாக புதிதாக எழுதவரும் இளைய கவிஞர்களின் கவிதை நூல்களை முன்னுரிமையோடு வாங்குவேன். அவற்றை வாசித்த பிறகு என் வாசிப்பில் எனக்குப் பிடித்த நூல்களை எழுதிய கவிஞர்களுக்கு செல்வழி என் வாழ்த்தையோ அல்லது மின்னஞ்சல்வழி சிறு விமர்சனத்தையோ எழுதிவிடுவதை இன்றளவும் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறேன்.

அப்படியான ஒரு நூலாகத்தான் 17 ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கவிதை நூலையும் நான் வாங்கி வந்தேன். எளிதான சொற்களென்றாலும் புதிய சொல் முறையில் என்னை ஈர்த்தன. காதலையும் காமத்தையும் சரியான அர்த்தத்தோடு புரிந்துகொண்டதன் வெளிப்பாடாக அமைந்த வரிகள் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தன.

நானெழுதிய கவிதை குறித்த சில கட்டுரைகளில் சில வரிகளைக் கோடிட்டுக் காட்டிப் பேசியிருக்கிறேன். சில கவிதைகளைச் சுட்டிக்காட்டி உரையாற்றியுமிருக்கிறேன். சில கவிதைகள் ஏன் பிடிப்பதில்லை என்பதைப் போலவே, சில கவிதைகள் ஏன் பிடிக்கின்றன என்பதற்கும் என்னிடம் சரியான காரணமேதுமில்லை. ஏதோவோர் கவிதையின் ஒற்றை வரி... அதுகூட வேண்டாம் ஒற்றைச் சொல்கூட போதும்; வாசகனைத் தன்னோடு ஐக்கியப்படுத்திக்கொள்ள. அப்படித்தான் இந்த ‘மனப் பறவை’ எனும்

கவிதையும் என்னைச் சுற்றியே வலம்வரத் தொடங்கியது.

'நம்மைச்

சூழ்ந்திருக்கும் பனி விலகி

நிகழ்கின்ற சந்திப்பில்

உன்னை

எதிர்கொண்டு அணைப்பதற்காகவே

தேங்கிக் கிடக்கின்ற

அந்தரங்கத்தின் முத்தம்

நீண்டதொரு கடல் பயணமொன்றில்

இளைப்பாறச்

சிறுநிலம் தேடும்

பறவையைப் போல் தவிக்கின்றது.'

(பக்கம்: 63)

இக்கவிதையின் கடைசி மூன்று வரிகளைச் சொன்னாலே போதுமென்கிற அளவுக்கு இக்கவிதை என்னுள் பொதிந்துபோனது.

இந்தக் கவிதையை எழுதிய கவிஞரைப் பிறகு பல்லாண்டுகள் கழித்துச் சந்தித்த வேளையிலும் எனது உரையாடலை இந்தக் கவிதையைச் சொல்லித்தான் தொடங்கினேன் என்பது இன்றைக்கும் என் நினைவிலிருக்கிறது.

அந்தக் கவிதை நூலின் பெயர்: நிலம் புகும் சொற்கள்

எழுதிய கவிஞர்: சக்திஜோதி

கவிஞர், கட்டுரையாளர், பேச்சாளர், விவசாயி, தொழில் முனைவோர். சமூகப் பணியாளர் எனப் பன்முகங்களோடு செயலாற்றிவரும் சக்திஜோதி, தேனி மாவட்டத்திலுள்ள அனுமந்தன்பட்டி எனும் கிராமத்தில் பாண்டியன்–சிரோன்மணி தம்பதியினரின் மகளாக 1972ஆம் ஆண்டு மார்ச் 15 அன்று பிறந்தவர். இயற்பெயர் ஜோதி; தனது இணையர் சக்திவேலின் பெயரோடு இணைந்து சக்திஜோதி ஆனார். தற்போது திண்டுக்கல் மாவட்டத்தையொட்டியுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரக் கிராமமான அய்யம்பாளையத்தில் வசித்துவருகிறார்.

தேனி மாவட்டத்திலுள்ள மணலார் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அய்யம்பாளையத்தில் ஆரம்பக் கல்வியையும், இராயப்பன்பட்டி புனித அலோசியஸ் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலைக் கல்வியையும் கற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழில் இளநிலை, முதுநிலை கல்வியைப் படித்த கவிஞர் சக்திஜோதி, 'சங்ககாலப் பெண்களின் நிலை' எனும் தலைப்பில் இளஆய்வியல் நிறைஞர் பட்டமும், 'சங்க இலக்கியத்தில் ஆண் மையக் கருத்துருவாக்கம்' எனும் தலைப்பில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கைச் சூழல் வாய்க்கப்பெற்றதும், சிறுவயது முதலே புத்தக வாசிப்பிற்குள் நுழைந்ததுமே சக்திஜோதியைக் கவிதை எழுதத் தூண்டின. பள்ளியில் படிக்கிற நாட்களில் வாசிப்போடு சேர்ந்து எழுத்து, நாடகம், நாட்டியம், ஓவியம் எனப் பலவற்றிலும் ஆர்வத்தோடு செயல்பட்டார்.

கவிஞர் சக்திஜோதி எழுதிய முதல் கவிதை தமிழ்நாடு இறையியல் கல்லூரி நடத்திய 'இறையியல் மலரில்' பிரசுரமானது. பிறகு 2007இல் வத்தலக்குண்டில் இருந்து வெளிவந்த சுப்ரமணிய சிவா, மகாகவி, இனிய நந்தவனம் ஆகிய சிற்றிதழ்களில் கவிதைகளை எழுதினார். பின்னர் உயிர் எழுத்து, காலச்சுவடு, புதுவிசை, ஆனந்த விகடன் போன்ற இதழ்களிலும் கவிதைகள் வெளிவரத் தொடங்கின. 2008ஆம் ஆண்டு ஜூலையில்தான் இவரது முதல் கவிதை நூல் 'நிலம் புகும் சொற்கள்' உயிர் எழுத்து வெளியீடாக வந்தது.

'இந்த நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு ஆகிய அனைத்தும் பெண்ணின் வடிவங்கள்தாம். இவைகளில் எது இருக்கிறதோ

அது என் கவிதைகளில் இருக்கிறது.

காமம் இன்றிக் காதல் எவ்வாறு இல்லையோ அவ்வாறு குடும்பம், உறவுகள் இன்றிச் சமூகம் இல்லை. இந்த வரம்பிற்குள் இருந்துதான் வெள்ளிவீதியாரும், ஆண்டாளும் பாடினார்கள். அவர்களைப் பின்பற்றிச் செல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை' என்று நூலின் என்னுரையில் எழுதியிருக்கும் கவிஞர் சக்திஜோதி, தன் கவிதைகள் குறித்தும், தனது கவிதைக்கான பயணம் எதை நோக்கியது என்பது குறித்தும் தெளிவும் புரிதலும் உடையவராகத் தன் முதல் நூலிலேயே அறியப்பட்டார். நூலின் முதல் கவிதை 'முத்தங்களின் இரகசியங்கள்.'

'என்னை முத்தமிடுகையில்
உனது பிரச்சினை
என்னவென்பது
எப்பொழுதும் புரியவில்லை
உனக்கான
முத்தத்தில்
புதைந்திருக்கும் பிரியங்களின்
இரகசியங்கள்
நீ அறிந்துகொள்ள
முயல்வதேயில்லை
என் இதழ்கள்
உன்னைத் தீண்டுகையில்
என் தந்தை
என் சகோதரன்
என் நண்பன் ஆகியோரின்
அன்பையும்
உன்னிடமே சேர்க்கிறேன்
இதழ்களால்
என்மீது செலுத்தும்
உனதன்பு
வெறும் முயங்குதலில்
முடிந்து போகின்ற பொழுது
எஞ்சுகின்ற தனிமையில்
புரிந்து கொள்வதற்கு
என்னிடம்
எதுவும் இல்லை எப்பொழுதும்.'

தமிழ்க்கவிதையெனும் பெருவெளியில் மிகவும் சன்னமாக மட்டுமே ஒலித்துக்கொண்டிருந்த பெண்கவிகளின் குரல், இருபத்தியோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதிய பார்வையோடும், புதிய உத்வேகத்தோடும், பொதுவெளியில் பேசத்தயங்கியவற்றை எல்லாம் பேசத்துணிந்த பக்குவத்தோடும் கவிதைகளாக வெளிவரத் தொடங்கின. அப்படியான குரல்களில் கவனிக்கத்தக்க குரலுக்குச் சொந்தக்காரரானார் கவிஞர் சக்திஜோதி.

'இக்கவிதைகள் முழுக்க அகம் சார்ந்த கவிதைகள். ஒரு மேம்போக்கான அர்த்தத்தில் இவைகள் காதல் கவிதைகள் எனும் பொருள் பெறக்கூடும். எனினும் அத்தளத்தினும் ஆழமானவை இக்கவிதைகள். பெண் ஆண் உறவில் உளவாகும் அகம் மற்றும் அது சார்ந்த நுணுக்கங்கள் கூடிய கூற்றுகளால் வடிவமைக்கப்பட்டவை இவை' என்று முன்னுரையில் மிகச் சரியானதொரு மதிப்பீட்டினை வழங்கியுள்ளார் எழுத்தாளர் பிரபஞ்சன்.

தன் பக்கத்து வீட்டிலிருக்கும் பெண் தோழியொருத்தி, நம் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு நடப்பது போலொரு தோழமையும், இயற்கையையும், நம் மண்ணையும், செடி, கொடி, பூக்களையும் பாடும் கவிஞர் சக்திஜோதியின் கவிதைகள் பலராலும் விரும்பிப் படிக்கப்பட்டன. 'இலக்கு' எனும் கவிதையொன்று;

'அவன்
அங்கு
சென்றடைய இயலாமல்
திரும்புகையில்




பயணம் துவங்கி

புள்ளி

மறைந்து போக

தொலைந்துபோன

திசை தேடி

காற்றின் துகள்களாய்

அலைகிறான்

அன்பைத் துறந்த உடலோடு.'

அன்பைத் தேடியலைகிற / அன்புக்காகவே எல்லாவற்றையும் தொலைக்கிற வாழ்க்கைதானே எல்லோருக்குமிங்கே வாய்த்திருக்கிறது. கொட்டிக்கிடக்கிற அன்பின் குவியலில் தனக்கான அன்பெது எனும் தேடலில்தான் மனிதர்கள் பல நேரங்களில் தொலைந்தே போகிறார்கள். கவிஞர் சக்திஜோதியின் கவிதைகளில் நமக்கான அன்பு பெருவெள்ளமெனப் பெருக்கெடுத்து ஓடுவதைக் காண முடிகிறது.

தனக்கான கவிதையின் ஊற்றுக்கண் திறந்ததுபோல், முதல் நூலைத் தொடர்ந்து அடுத்தடுத்து கவிதை நூல்களைத் தந்துகொண்டேயிருந்தார் கவிஞர் சக்திஜோதி. கடலோடு இசைத்தல், எனக்கான ஆகாயம், காற்றில் மிதக்கும் நீலம், தீ உறங்கும் காடு, சொல் எனும் தானியம், பறவை தினங்களைப் பரிசளிப்பவள், மீன் நிறத்திலொரு முத்தம், இப்பொழுது வளர்ந்து விட்டாள், மூங்கிலரிசி வெடிக்கும் பருவம், வெள்ளிவீதி, கனவின் முற்றத்தில் தரையிறங்கும் தாரகைகள், சொல்லினும் நல்லாள், உப்பின் ரகசியம் என 16 ஆண்டுகளில் 14 கவிதை நூல்களை எழுதிய பெருமை கவிஞர் சக்திஜோதிக்கே உரியது.

ஒவ்வொரு கவிதை நூலிலும் தனக்கான கவிதைப் பரப்பினைத் தனியான மொழிகொண்டு விரித்துக்கொண்டே சென்றார். இக்கவிதைகள் மனசுக்கு மிக நெருக்கமாகவும் பாந்தமாகவும் அமைந்துவிட்ட பரவசம் எல்லாக் கவிதைகளிலுமே வாசகனுக்குக் கிட்டிவிடுகின்றன.

'சந்திக்கவேயில்லை

கனவிலும் அல்லது கற்பனையிலும்

ஒப்பந்தம் ஏதுமின்றி

இருப்பினும்

இந்தக் குளிர்படர்ந்த நாட்களின்

அந்தியில்

எவ்விதமாயும் நிகழ்த்தப்படாத

சந்திப்புகளின் துயரங்கள்

தன்னை உணர்த்திக்கொண்டிருந்தன

தனித்திருக்கையில்.' (கடலோடு இசைத்தல் பக்கம்: 37)

'தனிமையின் ஆசை' எனும் இக்கவிதையை வாசிக்கையில், நம் எல்லோரின் தனிமையும் ஒரே புள்ளியில் குவிந்திருப்பதான மனக்கிளர்ச்சி உண்டாவதைத் தவிர்க்க முடியவில்லை.

உடலும் மனமும் வேறு வேறானவை என்றாலும் இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பிலுள்ளவை என்பதைத்தான் மனவியலாளர்கள் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். இதை நம் மனம் ஏற்றுக்கொள்கிறது சில நேரங்களில். உடலும் ஏற்றுக்கொள்கிறது

சில நேரங்களில். என்றாலும் இதிலும்கூட ஆண் உடல் X பெண் உடல், ஆண் மனம் X பெண் மனம் என இருவேறு துருவங்களும் எப்போதுதான் ஒன்றாக இணையுமோ..? இரண்டும் ஒன்றேயெனும் புரிதல் உண்டாக இன்னும் பல நூறு கோடி ஆண்டுகள் ஆகலாம். காத்திருப்பதைத் தவிர வேறென்ன செய்ய..? இதனை 'நேசிப்பில் மிதக்கும் மனம்' எனும் கவிதையில் வெகு லாவகமாகப் பதிவுசெய்துள்ளார் கவிஞர் சக்திஜோதி.

'கனவுகளுக்குள்
பயணப்படுகிற இவளுக்கு
நினைவுகள் இருக்கும் உடலை
மிதக்க அனுமதிக்கும்படியான மனம்
என்பதால்
காயப்படுத்தியவரிடம் கைகுலுக்க
இன்னொருவரை மன்னிக்க
தனிமையில் இருக்கும் ஒருவரை முத்தமிட
இதுவரை சந்தித்தே இராத
யாரோ ஒருவரை நேசிக்கவென
இவளின் பிரியம்
விகசிக்கிறது
ஏனெனில்
எவ்வளவு வெறுக்கப்பட்டேனோ
அதைவிட அதிகமாய் நேசிப்பை வழங்க
விருப்பம் கொண்டிருக்கிறேன்.' (மீன் நிறத்திலொரு முத்தம், பக்கம்:66)

'உங்கள் கவிதைகளின் மீதான நேசிப்பை வழங்கவே நாங்களும் விருப்பம் கொண்டு காத்திருக்கிறோம்' என உரத்த குரலெழுப்பிச் சொல்ல வேண்டும் போலுள்ளது.

'ஒரு பெண்ணாக வாழ்வது என்பது அத்தனை எளிதில்லை. இது என்னுடைய வாழ்வின் நகர்தலில் இருந்து எனக்குப் புரிகிறது. என் வயதொத்த பெண்களிடமிருந்தும் என்னிலும் அனுபவம் முதிர்ந்த பெண்களிடமிருந்தும் மேலும் புரிந்துகொள்கிறேன். இந்தப் புரிதலின் மூலம் கடினமாக இருக்கும் வாழ்வைச் சற்றேனும் மென்மையாக்க முயலுகிறேன்' எனும் என்னுரையோடு தொடங்கும் 'இப்பொழுது வளர்ந்துவிட்டாள்' கவிதை நூல் கவிஞர் சக்திஜோதியின் குறிப்பிடத்தக்க நூலென்றாலும், எனக்கு மிகவும் பிடித்தமான நூலென்று 'மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்' நூலைத்தான் சொல்வேன். இந்த நூலின் பல கவிதைகள் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுபவை. அதிலொரு கவிதை;

'துகிலென வாசனையையே
உடுத்தியிருக்கும் ஒருத்தியை
இரவுகள் துரத்துகின்றன
அவிழும் புதிர்களை
விரும்புகிற அவளுக்கு
புதிர்கள் அற்ற இரவுகள்
வெறுமையானவை
உடல் திறக்கும் அகிலின் வாசனையும்
மனம் விரும்பும் விடையொன்றுமாக
புதிய இரவொன்றை
கடந்து கொண்டிருக்கிறாள்.'

எவ்வளவு பெரிய உண்மையை அடர்த்தியான அர்த்தச் செறிவோடு பேசுகிறது இக்கவிதை. வாழ்க்கையைக் கடக்க முடியாமல் தானே ஒவ்வொருவரும் புதிய இரவொன்றினைக் கடந்துகொண்டிருக்கிறோம்.

கவிஞர் சக்திஜோதி கவிதைகளை மட்டுமல்லாது சங்கப் பாடல்கள், நவீன இலக்கியம், நீர் மேலாண்மை, கல்வி, சுற்றுச்சூழல், விவசாயம் சார்ந்து பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சங்க காலப் பெண்பாற் புலவர்களைப் பற்றி குங்குமம் 'தோழி' இதழில் தொடராக எழுதிய கட்டுரைகள் 'சங்கப் பெண் கவிதை' எனும் நூலாகவும், 'காமதேனு' இணைய இதழில் வாரந்தோறும் எழுதிய கட்டுரைகள் 'ஆண் நன்று பெண் இனிது' எனும் நூலாகவும்

வெளிவந்துள்ளன.

மேலும் அய்யம்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு நிலம், நீர் போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் செயல்படும் 'ஸ்ரீ சக்தி சமூக பொருளாதாரக் கல்வி நலன் அறக்கட்டளை' எனும் அறக்கட்டளை ஒன்றினைத் தொடங்கி, சிறப்பாகச் செயல்பட்டுவருகிறார். இந்திய அரசின் தேசிய விளையாட்டு மற்றும் இளைஞர் அமைச்சகத்தின் மூலம், தமிழ்நாட்டின் சிறந்த சமூக சேவகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய சீனா நல்லுறவு தூதுக் குழுவில் தமிழகத்தின் சார்பாகச் சீனாவிற்குச் சென்று வந்துள்ளார்.

தனது கவிதைகளுக்காகச் சிற்பி அறக்கட்டளை விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க விருதினையும் பெற்றுள்ளார். திருச்சி பாரதிதாசன், மதுரை காமராசர்



பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பாடத்திட்டங்களில் இவருடைய கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இயற்கை, பெண்ணுடல் இரண்டையும் தன் கவிதைகளின் குவியிடமாக்கிக் கவிதைகளை எழுதிவரும் கவிஞர் சக்திஜோதியின் கவிதைகளில் கதைக்கான கூறுகள் மிகக் குறைவாகவே காணக் கிடைக்கின்றன. அப்படியாகக் கிடைக்கப்பெற்ற கவிதைகளுள் ஒன்றே தலைப்பில்லாத இந்த '48' எனும் வரிசை எண்ணிடப்பட்ட கவிதை. 'பறவை தினங்களைப் பரிசளிப்பவள்' எனும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை.. இதோ;

'பிரியமான கதைகள் நிறைந்த இரவுகள்
எனக்கும் மருதாவுக்கும் வாய்த்தன
மருதா ஓயாமல் சலசலப்பாள்
அவளிடமிருந்தே பேசக் கற்றுக்கொண்டேன்
சிலபோது சத்தமாக
சிலபோது சன்னமாக
எப்போதும் உற்சாகமாக
அவள் தரையில் சிறுவீடு கட்டி
விளையாடியிருக்கிறேன்
எங்களின் சொற்களில்
கல்விளக்குகள் அசைந்தெரியும்
நிலவொளி ஓவியமாகும்
நான்கு மாடுகளின் ஒற்றுமை
நரியின் தந்திரத்தில் சிதறிப்போன
கதையில் துவங்கி
புராண இதிகாசம் வரையில்
இராமலிங்க நாடாவி மாமாவும்
செல்லையா செட்டியார் தாத்தாவும்
சுந்தரம் பிள்ளை பெரியப்பாவும்
சொல்லி வைக்க
அந்தந்த வீட்டிலேயே உறங்கிப்போன
நாட்களுமுண்டு
இன்று மருதாவும் வற்றிவிட்டாள்
என் மகள் என் வீட்டிலேயே தனித்துறங்குகிறாள்
தொலைக்காட்சியின் பொம்மைக் கதைகளோடு.' (பக்கம்: 50)

தமிழ்க் கவிதைக்குப் புதிய சக்தியையும், இருள் வனத்தின் நெடிய பயணத்தில் சற்றே ஜோதியாகவும் ஒளிரும் கவிதைகளைப் படைத்தளித்திருக்கும் கவிஞர் சக்திஜோதி, இன்னும் பல உயரங்களைத் தொடுவார் என்கிற நம்பிக்கையோடு வரவேற்போம்.

– இன்னும் வரும்.

ஆண்டன் பெனி



# பெயர்கள் பற்றி ஒரு வீரபாண்டிய கட்டப் பஞ்சாயத்து

பத்துப் பதினைந்து பிள்ளைகள் பிறந்த காலத்தில் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கிறது பெரிய விசயமா இருந்ததில்லை. தகப்பன், தாய், தகப்பன் வழி தாத்தா/பாட்டி, தாய் வழி தாத்தா/பாட்டி, தாய் மாமன் இப்படி பெயர் வைக்கிற உரிமையை எல்லோருக்கும் தர முடிஞ்சது. ஆனா எண்ணிக்கை குறைய ஆரம்பித்த பிறகு சூழ்நிலை அப்படியில்லை. ஒரே குழந்தைக்கு ஆளாளுக்குப் பெயர் வைத்து, அந்தக் குழந்தையே 'நம்ம பேரு என்னவா இருக்கும்?'னு குழப்பத்தில் வாழ்ற நிலமைக்கு ஆளாக்கிட்டாங்க.

'இது குலசாமிக்கு நேந்துக்கிட்ட பேரு, இது பள்ளிக்கூடத்துக்கு வச்ச பேரு, இது வீட்ல கூப்படுற பேரு'. இப்படி ஒருத்தருக்கே ஆறேழு பேரு வைக்கிறது.. வீட்டுக்கொரு காதல் என இந்தச் சமூகம் முன்னேறிட்ட பிறகும் கூட குறையவில்லை. ஏதாவது ஒரு பேரைச் சொல்லி 'இத யாரு வச்சா?'ன்னு கேட்டா, அதைக் கண்டு பிடிச்சுத் தாங்க அங்கிள்னு அந்தக் குழந்தையே காவல் நிலையத்துக்கு வந்து புகார் கொடுத்து FIR போடக் கெஞ்சும் சூழ்நிலைதான் இன்னைக்கும்.

'சில நேரங்கள்ல ஸ்கூல்ல போயி குலசாமி பேரையும், கோயில்ல போயி வீட்டுப் பேரையும் சொல்லிடுவோம்'னு கவலையாவும் இல்லாம பெருமையாவும் இல்லாம, நடுவால நின்னு ஒரு ஸ்டேட்மெண்ட் விடுறாங்க. அதனாலயே கடவுள்கள் தங்களது டியூட்டியைச் சரியா செய்ய முடியுறதில்ல.

நேத்துக்கூட ஒரு கடவுள், பெயர் சொல்ல விரும்பல, ரொம்ப விசனப்பட்டு இதுக்காக அழுதாப்டி.. 'இல்லனா அப்படியே வரம் தந்து கிளிச்சிடுவீராக்கும்'ன்னு அவரைத் திட்டி அனுப்பினேன். வேற வழி? கடவுளுங்க மேல இருக்கிற கோவத்தை வேற எப்படி தீர்த்துக்கிறதாம்?

சரி விசயத்துக்கு வருவோம். சமீபத்துல சந்திச்ச ஒரு மனைவி கேரக்டர் இப்படிச் சொன்னது.. 'மாமனாரு / மாமியார் பேரும் இருக்கிற மாதிரி குழந்தைக்குப் பேரு வச்சிட்டாரு. அதனால, அவங்கள திட்ட நெனைக்கும் போதெல்லாம் குழந்தையோட பேரு கூடவே, சனியனே நாயே சேர்த்துக்குவேன், சந்தோசமா இருக்கும். புருசன் மேல இருக்கிற கோவத்தையும் பெருசுங்க மேல இருக்கிற கோவத்தையும் காட்டணுமில்ல? எங்க அப்பா / அம்மா பேரை வச்சிருந்தா இதுங்க இப்படியா வளர்ந்திருக்கும்?' அது மட்டுமில்ல இதுமாதிரி வேறு சில குடும்ப வன்மக் குடோன்கள்

பேசுறதயும் கேட்டிருக்கேன். அதுக்காகவே அந்த சைடுல ஒரு பேரு, இந்த சைடுல ஒரு பேருன்னு ஹைவேஸ் கல்லுல நம்பர் போட்ட மாதிரி பேரு வைக்கிறது குழந்தைகளுக்கு எதிரான வன்முறையில கொண்டு வரணும்.

மாண்புமிகு மனைவியா பதவியில இருக்கிற சீனியர் ஒருத்தங்க சொன்னாங்க, "வேகவேகமா மகளுக்குப் பேரு வைக்கும்போதே தெரியும்.. இது அவரோட எக்ஸ் பேருன்னு. நான் அந்தப் பேர சொல்றதில்லையே. அவரும் புள்ள பாசத்துல எங்க கூப்பிடுறாரு.. அந்த சிறுக்கி மவளை நினைச்சிதான் எல்லாமே". BP மெஷினே உடைஞ்சி போற டென்சன்ல சொன்னாங்க என்பதைவிட கத்தினாங்க என்றே சொல்லலாம்.

இந்த ஆண்கள் முதல் குழந்தையா ஏன் பெண் குழந்தை வேணும்னு ஆசைப்படுறாங்கன்னு அப்பதான் புரிஞ்சிக்கிட்டேன். உடனே அந்த மகராசி என்னையப் பார்த்து "நீங்க எப்படிணே?"னு திருப்பிக் கேட்டது.

'பத்துப் பொம்பள புள்ள பெத்தாலும், அது தீராது தாயே'ன்னு எஸ்கேப் ஆகிட்டேன். நம்மளோட ஒன்சைடு / லெப்ட் சைடு / ரைட் சைடு / பேக் சைடு / ப்ரெண்ட் சைடுன்னு, இருந்த அத்தனை லவ்வுக்கும் பேரு வைக்க எத்தனை பொம்பளப் புள்ளைய பெத்துக்கிறதுனா, அது ஆகுற காரியமில்ல. அதுமட்டுமில்லாம நம்ம மனசு வேற பிஞ்சு மனது, மகளைப் பெயர் சொல்லி அழைக்கும்போதெல்லாம், அவள்களின் நினைவுகள் ஊற்றெடுத்து, அதன் மூலமாக கவிதைகள் உட்பட இன்ன பிற இலக்கியங்களும் பொங்கி வந்தால், இந்த இலக்கியச் சமூகம் பாரம் தாங்காமல் சரிந்துவிழும் ஆபத்தும் இருக்கிறது.

குழந்தை பிறக்கும் முன்னே பெயர் வைக்கும் விளையாட்டுகள் வினையாகி, விவாகரத்து வரைக்கும் போன வரலாறுகளும் இங்கே உண்டு. தவிரவும், குழந்தை பிறந்த பிறகு பெயர் வைக்கும் சிக்கல் அதிகமாகி, இன்னமும் தாய் வீட்டிலேயே இருக்கும் தாய்மார்களையும் தெரியும். இதைவிட பிரம்மாதமா ஒரு விசயம் இருக்கு... ஆளுக்கொரு பெயர் வைத்து, இரண்டையும் சேர்த்து வால் போஸ்டர் அடிக்கும் அளவுக்கு நீண்டு, ஸ்கூல்ல சேர்க்கும்போது ஹெட்மாஸ்டரே குழந்தைக்குப் பேரு வச்சதா, பிரெண்டு சொன்னான். சில நேரங்கள்ல செல்லப் பெயர்களே பொதுவாகிப்போன நிகழ்வுகளும் தெரியும்.

நிம்மி / அம்மு / பட்டு / சிட்டு / பேபி / பப்பி / விக்கி / பப்பு / சீனு / வெங்கி / மினி எனச் செல்லப் பெயர்களைக் கேட்டுவிட்டு, வீட்டுச் செல்லப் பிராணிகள் "கூப்புட்டீங்களா எசமான்" என்று வர, நல்ல வேளை கூகுள் ஆண்டவர் அதுங்களுக்குப் பெயர் வைக்கவே நாலஞ்சி வெப் சைட்டுகளைத் தொடங்கிச் சமாதானப்படுத்தியிருக்கு. அப்படியே இலக்கியம் பக்கம் போனால், அப்பன் / ஆத்தா வெச்ச அத்தனை பேர்களும் பத்தாம, தாசனில் தொடங்கி பிரியா வழியாக சித்தன் வரைக்கும் போய்... ஸ்ஸப்பா... முடியல. எனக்கு மட்டும் ஒரு நல்ல புனைபெயர் கிடைச்சிருந்தா இலக்கியத்துல 'தென்னாட்டின் தஸ்காவெஸ்கி'யா ஆகியிருப்பேன். நல்லவேளை அப்படியொரு அசம்பாவிதம் எதுவும் நடக்கல.

மரபு, குல தெய்வப் பெயர்கள் எல்லாவற்றையும் தவிர்த்து இப்போது சமூகம் வடமொழிக்குப் போய்விட்டது. இதனால் ஒரு லாபம் மட்டும் நிச்சயமாக இருக்கிறது. பெயரை வைத்து ஏரியா பிரிக்க முடியவில்லை, சாதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதுக்குத் தனியே மெனக்கெட வேண்டியிருக்கு. கருப்பசாமினு பேர் வச்சாக்கூட 'கருப்பு'னும், முத்துசாமினு வச்சா 'முத்து'னும், அவனுங்கள 'சாமி'னு எப்படி நம்ம வாயால கூப்பிடன்னு சொன்னவங்க வாய் அழுக்கை நீக்க வடமொழிப் பெயர்கள் டூத் பேஸ்ட்டாக இருப்பதில் மகிழ்ச்சியே. •

குமார் அம்பாயிரம்

# காலம்

கிழவியிடம் ஒய்வில்
வாராண்டாவின்
வெளியில் இருத்திய
ஒற்றைக் குச்சி
கட்டிக் கூட்டாக இருந்தால் துடைப்பம்
தனியே அது குச்சி
பாட்டியும் தனியே
அவள் கைகளில் சுழலும் தனிக்குச்சி
போர் ஆயுதம் துல்லிய தாக்குதல்
காலங்களுக்கு முன்பாக
அக்காள்கள்
நாத்திகள் முன்பு சுருண்டு மல்லாக்க விழும் ஈக்கள்
அடிக்குப் பயந்து
முற்றத்திற்கு வராமல் அரண்டு ஓடும்
கிளம்பி வரும் எறும்புகள்
பாட்டியின் ஏமாற்றத்தை
வானம் எறும்புகள் கத்தரித்து காற்றில்
விருப்பங்கள் போல
ஈயின் சிறகுகளைக் கத்தரித்து
காற்றுள்ளபோதே தூற்றிவிட்டு உடலின்
மாமிசத்தைச் சுமந்து செல்கின்றன
பாட்டியின் வானத்தை
குறுக்காய்க் குறுக்காய்க் கிழிக்கும் ஒளியை
பறக்கும் தவளை தவ்வித் தவ்விப் பார்க்கிறது
காலத்தைச் சப்புக் கொட்ட....




படைப்பு
சமூகத்தின் இணைப்பு
சிறைவாசிகளுக்கு
புத்தக தானம் செய்வீர்...!
#ஒரு_நூல்_புரட்சி
"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரிய
எண்ணத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை
நூலகங்களுக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு
நூல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறது
இலக்கிய படைப்பு குழுமம்."
புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
இலக்கிய படைப்பு குழுமம்
#03, அஜந்தா டவர், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024.
Ph : +91 73388 97788
padaippu
www.padaippu.com
admin@padaippu.com